# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

நவம்பர் - டிசம்பர் 2009

விலை ரூ.20/-










**2007 ஆம் ஆண்டிற்கான கலைமாமணி விருதுகள் வழங்கும் விழா (28.11.2009)**





# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2040

ஐப்பசி - கார்த்திகை - மார்கழி

நவம்பர்-டிசம்பர் 2009

மலர் : 41 இதழ் : 5 & 6



**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

திரு. **சி.காமராஜ்,** இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**க. குமாரவேலு**
**ச. ஜெயலலிதா**
**இரா.சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்**
**டி. கலைச்செல்வன்**
**வ. பாலசுப்பிரமணியன்**

நிருபர்கள்

**கோ. சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ. ஜெயசிம்ஹன்**

புகைப்படக்காரர்

**வி.இராதாகிருஷ்ணன்**

கணினி வடிவமைப்பு

**அ. மதன்.** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர். பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)



சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
110,அண்ணாசாலை, சென்னை-600 002.

தொலைபேசி : 28520407/28520408
நிகரி : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in




**எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே**
**செய்தற் கரிய செயல்**

கிடைப்பதற்கு அரிய காலம் வாய்க்கும்போது அதைப் பயன்படுத்திக்கொண்டு அப்போதே செயற்கரிய செய்து முடிக்க வேண்டும்.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

## இந்த இதழில்...


மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் உரை

- நவீனத் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து வேளாண் உற்பத்தித் திறனைப் பெருக்கிட விவசாயிகளைப் பயிற்றுவித்து விஞ்ஞானிகள் ஊக்குவிக்க வேண்டும் ........ 2
- திரைப்படத் தொழிலுக்கு தமிழக அரசு பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது ........ 7
- ஆற்றலால் - அறிவால் கலையை உயர்த்திடும் கலைஞர்களுக்கு நன்றிக் கடமையாக வழங்கப்படுவதே கலைமாமணி விருது ........ 10
- தமிழை யாரும் அழிக்க முடியாது ........ 22
- பொதுமக்கள் அனைவரும் சாலைப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஒத்துழைக்க வேண்டும் ........ 31
- சுற்றுலாவின் மூலமாக பொருளாதார வளத்தைப் பெருக்க முடியும் ........ 41
- ஆயுதங்களைவிட புத்தகங்களுக்கே சிறப்பும் பெருமையும் தரப்படுகிறது .. 46
- பாரி மகளிர் பாடிய செய்யுள் - சங்கத்தமிழ் ........ 52

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் உரை

- கலைஞர் அரசின் திட்டங்களுக்கெல்லாம் மகுடமாகத் திகழ்கிறது கலைஞர் காப்பீட்டுத் திட்டம் ........ 60
- ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் 2012க்குள் நிறைவேற்றப்படும் ........ 66
- சுயஉதவிக் குழுவினர் உடனுக்குடன் கடனைத் திருப்பிச் செலுத்துவதால் தமிழகத்தில் வங்கிகள் போட்டி போட்டுக் கொண்டு கடன் தருகின்றன ....... 68
- எல்லோரும் ஓரினம் என்பதை எடுத்துக்காட்ட சமத்துவபுரங்கள் திறக்கப்படுகின்றன ........ 74
- பெண்களின் வளர்ச்சிதான் இந்த நாட்டின் வளர்ச்சி ........ 78
- தியாகத்தை - உழைப்பை மதித்து, கட்சி பேதமின்றி - பொதுவுடைமைவாதி சீனிவாசராவ் நினைவு மண்டபம் கட்ட உத்தரவிட்டவர் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ........ 83


### அட்டைப்பட விளக்கம்

முதலாம் அட்டை : தமிழ்நாடு அரசின் திரைப்பட விருதுகள் வழங்கும் விழா (8-12-2009)

நான்காம் அட்டை : சென்னையில் 18-11-2009 அன்று நடைபெற்ற ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு வர்த்தக மாநாட்டை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்.

# நவீனத் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து வேளாண் உற்பத்தித் திறனைப் பெருக்கிட விவசாயிகளைப் பயிற்றுவித்து விஞ்ஞானிகள் ஊக்குவிக்க வேண்டும்!

கோவையில் 6.11.2009 அன்று, நான்காவது தேசிய வேளாண் அறிவியல் மாநாட்டைத் தொடங்கிவைத்து மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.

**வே**ளாண் அறிவியல் மையங்களின் நான்காவது தேசிய மாநாட்டின் துவக்க விழாவிற்கு தலைமை வகிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மாநாட்டில் இந்தியா முழுவதிலுமிருந்து 569 வேளாண் அறிவியல் மையங்களின் விஞ்ஞானிகள் கலந்து கொள்கின்றனர். வேளாண் தொழில்நுட்பக் கண்காட்சியையும்,




இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் ஆகியவை இந்த மாநாட்டை மூன்று நாட்களுக்கு நடத்துகின்றன. இந்த இந்த மாநாட்டையும் மத்திய வேளாண்மை மற்றும் நுகர்வோர் விவகாரத்துறை, உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் சரத்பவார் துவக்கி வைத்ததில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

### தொழில்துறை – சேவைத்துறை

என்னுடைய உடல் நிலை நீண்ட தூரப் பயணத்திற்கு அனுமதிக்காத போதும், சரத்பவார் அவர்கள் எனக்குத் தனிப்பட்ட முறையில் அன்பான அழைப்பு விடுத்ததால் நான் சென்னையிலிருந்து இங்கு வந்திருக்கிறேன். சரத்பவார் அவர்களுடன் எனக்குள்ள நீண்டகாலத் தொடர்பை நான் மிகவும் போற்றுகிறேன். தமிழக மக்கள் சார்பில் அவரை நான் அன்புடன் வரவேற்கிறேன். தற்போது அவர் மும்பையில் இருக்க வேண்டியது மிகவும் அவசியம் என்ற போதிலும், தமிழர்கள் மீது அவருக்குள்ள பாசம் காரணமாக அவர் இங்கு வந்துள்ளார். நமது நாட்டில் வேளாண்மை வளர்ச்சிக்கு அவரது பங்களிப்பு குறித்து இங்குள்ளவர்களுக்குத் தெரியும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். தேவைப்படும் போதெல்லாம் அவர் தமிழ்நாட்டிற்கு உதவிக்கரம் நீட்டியுள்ளார். அதற்காக நான் அவருக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

தொடக்கத்தில், தமிழ்நாடு – நாட்டில் சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியிலும் மிக முற்போக்கான மாநிலமாகத் தொடர்ந்து முன்னேறி வருகிறது என்பதை நான் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

நாடு விடுதலை அடைந்த போது விவசாயப் பொருளாதாரமாக இருந்த இந்த மாநிலம் தற்போது தொழில் துறை மற்றும் சேவைத் துறைகள் ஆகியவற்றால் உந்தப்பட்ட நவீன பொருளாதாரமாக இருக்கிறது.

### வேளாண்மை பற்றி திருவள்ளுவர்

நினைவில் நிற்கக்கூடிய இந்த தேசிய மாநாட்டில், எங்களது மாபெரும் புலவர் திருவள்ளுவர் வேளாண்மை குறித்து ஏராளமான சிந்தனைகளைப் பதிவு செய்துள்ளார் என்பதைக் கூறுவதில் நான் பெருமை கொள்கிறேன்.

வேளாண் மேலாண்மை குறித்து குறிப்பிடத்தக்க அம்சங்களை திருவள்ளுவர் ஒரே ஒரு குறளில் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளது, 2,000 ஆண்டுகளுக்கு முன்பே மனித நாகரீகத்தில் வேளாண்மையின் முக்கியத்துவம் விளங்குகிறது.

"ஏரினும் நன்றால் எருஇடுதல்; கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு"

**அதன் பொருள் :** வேளாண்மையில் உரம் இடுதல் உழுவதைக் காட்டிலும் முக்கியமானது; களை எடுத்தல், பாசனம் ஆகியவை மேலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை; ஆனால் பயிர்ப் பாதுகாப்பு மிக மிக முக்கியமானது. சுருங்கக்கூறின், அவருடைய வார்த்தைகள் இன்னமும் வேளாண்மைக்கு இட்டுச் செல்கின்றன.

### வேளாண்மை வளர்ச்சி

தமிழ்நாட்டில் வேளாண் அறிவியல் மையங்களின் நான்காவது தேசிய மாநாட்டை நடத்தும் வாய்ப்புக் கிடைத்ததில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

வேளாண்மை மேம்பாட்டில் தமிழ்நாடு முன்னோடி மாநிலங்களில் ஒன்று என்பதால் இந்த மாநிலம் இந்த மாநாட்டை நடத்த சரியான இடம் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

வேளாண்மை வளர்ச்சியில் தமிழ்நாடு ஒளிரும் உதாரணங்களில் ஒன்றாகத்


உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜூன் 23-27




திகழ்கிறது என்றால், அதற்கு விவசாயிகளின் ஈடுபாடும், ஓய்விலா முயற்சிகளுமே காரணமாகும். வேளாண்மையில் அவர்களது வெற்றிக்கு மாநிலத்தை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்ற அரசின் கொள்கைகள் காரணம் என்று கூறினால் அது சரியானதாகும்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் ஆகிய மூன்று கடமைகளிலும் சிறந்து விளங்குகிறது. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்ச்சியில், கடந்த நாற்பது ஆண்டுகளாக இந்தப் பல்கலைக் கழகத்துடன் தொடர்புடைய விஞ்ஞானிகள், ஊழியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகளைப் பதிவு செய்ய விழைகிறேன்.

**வேளாண் அறிவியல் மையங்கள்**

அப்போதைய முதல்வரும் எனது நீண்ட கால நண்பருமான குர்ணாம் சிங் அவர்களின் அழைப்பின் பேரில், 1969ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஒரு மிகப் பெரிய கட்டடத்தைத் திறந்து வைப்பதற்காக நான் பஞ்சாப் வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. கோவையில் இந்த வேளாண் பல்கலைக்கழகத்தைத் தொடங்க எனக்குப் பிரதான காரணமாக இருந்தது அந்த நிகழ்வு தான்.

வேளாண் அறிவியல் மையங்களின் பிரதான குறிக்கோள்கள், விவசாயிகளின் சமூகப் பொருளாதார நிலைமையை மேம்படுத்தும் வகையில், விவசாய உற்பத்தியைப் பெருக்குதல், நல்ல விலையும், வருமானமும் கிடைக்கும் வகையில் விளைபொருட்களின் தரங்களை மேம்படுத்துதல் ஆகியவையாகும். இந்தக் குறிக்கோள்களை அடைய அந்தந்த ஊர்களிலேயே களப்பணி செய்து காட்டுவதன் மூலமும், வயலிலேயே செய்து காட்டுதல், கண்காட்சிகள், விவசாயிகளின் மாநாடுகள், தீவிர சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி, பயிற்சிப் பயணங்கள் போன்றவை மூலம் விவசாயிகளுக்கு அறிவூட்டப்படுகிறது.

**விவசாயிகளின் முன்னேற்றம்**

ஒரு தேசத்தின் இருப்பும், நலனும் அதன் இயற்கை வளங்களை நீடித்து வளர்த் தெடுப்பதில் உள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். தற்போதுள்ள வளங்களையும், நிலங்களையும் தற்போதைய மற்றும் வருங் காலச் சந்ததியினரின் சமூக, பொருளாதார,

கலாச்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நிருவகிக்க வேண்டும்.

இந்த இடத்தில்தான் அரசின் கொள்கைகளை நடைமுறைக்கு உகந்தவாறு மாற்றுவதில் விஞ்ஞானிகள் முக்கியமான பாத்திரம் வகிக்கிறார்கள். வேளாண் அறிவியல் மையங்களின் தொடர்ந்த வளர்ச்சி புதிதாக உருவாக்கப்பட்ட தொழில் நுட்பங்களை கிராமப்புற மக்களுக்கு மாற்றுவதற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானிகள் 'உழுது உழைக்கும் இந்த மண்ணின் மைந்தர்'களோடு நேரடித் தொடர்பு உடையவர்கள் என்பதால், வேளாண்மையை மேம்படுத்த அனைத்து வழிகளையும் அவர்கள் ஆய்வு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளின் பொருளாதார சமூக நிலைமைகளில் மென்மேலும் முன்னேற்றம் காண விஞ்ஞானிகள் ஏணிகளாகப் பணியாற்ற வேண்டும்.

### தீவிர வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம்

1967ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா முதல்வராக இருந்த போது, பாசனத்தைப் பெருக்க காவிரி டெல்டா மற்றும் இதர மாவட்டங்களில் திறந்த மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் உருவாக்கப்பட்டன. உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு வானம் பார்த்த பயிர்களுக்கு நிலவரி ரத்து செய்யப்பட்டது.

1969ஆம் ஆண்டு எங்களது தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு நான் முதல்வர் பதவி ஏற்றபோது, வேளாண் உற்பத்தியைப் பெருக்க தொழில் நுட்பங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து 1971ஆம் ஆண்டு கோவை வேளாண் கல்லூரியை தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகமாக உயர்த்தினேன். இதனால் தீவிர விவசாய உற்பத்தியை அதிகரிக்க இந்தப் பல்கலைக்கழகத்தில் தீவிர ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

உணவு தானிய உற்பத்தியை மேம்படுத்த தீவிர வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்த முயற்சிகளின் விளைவாக 1967ஆம் ஆண்டு 54 இலட்சம் டன்னாக இருந்த மொத்த உணவு தானிய உற்பத்தி 1976ஆம் ஆண்டு 72 இலட்சம் டன்னாக அதிகரித்தது. 2008 – 09ஆம் ஆண்டு உணவு தானிய உற்பத்தி 91 இலட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. அரிசி உற்பத்தித்திறன் ஹெக்டேருக்கு 1,450 கிலோவிலிருந்து 3,450 கிலோவாக அதிகரித்துள்ளது. இவை அனைத்தும் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு வழங்க எடுக்கப்பட்ட முயற்சிகளால் சாத்தியமானது.

### புதிய வேளாண் தொழில்நுட்பங்கள்

சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு மனித உழைப்பாளர்களுக்குப் பதிலாக வேளாண்மையில் இயந்திரங்களை அறிமுகப்படுத்த எதிர்ப்புகள் இருந்தன. ஆனால் தற்போது வேளாண் துறையில் இயந்திரங்களைப் பயன்படுத்தத் தொடங்கிய பிறகு வேளாண் உற்பத்தியைப் பெருக்க மேலும் இயந்திரங்களை அறிமுகப்படுத்த கோரிக்கை வருகிறது.

தொழில் மயமாதலாலும் நகர்ப்புர மயமாதலாலும் விவசாய நிலத்தின் அளவு

மெதுவாகக் குறைந்து வருகிறது. எனவே வேளாண் உற்பத்தித் திறனை அதிகரித்து புதிய வேளாண் தொழில்நுட்பங்கள் விவசாயி களுக்குக் கூறப்பட்டு வருகிறது.

உணவு தானியங்கள், குறிப்பாக அரிசி மற்றும் சிறு தானியங்கள் மொத்த உற்பத்தியில் நாம் நல்ல நிலைமையை அடைந்துள்ளபோதும் பருப்புகள் மற்றும் எண்ணைவித்துக்கள் ஆகியவற்றில் இன்னமும் நமது உற்பத்தித் திறனைப் பெருக்க வேண்டியுள்ளது. உற்பத்தித் திறனை அடைய நவீனத் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிக்கும்படி வேளாண் அறிவியல் மையங்களின் விஞ்ஞானிகள் விவசாயிகளைப் பயிற்றுவித்து ஊக்குவிக்க வேண்டும்.

மேற்கூறியவை தவிர, விவசாயிகள் நலனுக்காக தமிழ்நாடு சொட்டுப் பாசனத் திட்டம், துல்லியமான வேளாண்மை, வேளாண் இயந்திரமயமாக்கல் ஆகியவற்றை நடை முறைப்படுத்தி வருகிறது.

இயற்கைப் பேரழிவுகளால் பயிர் இழப்பிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்க தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றபிறகு **2006 – 07**ஆம் ஆண்டிலிருந்து அரசு காப்பீட்டுப் பிரிமியத் தொகையில் **50** விழுக்காட்டை அவர்களுக்கு மானியமாக வழங்கி வருகிறது. ஐந்து இலட்சம் பேருக்கும் அதிகமானவர்களுக்கு **652** கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

என்னுடைய உரையை முடிக்கும் முன்னால், உலக அளவில் விவசாயத்தில் நமது நாட்டின் சாதனைகளை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

நமது நாடு கரும்பு உற்பத்தியில் இரண்டாவது இடத்திலும், அரிசி மற்றும் கோதுமை உற்பத்தியில் இரண்டாவது இடத்திலும், பருப்பு உற்பத்தியில் முதல் இடத்திலும், எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியில் மூன்றாவது இடத்திலும், காய்கள், பழங்கள் உற்பத்தியில் இரண்டாவது இடத்திலும் உள்ளது. இந்தச் சாதனை சிறந்ததுதான் என்ற போதிலும், வேளாண்மையில் நாம் இன்னும் அதிகமாக சாதிக்க வேண்டியுள்ளது.

எனவே, விஞ்ஞானிகள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, அவர்களது குறிக்கோள்களை மீண்டும் நினைவுபடுத்தி, உழவர் சமுதாயத்தினருக்கு அதிகாரம் வழங்க தங்களை மீண்டும் அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக மக்கள் சார்பில் இங்கு கூடியுள்ள வேளாண் விஞ்ஞானிகளையும், மற்றவர் களையும் வரவேற்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மாநாடு வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

இந்த விழாவில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், மாண்புமிகு ஊரகத்தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ஆ.இராசா, மத்திய அரசு வேளாண்மைத்துறை செயலாளர் திரு. டி.நந்தகுமார், இ.ஆ.ப., வேளாண் ஆராய்ச்சி மற்றும் பொறியியல் துறை செயலாளர் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக இயக்குநர் டாக்டர் மங்களராய், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் முருகேச பூபதி, இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகத் துணை தலைமை இயக்குநர் டாக்டர். கே.பி.கோகலே மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ★

# திரைப்படத் தொழிலுக்கு தமிழக அரசு பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது

சென்னையில் 18.11.2009 அன்று நடைபெற்ற ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு வர்த்தக மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.

இந்தத் தனிச்சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியில் இன்று உங்களுடன் இருப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு வர்த்தக மாநாடு தமிழ்நாடு அரசாலும், இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் சங்கங்களின் சம்மேளனத்தாலும் நடத்தப்படுகிறது. எனவே உங்கள் அனைவரையும் வரவேற்பது எனது மகிழ்ச்சியான கடமையாகும். இந்த மாநாட்டைத் துவக்கி வைப்பதில் நான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன்.

1952ஆம் ஆண்டு 28 வயதில் தமிழ் திரைப்படத் துறையில் நுழைந்து 86 வயதில் இன்னமும் அதனுடன் உள்ளவன் என்ற முறையில், இந்த மாநாட்டைத் துவக்கிவைக்க கிடைத்த இந்த வாய்ப்பை மிகப்பெரிய கவுரவமாகக் கருதுகிறேன். தற்போது கூட நான் இரண்டு திரைப்படங்களுக்கு வசனம் எழுதி வருகிறேன். இதுவரை எனக்கு இதன்






உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜூன் 23-27

மூலம் கிடைத்த ஊதியம் ஏழை, எளிய, அருந்ததியர் மாணவர்களது நல்வாழ்வுக்காகவும், பொருளாதார ரீதியில் நலிவடைந்த திரைப்படக் கலைஞர்களின் நலனுக்காகவும் நன்கொடையாக அளிக்கப் பட்டுள்ளது. நமது சமுதாயத்தின் ஏழை மக்களது நலன்களுக்காக நீங்கள் அனைவரும் இந்த நடைமுறையைக் கடைப்பிடித்தால் நான் மகிழ்ச்சி அடைவேன்.

நான் இன்று என் சொந்த இடத்தில் இருப்பது போல உணருகிறேன் என்று கூறுவதில் தயங்கவில்லை.

**திராவிட இயக்கத்தின் பங்களிப்பு**

இந்த மாநாட்டிற்கு அன்புடன் அழைப்பு விடுத்த இந்த மாநாட்டின் தலைவர் கலைஞானி கமல்ஹாசன், இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் சங்கங்களின் சம்மேளனம் மற்றும் அதன் உறுப்பினர்கள் ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிற்கு கலைத்துறையில் மிகவும் அறிவார்ந்த வரலாற்றுப் பின்னணி உண்டு. நமது கலாச்சாரம் கலை, இசை, நடனம் ஆகியவற்றின் ஆதிக்கம் மிக்கது. உண்மையில் கலைகளின் மேம்பாட்டில் தென்னிந்தியாவின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. நமது திரைப்படத் துறையும், பொழுதுபோக்குத் துறையும் நமது கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கின்றன.

திராவிட இயக்கத்தின் வளர்ச்சியில் தமிழ் நாடகத்துறைக்கு மிகப்பெரிய பாத்திரம் உண்டு. திராவிட இயக்கம்தான் தமிழ் திரைப்படத்துறைக்கு சமுதாய அடிப்படையை அமைத்துக் கொடுத்தது. சமுதாயத்தைச் சீர்திருத்த திரைப்படங்கள் பெரும் கருவியாகப் பயன்படுத்தப்பட்டன.

**தமிழ்ப் பெயருக்கு வரி முற்றிலுமாக ரத்து!**

திரைப்படத் தொழில் வளர்ச்சிக்கும் தி.மு.க. அரசு தன்னால் இயன்ற அனைத்தையும் சிறப்பாகச் செய்து வருகிறது.

1989ஆம் ஆண்டு பொழுதுபோக்கு வரி 54 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாகவும், 1998ஆம் ஆண்டு 30 சதவீதமாகவும் மீண்டும் 2000ஆம் ஆண்டு 25 சதவீதமாகவும் குறைக்கப்பட்டது. தற்போது தமிழில் தலைப்பு வைக்கப்படும் திரைப்படங்களுக்கு இந்த வரி முற்றிலுமாக விலக்கு அளிக்கப்படுகிறது.

1968ஆம் ஆண்டு நல்ல திரைப்படங்களையும், கலைஞர்களையும் விருதுகளுக்காகத் தேர்ந்தெடுக்கும் சார்பற்ற தேர்வு முறை அறிமுகப்படுத்தப்பட்டு ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையிலான குழு தேர்வுகளைச் செய்கிறது.

அரசுக்குச் சொந்தமான இடங்களில் படப்பிடிப்புக் கட்டணங்கள் பலமடங்கு உயர்த்தப்பட்டது. தற்போது நியாயமான அளவுகளுக்குக் குறைக்கப்பட்டுள்ளது.

**நலவாரியம் – நகரியம்**

திரைப்படத் தொழிலுக்கு ஒரு நலவாரியம் அரசால் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு திரைப்பட நகரியத்தை அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. தேவையான அனைத்து உதவிகளையும் அளிக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

கலைகள் நமது வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் கலந்துள்ளன. பன்னெடுங் காலமாக நமது நாட்டிய வடிவங்களும் நாட்டியக் கலைஞர்களும் நம்மைக் கவர்ந்து வருகின்றனர். பிரதான திரைப்படத் துறை வரலாற்றை நமது முன்னணிப் பெண்மணிகளும், கதாநாயகர்களும் தலைமை ஏற்று இயக்கியுள்ளனர். நட்சத்திரங்களின் எண்ணிக்கை மிகப்பெரியது. அவர்களது பெயர்களைக் கூறினால் நீண்ட நேரமாகும்.

நம்மிடம் உள்ள திறமைசாலிகளின் சக்தியை மேலைநாடுகள் தற்போது அங்கீகரித்துள்ளன. இந்திய ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் தொழில் நாட்டில் மிகவேகமாக வளர்ந்து வரும் துறைகளில் ஒன்றாகும். 2008ஆம் ஆண்டு 5,84,000 கோடி ரூபாய் வருவாயுடன் கடந்த ஆண்டைவிட 12.4 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. இந்தத் தொழில் 12.5 சதவீத வளர்ச்சி விகிதத்துடன் 2013 ஆம் ஆண்டில் 10,52,000 கோடி ரூபாயை அடையும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்த வளர்ச்சி விகிதம் பாராட்டத்தக்கது.

## பொழுதுபோக்கு மையம்

தமிழ்நாட்டிலுள்ள நமது ஸ்டுடியோக்கள் உலகிலுள்ள மிகச் சிறப்பானவற்றுடன் ஒப்பிடத்தக்கவையாகும். இத்தொழிலில் எல்லா இடங்களிலும் தொழில் திறன் காணப்படுகிறது. நமது கலைஞர்கள் தங்களது கடமைகளுக்குக் கட்டுப் பட்டவர்களாவர்.

தமிழ்நாட்டின் பொழுதுபோக்குத் தொழிலுக்கு மிகநீண்ட வரலாறு உண்டு. எனவே எனது கனவும் தொலை நோக்குப்பார்வையும் தமிழ்நாட்டைப் பொழுதுபோக்கு மையமாக ஆக்க வேண்டும் என்பதாகும். சர்வதேச அளவில் தமிழ்நாடு மையமாக வேண்டும். இந்த இலக்கினை நோக்கி நமது முயற்சிகள் அனைத்தும் இருக்க வேண்டும்.

தென்னிந்தியாவில் செயல்பாடுகள் மிக அதிகம். கடந்த ஆண்டு சென்னையில் சோனி பிக்சர்ஸ் சர்வதேச தரத்திலான அமைப்பினைத் திறக்கப் போவதாக அறிவித்தது. வார்னர் பிரதர்ஸ், மோஷன் பிக்சர், இமேஜிங் நிறுவனம் மற்றும் சென்னையைச் சேர்ந்த பிரசாத் கார்ப்பரேஷன் ஆகியவை சமீபத்தில் கூட்டு ஒப்பந்தத்தை அறிவித்துள்ளன. இந்தக் கூட்டு அவர்களது இணைந்த திறன்களை ஹாலிவுட், இந்தியா மற்றும் உலகம் முழுவதுமுள்ள வாடிக்கையாளர்களுக்கு தயாரிப்புக்குப் பின்னால் டிஜிட்டல் பணிகள் பிலிம் மீட்டாக்கம் ஆகியவற்றிற்குக் கொண்டு வரும்.

## அனைத்து வகையான பொழுதுபோக்கு அம்சங்களையும் ஒருமுகப்படுத்தும் நோக்கு!

பொழுதுபோக்கின் பல்வேறு வடிவங்களை ஒரே மேடையில் கொண்டுவர இந்த மாநாடு நோக்கம் கொண்டுள்ளது. இந்த மாநாடு அதன் குறிக்கோள்களை அடைந்து நமது கலாச்சார மண்டலத்தில் மேலும் அதிக செயலூக்கத்தை அளிக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் சங்கங்களின் சம்மேளனம் மற்றும் இந்த மாநாடு ஆகியவை வெற்றிபெற வாழ்த்து கிறேன்.

❖ ❖ ❖

# ஆற்றலால் – அறிவால் கலையை உயர்த்திடும் கலைஞர்களுக்கு நன்றிக் கடமையாக வழங்கப்படுவதே கலைமாமணி விருது!

சென்னை, கலைவாணர் அரங்கில், 28–11–2009 அன்று,
தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் கலை பண்பாட்டுத்துறையின் சார்பில்
சிறந்த கலைஞர்களுக்கு 2007ஆம் ஆண்டுக்கான கலைமாமணி விருது வழங்கும் விழாவில்,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.




**க**லைவாணர் அரங்கத்தில் இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த விழா, ஆண்டுதோறும் நம்முடைய கலைஞர்களுக்காக நடத்தப்படுகின்ற கலைமாமணி விருது வழங்குகின்ற நிகழ்ச்சியின் தொடர் நிகழ்ச்சியாகும். இது எப்போது தொடங்கப்பட்டது என்பதை இங்கே எனக்கு முன்னால் பேசியவர்கள் எடுத்துக் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

சங்கீத நாடக மன்றம் என்று அழைக்கப்பட்ட இந்த மன்றம், இயல், இசை, நாடக மன்றம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு – மாற்றிய காலத்திலிருந்து

இதுவரையில் தமிழகத்திலே சிறந்து விளங்குகின்ற புலவர் பெருமக்களுக்கு, இசைப்பேரறிஞர்களுக்கு, மற்றும் கலையை தங்களுடைய ஆற்றலால், அறிவால் உயர்த்திக் கொண்டிருக்கின்ற ஆர்வலர்களுக்கு நாம் ஆற்ற வேண்டிய நன்றிக் கடமையை ஆற்றுவதற்காக ஆண்டுதோறும் இத்தகைய விழாவில் அவர்களுக்கு கலைமாமணி விருது வழங்குகின்றோம்.

நானும் இந்த மன்றத்தின் சார்பாக கலைமாமணி விருது பெற்றவன்தான். அந்த விருதை எனக்களித்து, அதற்கான மாலையை எனக்கு அணிவித்தது, என்னுடைய அரும் பெரும் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அப்படி அவர்கள் எனக்கு அதை வழங்கி, எனக்கு மாலையும் அணிவித்த போது, இதே மேடையில் ஒன்றைச் செய்தார்கள். அந்த மாலையை எனக்கு அணிவிப்பது போல பாவனை செய்து, நான் தலைகுனிந்து அதை பெற்றுக் கொள்ள முற்பட்ட நேரத்தில், அவர்களே தன்னுடைய கழுத்தில் அந்த மாலையைப் போட்டுக் கொண்டார்கள். அதனை அவர்கள் வேடிக்கையாக அல்ல, பாச உணர்வோடு அவர்கள் செய்ததை, அந்த மாமன்றத்திலே வீற்றிருந்த அனைவரும் உணர்ந்து கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள்.

எனக்கு இந்த கலைமாமணி விருது வழங்கப்பட்ட அறிவிப்பு வெளியிடப்பட்ட அழைப்பிதழை என்னிடத்திலே தந்து ஒவ்வொருவராக அழைத்து அவர்களுக் கெல்லாம் விருதும், மாலையும் என்னுடைய கையாலும், மேதகு ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களின் கையாலும் வழங்கப்பட்ட போது, அந்த நினைவு தான் என் நெஞ்சில் நிழலாடிக் கொண்டிருந்தது.

**தாயின் முத்தத்திற்கு சமமானது**

கலைமாமணி விருது என்பது ஒரு வகையிலே மிகச் சிறந்து விளங்குவதற்குக் காரணம், இது உலக விருது பெற்றாலும், தேச விருது பெற்றாலும் அவைகளையெல்லாம் விடச் சிறந்தது என்பதற்கு என்ன காரணமென்றால், தேச விருது, உலக விருது இவைகள் எல்லாம் நமக்கு ஆசி வழங்கி, பாராட்டு வழங்கி அளிக்கப்படுகின்ற விருதுகள். அத்தகைய பெருமைகளை நமக்குத் தரக்கூடியவை. கலைமாமணி விருது, தமிழக அரசின் சார்பில் தரப்படுவது, தாயின் முத்தத்திற்கு சமமானது. அத்தகைய தாயின் முத்தத்தைப் பெற்ற நம்முடைய சகோதரர்கள், சகோதரிகள் அனைவருக்கும் நான் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய இறையன்பு பேசும்போது, மேதகு தமிழக ஆளுநர் அவர்களே என்று விளித்து விட்டு, என்னை விளிக்கும்போது சிறப்பு விருந்தினராக வந்திருக்கின்ற கலைஞர் அவர்களே என்று அழைத்தார். நான் சிறப்பு விருந்தினராம்! அவர் சொல்கிறார், பாருங்கள். விருந்தினர் என்றால் வந்து விட்டு சென்று விடுபவர்கள். உண்மைதான். எந்த அரசில் இருக்கின்ற அமைச்சர்களானாலும், அதிகாரிகளானாலும் – அதிகாரிகள் நிரந்தரமாக இருப்பார்கள், எங்களைப் போன்ற அமைச்சர்கள் விருந்தினர்கள்தான். விருந்தை



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு–கோவை ★ 2010 ஜூன் 23–27




அருந்திவிட்டு செல்லுகின்றவர்கள், விருந்தை மற்றவர்களுக்கு அளித்துவிட்டு செல்பவர்கள் என்பதில், விருந்தை அருந்திவிட்டுச் செல்பவர்கள் வரிசையில் சில பேர் சிறப்பு விருந்தினர்களாக வருவார்கள்.

**கலைப்பணி**

நாங்கள் விருந்து அளிப்பவர்களாக கடந்த பத்து, பதினைந்து ஆண்டு காலமாக தமிழ்நாட்டிலே எங்கள் பணியை ஆற்றி வருகிறோம். அந்தப் பணியிலே ஒன்று தான் கலைப்பணி. கலைப்பணியை ஆற்றுவதில் நான் மிகுந்த அக்கறை உடையவன். அதனால் தான் கலைவாணர் அரங்கம் இங்கே உருவாயிற்று. இந்த இடத்திற்கு இந்த மண்டபத்திற்கு தொடக்ககாலத்திலே "சில்ரன்ஸ் தியேட்டர்" – பாலர் அரங்கம் என்றுதான் பெயர். இந்த இடத்திலே தான் சட்டசபையே ஒரு காலத்தில் நடைபெற்றது. பாலர் அரங்கத்திலே சட்டசபை நடந்த காரணத்தால் தான் – இப்போது சட்டமன்றங்கள், நாடாளுமன்றங்களில் பாலர்களைப் போல சிலர் நடந்து கொள்கின்ற நிலைமைகளையெல்லாம் பார்க்கின்றோம்.

பாலர் அரங்கத்தின் பெயரை மாற்றி இதை கலைவாணர் அரங்கமாக ஆக்கிய அந்த வாய்ப்பு நான் முதல் அமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் எனக்குக் கிட்டியது. கலைவாணர் அரங்கம் இங்கே மாத்திரமல்ல, நான் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த போதே, திருக்குற்றாலத்திலே ஒரு மண்டபத்திற்கு இதைப் போன்ற ஒரு கலை நிகழ்ச்சி நடைபெறுகின்ற மன்றத்திற்கு

கலைவாணர் அரங்கம் என்றுதான் பெயர் வைத்தேன். காரணம் கலைவாணர் மீது எனக்கு அன்பு, பாசம், மரியாதை, நன்றி இத்தனையும் உண்டு. அதனால் தான் கலைவாணர் அரங்கம் என்று திருக்குற்றாலத்திலே வைத்த பெயரைத் தொடர்ந்து இங்கேயும் பாலர் அரங்கத்தை, கலைவாணர் அரங்கம் என்று மாற்றியமைத்து, கட்டடக் கலையிலே பல மாறுதல்களைச் செய்து இன்று அந்த அரங்கத்திலே நீங்கள் எல்லாம் அமர்ந்திருக்கிறீர்கள்.

**கலைவாணர் அரங்கம்**

நான் வருகின்ற வழியிலே இந்த மேடைக்கு அமைச்சர் தம்பி பரிதி இளம்வழுதி அழைத்து வந்த நேரத்திலே சொன்னார் – கலைவாணர் அரங்கத்தில் இந்த நிகழ்ச்சியோடு அடுத்த நிகழ்ச்சிகள் இப்போது நடைபெற இயலாது என்றார். அது ஏன் என்பது எனக்குத் தெரியும், அவருக்கும் தெரியும், உங்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும் – இந்த வளாகத்தில் – ஓமந்தூரார் வளாகத்தில் நம்முடைய தமிழகச் சட்டப்பேரவைக்கான பெரியதோர் கட்டடத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்.

அது கருநாடகத்தில் பெங்களூரிலே இருக்கின்ற விதான் சபாவை விட பெரியது, அதை விட அழகானது. இன்னும் சொல்லப் போனால், பலரும் இங்கே வந்து பார்த்து விட்டு, இந்தியாவிலேயே மிக மிகச் சிறப்புடைய கட்டடமாக இது விளங்கும் என்று கூறிச் சென்றிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கட்டடத்தை ஓமந்தூரார் வளாகத்திலே நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்.

**தாடியில்லாத ஈ.வெ.ராமசாமி**

ஓமந்தூரார் வளாகம் என்பதே கூட நான் வைத்த பெயர்தான். நம்முடைய நாட்டில் சுதந்திரம் வந்த பிறகு முதல் முதலமைச்சராக தமிழகத்திலே, சென்னை ராஜ்யத்திலே பொறுப்பேற்றவர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். அவர் எந்த அளவிற்கு தமிழர்களை நேசித்தார், எந்த அளவிற்கு பிற்படுத்தப்பட்ட மக்களுடைய கொள்கைகளுக்காக, முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார் என்பதெல்லாம் தந்தை பெரியாருக்குத் தெரியும், பேரறிஞர் அண்ணாவிற்குத் தெரியும், எனக்கும் தெரியும். அதனால் தான் அப்போது எதிர்தரப்பினர் சில பேர் அவர்மீது கொண்ட காழ்ப்பின் காரணமாக அவரும் காங்கிரஸ்காரராக இருந்துங்கூட, அவரை "தாடியில்லாத ஈ.வெ. ராமசாமி" என்று அன்றைக்கு வர்ணித்தார்கள். அந்த அளவிற்கு சமுதாயச் சீர்திருத்தங்களை ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் செய்தார்.

அதனால் அவருடைய புகழ் தமிழகத்திலே, எங்களுடைய இதயங்களிலே நின்று நிலைத்து, இன்றைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. அவருடைய பெயரால் எதுவும் இல்லையே, முதன் முதலாக முதலமைச்சராக வந்தவர் ஆயிற்றே என்பதற்காகத்தான் இந்த வளாகத்திற்கே ஓமந்தூரார் வளாகம் என்று நான் பெயர் சூட்டி, அந்த வளாகத்திலே சட்டசபை இருக்கட்டும் என்று இப்போது புதிதாக அமைய விருக்கின்ற பிரமாண்டமான சட்டமன்றம் கூட ஓமந்தூரார் வளாகத்திற்குள்ளேதான் அமைகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

## உலகம் போற்றும் மன்றம்



அதைப் போலவே கலைவாணர் அரங்கம் மலேசியாவிலே, சிங்கப்பூரிலே, வெளிநாடுகளிலே இருக்கின்ற அரங்கங்களைப் போல அவ்வளவு விசாலமாக, பெரிதாக பல மடங்கு இங்கே அமர்ந்திருக்கின்ற மக்கள் கூட்டத்தை விட அதிகக் கூட்டம் அமர்ந்து கலை நிகழ்ச்சிகளை சுவைக்கக் கூடிய வகையில் அத்தகைய மண்டபம் அமைய வேண்டுமென்பதற்காக கலைவாணர் அரங்கத்தையும் நாம் மாற்றியமைத்து பெரிய அளவில் உலகம் போற்றுகின்ற ஒரு பகுதியாக, ஒரு மன்றமாக ஆக்கவிருக்கிறோம். அதற்காக பழுதுபார்க்கின்ற வேலைகள் தொடங்கும் போது, ஆகா, கலைவாணர் அரங்கத்தின் சுவரை இடிக்கிறார்களே, படிகளை இடிக்கிறார்களே என்று யாரும் கருதாமல், இடிப்பது மேலும் மேலும் இதை விரிவாக்குவதற்காகத்தான் என்ற அந்த எண்ணத்தோடு இதைப் பார்க்க வேண்டுன்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரங்கத்தில் எத்தனையோ நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன, எத்தனையோ விழாக்கள் நடைபெற்றிருக்கின்றன, எத்தனையோ அரசியல் விவாதங்கள் நடைபெற்றிருக்கின்றன. அவற்றுக்கெல்லாம் இடையில் இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சியில் நம்முடைய மதிப்புமிகு மேதகு தமிழக ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா அவருடைய உடல் நிலையையும் பொருட்படுத்தாமல் – என்னைப் போல இன்றைக்கு வந்திருப்பது நம்முடைய நன்றிக்குரிய, நாம் பாராட்டத் தக்க, நாம் போற்றத் தக்க ஒரு செய்தியாகும்.

அவருக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு – இந்த விருதுகளை யெல்லாம் தெரிவு செய்து, அவைகளை வழங்குகின்ற முயற்சியை மேற்கொண்டுள்ள இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர் ராம.நாராயணன் அவர்களுக்கும், கவிஞர் இளையபாரதி அவர்களுக்கும், இதற்காக ஆவன செய்த இறையன்பு அவர்களுக்கும், வருகைதந்துள்ள உங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, கலைமாமணி விருது பெற்ற அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளை வழங்கி உரையை நிறைவு செய்கிறேன்.

* * *




# பி.எட்., சத்துணவு அமைப்பாளர் - அங்கன்வாடி பணியாளர்கள்

# சத்துணவு - குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணியாளர்களுக்கு பொது வருங்கால வைப்பு நிதி தொடங்க நடவடிக்கை

21.11.2009 அன்று
தமிழ்நாடு சத்துணவு மற்றும் குழந்தைகள் நல மையம் பணியாளர்கள் சங்கங்கள் சார்பில் நடைபெற்ற பாராட்டு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை

நன்றி அறிவிக்கின்ற விழா என்று தலைப்பிட்டு என்னை இங்கே அழைத்திருக்கிறீர்கள். அப்படி அழைத்தால் தான் வருவேன் என்று நினைத்தீர்களோ என்னவோ தெரியவில்லை. கோரிக்கை களை குவிக்கும் விழா, அதற்கு வரவேண்டுமென்று சொன்னால் ஒரு வேளை வராமல் இருந்து விடுவானோ என்ற அச்சத்தில் நன்றி அறிவிக்கும் விழா என்று கூறி, நன்றியை அறிவித்துவிட்டு, அதோடு கோரிக்கைகளை இணைத்து இங்கே உங்களுடைய விழாவை மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

நான் இந்த மேடையிலேயிருந்து வள்ளுவர் கோட்டத்தைப் பார்க்கிறேன். வள்ளுவர் கோட்டம் இந்த பெரும்



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜூன் 23-27




வெள்ளத்தால், பெய்த மழையால் நிரம்பி யிருக்கிறதா அல்லது மக்கள் தலையால் நிரம்பியிருக்கிறதா என்று ஐயுறுகின்ற அளவிற்கு இந்த வள்ளுவர் கோட்டம் நிரம்பி வழிகின்ற காட்சியை நான் காணுகின்றேன்.

### வள்ளுவர் கோட்டம்

வள்ளுவர் கோட்டத்திலே விழா நடத்துங்கள் என்று சொன்னால், பெரிய இடம் ஆயிற்றே, அவ்வளவு கூட்டம் வருமா என்று விழா நடத்துகின்றவர்கள் அஞ்சுவது உண்டு, ஐயுறுவது உண்டு. நான் அவர்களுக் கெல்லாம் சொல்லுவது, நீங்கள் நடத்துகின்ற விழாவின், நிகழ்ச்சியின் நோக்கத்தைப் பொறுத்தது, மக்கள் கூட்டம் – தமிழுக்கு ஒரு விழா எடுத்தால், தமிழக அரசுக்கு ஒரு விழா எடுத்தால் அதற்கு எப்படி மக்கள் தேனடையிலே மொய்ப்பதைப் போல மொய்ப்பார்கள் என்பது வள்ளுவர் கோட்டத்தைப் பொறுத்தவரையிலே நான் அறிந்த ஒன்று. தமிழகத்தின் தலை நகரமான இந்த சென்னை மாநகரத்தில் அமைந்துள்ள பல்வேறு மண்டபங்களுக்கெல்லாம், தலையாய மண்டபமாக எழுந்து நிற்கின்ற கோட்டம் தான், இந்த வள்ளுவர் கோட்டம்.

எனக்கு நன்றி தெரிவித்தீர்கள், தெரிவித்துக் கொண்டே இருக்கின்றீர்கள். நான் வருகின்ற நேரத்தில் இங்கல்ல – இங்கு மாத்திரமல்ல – பல மேடைகளில் நான் வருவதற்கு முன்பு – வருகிற வழியெல்லாம் என் செவிகளில் விழுவதைப் போல – “பல்லாண்டு வாழ்க” “பல்லாண்டு வாழ்க” என்ற ஒரு பாட்டினை இசைக்கின்ற அந்த நிலையை நான் காணுகின்றேன். பல்லாண்டு வாழ்வதல்ல முக்கியம், வாழ்ந்த காலத்தில் வரலாற்றில் பதியும்படியாக என்ன செய்தோம் என்பதுதான் முக்கியம். அப்படி பதியும்படியாக நான் செய்த காரியங்களில் மிக உயர்ந்த காரியங்களில் ஒன்றாகத் திகழ்வதுதான் இந்த வள்ளுவர் கோட்டம் என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். இதைப் போலவே குமரி முனையில் 133 அடி உயரத்தில் அமைக்கப் பட்டு புயலாலும், பெரும் வெள்ளத்தாலும் ஏன் சுனாமியாலும் கவிழ்க்க முடியாமல் நின்று கொண்டிருக்கின்ற வள்ளுவர் சிலை யாரும் மறைக்க முடியாதது மாத்திரமல்ல, சரித்திரத்திலே யாரும் மறைக்க முடியாததும் ஆகும்.

இப்படி ஒருவன் தன்னுடைய வாழ்க்கையில் சந்தித்த சோதனைகளை யெல்லாம் அவனுடைய வரலாற்று வரிகளாக காணுகின்றான். இதுபோன்ற சாதனைகளை யெல்லாம் வரலாற்று நினைவுச் சின்னங்களாக விட்டுச் செல்கின்றான். அப்படி நான் என்

வாழ்க்கையில் நினைவுச் சின்னமாக விட்டுச் செல்கின்ற பெரும் சின்னங்களிலே ஒன்று இந்த வள்ளுவர் கோட்டம். இந்தக் கோட்டத்தில் நாம் நன்றி தெரிவிக்கின்ற ஒரு மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கிறோம் என்றால் யாருக்கு யார் நன்றி தெரிவிப்பது? நீங்கள் எல்லாம் பாடுபட்டு இந்த ஆட்சியை நிலைநிறுத்தி இதைக் காப்பாற்றி வருகின்றீர்களே, அதற்காக நான் உங்களுக்கு நன்றி தெரிவிப்பதா? கிடைத்த இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி உங்களுக்குச் செய்யாமல் வேறு யாருக்குச் செய்யப் போகின்றேன் என்ற அந்த உணர்வோடு நான் வழங்கிய உதவிகளுக்கு, சலுகைகளுக்கு, நன்மைகளுக்கு புரிந்த சாதனைகளுக்கு நீங்கள் தெரிவிக்கின்ற நன்றி அறிவிப்பு மாநாடாகத்தான் இந்த மாநாட்டை நான் கருதுகின்றேன் என்றாலும், அதற்குப் பிரதி உபகாரமாக எதிர்காலத்திலே நீங்கள் புரிய இருக்கின்ற சாதனைகளுக்கு நான் நன்றி தெரிவிப்பதற்காகத்தான் இங்கே வந்திருக்கின்றேன். இப்படி ஒருவருக் கொருவர் நன்றி தெரிவித்து – அதனை பரிமாறிக் கொள்கிற மாநாடாக, மகத்தான விழாவாக இந்த விழா நடைபெறுகிறது என்பதை நான் உணருகின்றேன். அதற்காக இந்த விழாவினை நடத்துகின்ற நண்பர்கள் அனைவருக்கும், அமைப்புகள் அத்தனைக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஒற்றுமை வளரவேண்டும்

சில அமைப்புகளின் இணைப்போடு இந்த விழா நடைபெறுகிறது என்பதை நான் உணருகின்றேன். தலைமை வகிப்பவர் பழனிநாதன் – வாழ்த்துரை வழங்கியவர் சூர்யமூர்த்தி – இப்படி பலரையும் இணைத்து இது ஒருங்கிணைந்த நன்றி பாராட்டும் விழாவாக நடத்துவதிலேயிருந்து உங்க ளுடைய ஒற்றுமையை நான் காண முடிகிறது. இந்த ஒற்றுமை ஓங்கி வளரவேண்டுமென்று நான் வாழ்த்துகின்றேன். இந்த ஒற்றுமைக்கு வித்திட்டவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளை வழங்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு தமிழகத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் அங்கன்வாடி மையங்களின் மூலம் 2 வயது முதல் 5 வயது வரையுள்ள 11 இலட்சத்து 21 ஆயிரத்து 574 குழந்தைகளும், சத்துணவு மையங்கள் மூலம் பள்ளிகளில் முதல் வகுப்பிலிருந்து 10ஆம் வகுப்பு வரை பயிலும் 15 வயது வரையிலான 56 இலட்சத்து 41 ஆயிரத்து 502 மாணவ மாணவியரும் பயன் பெறுகிறார்கள். முதியோர் ஒய்வூதியம் பெறுவோர் 29 ஆயிரத்து 561 பேர் இதன்மூலம் பயன் பெறுகிறார்கள். ஆக மொத்தம், தோராயமாகச் சொன்னால் 68 இலட்சம் பேர் இந்த மையங்களின் மூலமாக தமிழகத்திலே பயன் பெறுகிறார்கள்.

அப்படி பயன்பெறுபவர்களுக்கு பணி புரிபவர்கள் என்று எடுத்துக் கொண்டால் – இந்தத் திட்டங்களைச் சிறப்பான முறையில் செயல்படுத்துவதில், 50 ஆயிரத்து 433 அங்கன்வாடி மையங்களில் 1 இலட்சத்து 3 ஆயிரத்து 698 பணியாளர்களும், 42 ஆயிரத்து 78 பள்ளி சத்துணவு மையங்களில் 1 இலட்சத்து 18 ஆயிரத்து 213 பணியாளர்களும் ஆக மொத்தம் 2 இலட்சத்து 21 ஆயிரத்து 911 பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் 1 இலட்சத்து 92 ஆயிரத்து 219 பேர் பெண்கள்.

நான் தமிழக ஆட்சிச் சரித்திரத்தின் சில பகுதிகளை – ஒரு ஆரம்பக் கட்டத்தை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். வரலாற்றில் எதையும் மறைக்கக் கூடாது. எதிர்க்கட்சியில் உள்ள ஒருவர் – நமக்கு எதிரான கட்சியிலே உள்ள ஒருவர் புரிந்த காரியம் என்பதற்காக அதை மறந்து விடக் கூடாது, அதை மறைத்து விடவும் கூடாது. என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார் என்பது வரலாறு. ஆனால் அந்த வரலாற்றுக்கு முந்திய நிகழ்ச்சியாக பெருந்தலைவர் காமராஜர் மதிய உணவுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தி, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற பொறுப்பு பள்ளி



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜூன் 23-27

ஆசிரியர்களுக்கும், அந்த ஊர் பொதுமக்களுக்கும் உரியது என்ற வகையிலே அதை மக்களுடைய கடமையாகச் செய்ய வேண்டுமென்று அவர் மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்.

இதற்கு ஒரு தூண்டுதலாக இருந்த நிகழ்ச்சி **1925**ஆம் ஆண்டு சென்னை மாநகரத்தின் மாநகராட்சி மன்றத் தலைவராக இருந்த – நீதிக் கட்சித் தலைவர் தியாகராய செட்டியார் – மாணவர்களுக்கு படிப்பிலே ஊக்கத்தை ஏற்படுத்த வேண்டுமேயானால் – உதாரணத்திற்கு ஒரு சோதனையோட்டமாக – பரிட்சார்த்தமாக – சென்னை மாநகரில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது பள்ளிகளுக்கு வருகின்ற பிள்ளைகளுக்கு உணவளிக்கும் திட்டத்தை – கொண்டு வந்து நிறைவேற்றினார். ஆனால் அதை ஞாபகத்திலே வைத்துக் கொள்ள வேண்டும் – அது சென்னை மாநகருக்கு மாத்திரம் சோதனையோட்டமாகக் கொண்டு வரப்பட்ட திட்டம்.

**சத்துணவுத் திட்டம்**

அதைத்தான் பின்பற்றி பெருந்தலைவர் காமராஜர் தமிழகத்திலே இருக்கின்ற கிராமப்புறத்து பிள்ளைகளும் – எல்லா பகுதிகளிலே இருக்கின்ற பிள்ளைகளும் பயன் பெறவேண்டும், படிக்க வேண்டுமென்ற ஆசையோடு அவர் அந்தத்திட்டத்தை விரிவுபடுத்தி மதிய உணவுத் திட்டமாகக் கொண்டு வந்தார்.

அதன் விரிவாக்கமாக என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக வந்த போது சத்துணவுத் திட்டம் என்று அதை அறிவித்தார். அந்தத் திட்டத்தை அறிவித்து, அது நிறைவேற இரண்டு மூன்று மாத காலம் ஆன போது, அந்தத் திட்டத்தை எப்படியெல்லாம் நிறைவேற்றலாம் என்று அப்போது எதிர்க்கட்சியிலே இருந்த நாங்கள் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு ஆலோசனை கூறினோம். இந்தத் திட்டத்தை உணவாகவும் கொடுக்கலாம், அல்லது அவர்களுக்கு பணமாகவும் கொடுக்கலாம், எப்படியெல்லாம் இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்பதற்கான யோசனைகளை சட்ட மன்றத்திலே நாங்கள் எடுத்துரைத்தோம். அந்தத் திட்டம் இன்றைய தினம் நாங்களே ஆட்சிக்கு வந்து – அது உள்ளபடியே சத்துணவுத் திட்டமாக இருக்க வேண்டுமென்ற ஆசையின் காரணமாக – ஒரு முட்டை வாரத்திற்கு என்று ஆரம்பித்து – வாரத்திற்கு மூன்று முட்டை கொடுத்தால் தான் குழந்தைகள் சத்துணவு சாப்பிட்ட அந்தப் பயனை அடைய முடியுமென்று நினைத்து அதை நிறைவேற்றி வருகிறோம்.

*“ ஒரு முட்டை வாரத்திற்கு என்று ஆரம்பித்து – வாரத்திற்கு மூன்று முட்டை கொடுத்தால் தான் குழந்தைகள் சத்துணவு சாப்பிட்ட அந்தப் பயனை அடைய முடியுமென்று நினைத்து அதை நிறைவேற்றி வருகிறோம். ”*

இப்படி இந்தத் திட்டம் ஒவ்வொன்றாக – ஒவ்வொரு கட்டத்திலும் வளர்ந்து சத்துணவுத் திட்டத்திலே பணியாற்றுகின்றவர்களுடைய ஊதியம் – அதற்கும் சில வளர்ச்சி ஏற்பட்டது. எப்படி ஒரு முட்டை மூன்று முட்டைகளாக ஆயிற்றோ, அதைப் போல பணியாளர்களுக்கும், அமைப்பாளர்களுக்கும் வழங்கப்பட்ட தொகையும் விரிவடைந்தது.

**1996**ஆம் ஆண்டு நாங்கள் ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்த போது – அதற்கு முன்பே அமர்ந்தோம் என்றாலுங்கூட – **96**ஆம் ஆண்டிலும் தேர்தலிலே வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்த போது – அங்கன்வாடி

பணியாளர்களும், சத்துணவு அமைப்பாளர் களும் பெற்று வந்த அடிப்படைச் சம்பளம் 200 ரூபாய் என்றிருந்ததை, 600 ரூபாயாக உயர்த்தியது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. சமையலர்களுக்கு 225 ரூபாய் மதிப்பூதியம் என்று வழங்கப்பட்டதை 450 ரூபாயாக உயர்த்தியது தி.மு. கழக ஆட்சி. சமையல் உதவியாளர்களுக்கு 175 ரூபாய் மதிப்பூதியம் என்பது 400 ரூபாயாக உயர்த்தப்பட்டது.

2006ஆம் ஆண்டு தி.மு. கழகம் மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது சத்துணவு அமைப்பாளர்களுக்கும், அங்கன்வாடி பணியாளர்களுக்கும் அடிப்படை ஊதியம் 600 ரூபாய் என்பதை 1,300 ரூபாயாக உயர்த்தினோம். படிகள் எல்லாம் சேர்த்தால் 2,418 ரூபாய் இந்த ஆட்சியிலே வழங்கப் பட்டது.

15–8–2008இல் அங்கன்வாடி மற்றும் சத்துணவு மையங்களில் பணிபுரியும் சமையலர், சமையல் உதவியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கு தொகுப்பூதியத்திற்குப் பதிலாக சிறப்பு காலமுறை ஊதியம் வழங்க முடிவு செய்யப்பட்டது. அனைவரும் இதை அறிவீர்கள்.

கழக ஆட்சி – மேலும் பத்தாண்டு பணிக் காலம் முடித்தவர்களுக்கு ஒரு ஊதிய உயர்வு வழங்கவும் ஆணை பிறப்பித்தது.

ஆறாவது ஊதியக் குழு பரிந்துரைக்குப் பிறகு, தற்போது சத்துணவு அமைப்பாளர்கள், மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு அடிப்படை ஊதியம் 1,300 ரூபாய் என்பதை 2,500 ரூபாயாகவும், அது தவிர – தர ஊதியமாக 500 ரூபாயும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இந்தப் பணியாளர்களுக்கு ஒரு சிறப்பு ஓய்வூதியத் திட்டத்தைக் கொண்டு வந்ததும் இந்த அரசுதான் என்பதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்.

இவைகள் எல்லாம் நடந்தவைகள் – நீங்கள் ஏற்கெனவே நன்றி தெரிவித்து முடித்து விட்டவைகள். இனி இந்த மாநாட்டில் சில புதிய அறிவிப்புகளை பதினைந்து அறிவிப்புகளை வெளியிடவிருக்கிறேன். பதினைந்து அறிவிப்புகளையும் படித்து முடித்த பிறகு பதினாறாவது அறிவிப்பு எங்கே என்று கேட்கக் கூடாது.

1. சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆகியவற்றில் பணிபுரிந்து 15.9.2008 முதல், ஓய்வு பெற்றவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வரும் மாதந்திர சிறப்பு ஓய்வூதியத் திட்டம், 15.9.2008க்கு முன்னர் பணி ஓய்வு பெற்ற அனைத்து சத்துணவு / அங்கன்வாடி பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தப்படும். இதன்மூலம் ஏறத்தாழ 16 ஆயிரம் ஓய்வு பெற்ற பணியாளர்கள் பயன்பெறுவார்கள்.

2. சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கும் அரசு அலுவலர் களுக்கு வழங்கப்படுவது போன்று, மருத்துவப்படி மாதம் 100 ரூபாய் வழங்கப்படும். இதனால் ஏறத்தாழ 2 இலட்சத்து 6 ஆயிரம் பணியாளர்கள் பயன்பெறுவார்கள்.

**பண்டிகைக்கால முன்பணம்**

3. அரசுப் பணியாளர்களுக்கு வழங்குவதைப் போன்றே இனி, சத்துணவு, அங்கன்வாடி பணியாளர்களுக்கும் இரண்டாயிரம் ரூபாய் பண்டிகைக்கால முன்பணமாக வழங்கப்படும். இதனால் ஏறத்தாழ 2 இலட்சத்து 6 ஆயிரம் பணியாளர்கள் பயன்பெறுவார்கள்.

4. சமூக நலத் துறையில் முன்னாள் மதிய சமையற்கூட சமையலர்களாக இருந்து, தற்போது தினக்கூலி அடிப்படையில் ஏறத்தாழ 30 ஆண்டுகளாகப் பணிபுரிந்து வரும் 33 பேருக்கு, அவர்களின் தகுதிக்கேற்ப சமூகநலத் துறையில் அலுவலக உதவியாளர் / இரவுக்காவலர் போன்ற பணியிடங்களில் நியமனம் வழங்கப்படும்.



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு–கோவை ★ 2010 ஜுன் 23–27

5. ஏற்கெனவே, சிறப்புத் தேர்வு மூலம் ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்ட பி.எட்., முடித்த சத்துணவு அமைப்பாளர் / அங்கன்வாடி பணியாளர்கள் தவிர, மீதம் உள்ள 341 பணியாளர்களுக்கும் சிறப்புத் தேர்வு மூலம் ஆசிரியர் பணி வழங்க, தக்க ஆணை வெளியிடப்படும்.

6. சத்துணவுத் திட்டம் / ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றில் பணிபுரிந்த ஆசிரியர்கள், மேற்பார்வையாளர்கள் நிலை–2 மற்றும் பல்நோக்கு சுகாதார பணியாளர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு, சத்துணவுத் திட்டம் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றில் தொகுப்பூதியத்தில் பணி புரிந்த காலத்தில் 50 விழுக்காடு காலம் ஓய்வூதியத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

7. தகுதி பெற்ற சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு சமூக நலத்துறையில் பதிவுறு எழுத்தர், அலுவலக உதவியாளர் பணியிடத்தில் பதவி உயர்வும்; தகுதி பெற்ற பெண் சத்துணவு அமைப்பாளர்களுக்கு மேற்பார்வையாளர் நிலை 2 பணியிடத்தில் பதவி உயர்வும் வழங்கப்படும்.

8. சத்துணவு அமைப்பாளர் / அங்கன்வாடி பணியாளர்கள் அருகிலுள்ள, பொறுப்பாளர் இல்லாத மையத்தில் கூடுதல் பொறுப்பேற்றுப் பணிபுரியும்போது ஒரு நாளைக்கு 2 ரூபாய் வீதம் கூடுதல் பணப்படியாக வழங்கப்பட்ட தொகை தற்போது 10 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

9. சத்துணவு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணியாளர் களில்; அரசுப் பணியாளர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்பவர்களுக்கு 10 நாட்களுக்கு மிகாமல் சம்பளத்துடன் கூடிய விடுப்பு வழங்கப்படும்.

*“அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஒவ்வொரு மாதமும் பல்வேறு அலுவலர்களால் நடத்தப்படும் கூட்டங்களில் கலந்து கொள்ளச் செல்வதற்காக வழங்கப்படும் பயணச்செலவுத் தொகை 20 ரூபாயிலிருந்து 40 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.”*

10. அங்கன்வாடி உதவியாளர் நிலை–2 ஆகப் பணியமர்த்தப்பட்டவர்களை காலிப் பணியிடங்களில் நிலை–1 ஆக நியமிக்கும்போது அவர்களுக்கு நிலை இரண்டுக்கான ஊதியம் மட்டுமே வழங்கப்படுவதை மாற்றி நிலை ஒன்று பதவிக்கான ஊதியம் வழங்கப்படும். இதனால் 3,784 பணியாளர்கள் பயன் பெறுவார்கள்.

11. அங்கன்வாடி பணியாளர்களின் பணி நேரம் தற்போது காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை என உள்ளது. இதனை, அரை மணிநேரம் குறைத்து, பணிநேரம் காலை 8.00 மணி முதல் மாலை 3.30 மணி வரை என மாற்றி அமைக்கப்படும்.

12. அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஒவ்வொரு மாதமும் பல்வேறு அலுவலர் களால் நடத்தப்படும் கூட்டங்களில் கலந்து கொள்ளச் செல்வதற்காக வழங்கப்படும் பயணச்செலவுத் தொகை 20 ரூபாயிலிருந்து 40 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

13. சத்துணவு / அங்கன்வாடி பணியாளர்கள் தற்போது மாதம் ஒரு நாள் விடுப்பு எடுத்துக் கொள்ள அனுமதிக்கப் படுகின்றனர். இனிமேல் அவர்கள் ஒரு மாதம் எடுக்காத விடுப்புடன் சேர்த்து, அடுத்த மாதம் ஒரே நேரத்தில் இரண்டு நாட்கள் வரை விடுப்பு எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படும். அவ்வாறு விடுப்பு எடுப்பவர்கள், மாற்று ஏற்பாடுகள் செய்து சத்துணவு வழங்கும் பணிக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது பார்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

> “ குழந்தைகள் மையங்களில் பணியாற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் அனைவருக்கும் ஆண்டுக்கு இரண்டு சேலைகள் சீருடையாக வழங்கப்படும். இதனால் 97 ஆயிரத்து 698 பணியாளர்கள் பயன் பெறுவார்கள். ”

14. குழந்தைகள் மையங்களில் பணியாற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் உதவியா ளர்கள் அனைவருக்கும் ஆண்டுக்கு இரண்டு சேலைகள் சீருடையாக வழங்கப்படும். இதனால் 97 ஆயிரத்து 698 பணியாளர்கள் பயன் பெறுவார்கள்.

15. சத்துணவு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்குப் பொது வருங்கால வைப்பு நிதி (GPF) தொடங்க வழி வகை செய்யப்படும்.

இப்படி பதினைந்து அறிவிப்புகளைச் செய்திருக்கின்றேன். நீங்கள் இத்தகைய நன்றி அறிவிப்பு மாநாடு நடத்த வேண்டும் என்பதற்காக அல்ல – நன்றி மறப்பது நன்றன்று, நன்றல்லது அன்றே மறப்பது நன்று – என்ற முறையில் நான் நன்றல்லாததை ஏதாவது உங்களுக்குச் செய்திருப்பேன் என்றால், அவைகளை இன்றே மறந்துவிட்டு, நீங்கள் தொடர்ந்து இந்த அரசுக்கும் மக்களுக்கும் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த விழாவை ஏற்பாடு செய்த அனைத்து அமைப்புகளுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு – விழாவிலே உரையாற்றிய தலைமை வகித்த பழனிநாதன், வாழ்த்துரை வழங்கிய சூரியமூர்த்தி, சுந்தரராசன், வரதராசன், வரவேற்புரையாற்றிய ராஜேந்திரன், நன்றி கூறவிருக்கும் அனுசுயா, வருகை தந்துள்ள அமைச்சர் பெருமக்கள், அதிகாரிகள் அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

★



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு–கோவை ★ 2010 ஜூன் 23-27

# தமிழை யாரும் அழிக்கமுடியாது

**8-12-2009 அன்று,**
**தமிழ்நாடு அரசின் திரைப்பட விருதுகள்**
**வழங்கும் விழாவில்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**கலைஞர் அவர்கள்**
**ஆற்றிய உரை.**

**உ**டல் நலம் சிறிது குன்றி யிருந்தாலுங்கூட, இன்று காலை யிலேயிருந்து மாலை **5.30** மணி வரையிலே தூக்கத்திலேயே ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலையில் இந்த அரங்கத்திற்கு உரிய நேரத்திலே வரஇயலாமல் சற்றுத் தாமதமாக நான் வரநேரிட்டது. தாமதமாக வந்தாலும் நிச்சயம் வருவேன் என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையில், நான் வருகின்ற வரையிலே

அமைதியாக இருந்து நம்முடைய கலையுலக மாமன்னர்களுக்கு, கலையுலக



நட்சத்திரங்களுக்கு, கலையுலகப் பெருமக்களுக்கு நாம் காட்ட வேண்டிய நன்றி உணர்வை, மரியாதையைக் காட்டியுள்ள இந்த மாமன்றத்திலே வீற்றிருக்கின்ற தமிழ்ப் பெருமக்கள் அனைவருக்கும் என் நன்றியை, என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கலைவாணர் காலம்**

இந்த விழாபோல பல விழாக்கள் கலையுலகின் சார்பில் நடை பெற்றிருக்கின்றன. நம்முடைய சூப்பர் ஸ்டார் ரஜினி அவர்கள் குறிப்பிட்டதைப் போல இன்று எப்படி அவரும், தம்பி கமலும் என் இரு புறத்திலும் வீற்றிருக்கிறார்களோ, அதைப் போல மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களும், நடிகர் திலகம் சிவாஜி அவர்களும் என் இரு புறத்திலும் வீற்றிருந்த, கலை நிகழ்ச்சிகளை நடத்திய அந்தக் காலம் – அரசியல் அரங்கங்களில் வீற்றிருந்த அந்தக் காலம் – என் நினைவுக்கு வராமல் இல்லை. நான் ரஜினியையும், கமலையும் பார்த்து வியப்புறுகிறேன். ஏறத்தாழ இங்கே எழுபதுக்கு மேற்பட்டவர்கள் பரிசுகளை, விருதுகளை, பொற்காசுகளைப் பெற்ற அந்த நிகழ்ச்சியின் போது ஒரு இளம் பெண் – நான் யார் தெரிகிறதா? நான் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனின் பேத்தி (அனுவர்தன்) என்று சொல்லி, அந்த விருதினைப் பெற்றுக் கொண்டார். கலைவாணர் என்.எஸ்.கே. அவர்களுடைய காலத்திலிருந்து இன்றைக்கு ரஜினி, கமல் காலம் வரையில் – கமலைப் போன்றவர்கள், ரஜினியைப் போன்றவர்கள் பலரும் இடையிடையே வந்திருந்தாலும், இந்தக் காலம் வரையில் தொடர்ச்சியாக இருக்கின்ற ஒரு கலைஞன் நான் என்பதை அவர்கள் இருவரும் பொறாமைப்பட வேண்டும் என்பதற்காகச் சொல்லிக் கொள்கிறேன்.

**விழா எனும் மருந்து**

ஏ, அப்பா எவ்வளவு காலமாக இந்தக் கலையுலகத்திலே இருக்கிறார் இந்த மனுசன் – இருந்துங்கூட மனம் ஒடிந்து போகாமல், உடல் சோர்ந்தாலுங்கூட, உள்ளம் சோராமல் இன்றைக்கு வந்து, இந்த விழாவினை நடத்திக் கொடுத்திருக்கிறாரே என்று அவர்கள் வியப்படைகிறார்கள். எனக்கு அரசியலில் – பொது வாழ்வில் ஏற்படுகின்ற சோர்வையெல்லாம் அகற்றுகின்ற இடம் கலைஞர்களாகிய நீங்கள் கூடி இருக்கின்ற இடம் தான் என்பதை ஒன்றல்ல, இரண்டல்ல பலமுறை சொல்லியிருக்கிறேன். உங்களுடைய நடிப்பாற்றல் மாத்திரமல்ல, மனிதநேயம், மனித உணர்வு, மனிதர்களை நேசிக்கின்ற தன்மை, நன்றி உணர்வு இவைகள் எல்லாம் இந்தத் திரையுலகத்திலே, கலையுலகத்திலே பல ஆண்டு காலமாக நான் கண்டுகளித்து இந்த உலகத்திற்கும் நாம் சேவை செய்தாக வேண்டும், பணியாற்றியாக வேண்டும் என்ற அந்த அவாவுடனே தான் இந்த மிகப் பெரும் விழாவிலே உங்களையெல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற வேண்டுமென்று என்ன நேர்ந்தாலும் உடலுக்கு – என்ன நேர்ந்தாலும் என் உயிருக்கு; என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் – எப்படி அரசியல் வாழ்க்கையிலே, பொது வாழ்க்கையிலே என்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறேனோ, அதைப்போல அந்த வாழ்வுக்கு மருந்தாக இருக்கின்ற உங்களை நான் நிச்சயமாகப் புறக்கணிக்கமாட்டேன், அலட்சியப்படுத்தமாட்டேன் என்பதற்கு அடையாளமாகத்தான் – காலையிலிருந்து எனக்கேற்பட்ட உடல் அசதிக்கு – உடல் நலிவுக்கு ஐந்தாறு மருத்துவர்கள் வந்திருந்து சிகிச்சை அளித்த போதிலும், அந்தச் சிகிச்சையில் எல்லாம் பெரிய சிகிச்சையாக – அவர்கள் தந்த மருந்தையெல்லாம் வெல்லுகின்ற மருந்தாக இந்த விழா எனும் மருந்து எனக்கு அமைந்தது.

**வல்லமை உள்ள மொழி**

நம்முடைய விவேக் அவர்கள் ஒரு கற்பனை நாடகத்தை – நான் எழுதிய வசனங்களை வைத்துக் கொண்டே ஒரு கற்பனை நாடகத்தை எழுதி, வசந்த சேனைக்குப் பதிலாக இப்போது "ஆங்கிலம்" வந்து அமர்ந்திருப்பதை எடுத்துச் சொல்லி,



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை★2010 ஜூன் 23-27

தமிழைக் காப்பாற்றியே தீருவோம் என்று சொன்னார்கள். தமிழை யாரும் அழிக்க முடியாது. தம்பி விவேக் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். திருமதி. குஷ்பூ தமிழிலே பேசிய பிறகும் தமிழ் அழியவில்லை என்றால் தமிழின் அந்த மொழி வல்லமை எத்தகையது என்பதை நாம் உணரலாம். தமிழுக்கு அத்தகைய சக்தி உண்டு. அதனால் தான் உலகம் முழுதும் பரவியிருக்கின்ற மொழிகளில் ஒன்றாக தமிழ் மொழி இருக்கின்றது. ஆங்கிலத்தைப் போல இது ஆட்சி செய்ய வந்த மொழியல்ல. வேறு மொழிகளைப் போல ஒரு மாநிலத்திலே வந்து இந்த மொழி நம்மையெல்லாம் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றது.

**மனிதர் குலம்**

இந்த மொழிக்கு உரியவர்கள் நிச்சயமாக மற்ற மொழிக்காரர்களை பகைத்துக் கொள்ளாமல் – மற்ற மொழிக்காரர்களை வெறுக்காமல் – நாம் அனைவரும் ஒரு குடும்பம், நம் அனைவருக்கும் ஒரு குலம் சொந்தம் என்றால், அந்தக் குலத்திற்குப் பெயர், மனித குலம், மாந்தர் குலம், அந்த மனிதர் குலத்தில் ஒருவரையொருவர் புரிந்து கொள்வதற்கு அடையாளமாக எப்படி




தங்களை ஆதிக்கம் செய்ய நினைக்கின்ற மொழியல்ல. இந்த மொழி அனைவராலும் போற்றப்படுகின்ற ஒரு மொழியாக இருப்பதற்குக் காரணமே, இந்தச் செம்மொழியை நாம் பல்லாண்டு காலமாக – இதற்கு எந்தப் பெயரும் சொல்லாமல் தாய்மொழி என்று சொல்லி, இந்த மொழியைக் காப்பாற்றுகின்ற போராட்டங்களையெல்லாம் நடத்தி – அந்தப் போர்களில் நாம்தான் வென்றோம் என்ற அளவிற்கு இன்றைக்கு அவரவர்கள், பழக்கத்திலே உள்ள சைகைகள் பயன்படுகிறதோ அதைப்போல மொழியும் ஒரு கருவிதான் – ஒருவரையொருவர் புரிந்து கொள்ள – ஒருவருக்கு ஒருவர் புரியவைக்க – ஒருவருக்கொருவர் தெரிந்து கொண்டு பணியாற்ற – ஒருவருக்குப் புரியாததை மற்றொருவர் சொல்ல – இடையிலே உதவுகின்ற ஒரு கருவிதான் மொழி. அந்த மொழிக்கு தெய்வீகத் தன்மை கொடுத்து, அந்த மொழியைத் தவிர வேறு மொழி, உலகத்திலே பெரிய மொழி அல்ல என்று கூறி,

இன்றைக்கு சில பேர் அதற்கான போர்களிலே மனித உணர்வைக் காட்டி நடத்துகின்ற இந்தக் காலத்தில் நம்மையெல்லாம் ஆளாக்கிய தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் – இவர்கள் எல்லாம் எடுத்துச் சொன்ன கருத்து, மொழி ஒரு கருவியாக நமக்கு இருக்க வேண்டுமே அல்லாமல், அந்த மொழிக்கு விரோத உணர்ச்சி, பகை உணர்ச்சி, மனித உணர்ச்சிக்கு மாறுபட்ட உணர்ச்சியை நாம் ஏற்றக் கூடாது என்று பல முறை எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

அந்த வழியிலே இந்த ஆட்சிச் சக்கரத்தை இன்றைக்கு சுழற்றிக் கொண்டிருக்கின்ற நானும், எல்லா மொழியிலும் திறமை இருக்கின்றது, எல்லா மொழியிலும் வன்மை இருக்கிறது, ஆனால் ஒரு மொழி இன்னொரு மொழியை ஆதிக்கம் செலுத்துவதை நாம் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது என்பதிலே நாம் உறுதியாக இருக்கின்றோம். அதைத்தான் இங்கே நடத்தப்பட்ட "மனோகரா" காட்சியில் இன்னொரு மொழியை ஆதிக்கம் செலுத்துகின்ற அந்தத் தன்மை எடுத்துக்காட்டப்பட்டு – பிறகு ஆதிக்கம் செலுத்துவதற்காக வந்து அமர்ந்த மொழிதானே உண்மையை உணர்ந்து, நம்முடைய தமிழ் மொழிக்கு நான் தாழ்ந்து நடப்பேன் என்று உறுதி கூறுகின்ற காட்சியைக் கண்டோம். அந்த அளவிற்கு தலைகுனிந்து நம் மொழிக்கு யாரும் வணக்கம் செய்ய வேண்டாம், தோளோடு தோள் நின்று எல்லா மொழிகளும் சகோதர மொழிகள் என்ற உணர்வோடு வாழ வேண்டும், தமிழுக்கு மலையாளம் விரோதம் அல்ல, தமிழுக்கு தெலுங்கு விரோதம் அல்ல, தமிழுக்கு கன்னடம் விரோதம் அல்ல – அதைப்போல கன்னடம் தமிழுக்கு விரோதமாக இருக்கக் கூடாது, மலையாளம் தமிழுக்கு விரோதமாக இருக்கக் கூடாது, தெலுங்கு தமிழுக்கு விரோதமாக இருக்கக்கூடாது. கன்னடமும், களி தெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும் உன் உதிரத்து உதித்தெழுந்தே ஒன்று பல ஆயினும் என்று மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை பாடியதையும் மறந்துவிடாமல் – எல்லாம் சகோதர மொழிகள்தான், அந்த சகோதரத்துவ உணர்வுதான் இன்றைக்கு இந்த மேடையில் என்னையும், என்னுடைய அருமைத் தம்பி, சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களையும், அன்புத் தம்பி கமல்ஹாசன் அவர்களையும் ஒன்றாக உட்கார வைத்திருக்கின்ற இந்தக் காட்சி – நாம் மொழிக்குச் சொந்தக்காரர்கள், எந்த மொழிக்கும் விரோதிகள் அல்ல, எந்த மொழியையும் அரவணைத்துக் கொள்ளக் கூடியவர்கள் என்கின்ற இந்த உணர்வைத்தான் இந்தக் காட்சி மெய்ப்பித்துக் கொண்டிருக்கின்றது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நிகழ்ச்சியிலே சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களுக்கு சிறந்த நடிகர் என்பதற்கான விருது வழங்கப்பட்டது. இந்த விருது வழங்கிய காரணத்தால் தான், அவர் சிறந்த நடிகர் என்பதல்ல. என்றைக்கும் அவர் சிறந்த நடிகர்தான். அதைப்போல கமலஹாசன் அவர்களுக்கும் சிறந்த நடிகர் என்று விருது வழங்கப்பட்டது. என்றைக்கும் அவர் சிறந்த நடிகர்தான். இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால் – எனக்கு சிறந்த உரையாடல் ஆசிரியர் என்ற விருது வழங்கப்பட்டது. வழங்கப்படாவிட்டாலும், நான் சிறந்த உரையாடல் ஆசிரியர்தான் என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஒரு பத்திரிகையிலே கூட இன்றைக்குக் காலையிலே பார்த்தேன். அதைப் பார்த்ததால் உடல் நலிவு ஏற்படவில்லை. ஒரு கேலிச் சித்திரம் போட்டு, முதலமைச்சர் தனக்கு தரப்படுகின்ற விருதை யாருக்குக் கொடுப்பார், அவரே நடத்துகின்ற நிகழ்ச்சியில், அவரே விருதை எடுத்துக் கொள்வதாக ஒரு கற்பனை கேலிச் சித்திரத்தை – தாக்குவதற்காகவோ அல்லது கேலியாகவோ அந்தச் செய்தியை வெளியிட்டிருந்தார்கள். அதைப் பார்த்தபோது எனக்கு அவர்கள் எதிர்பார்த்த சிரிப்புதான் வந்தது. சிரிப்பதற்காகத் தானே கார்ட்டூன் போடுவது ? அவர்கள் எதிர்பார்த்த சிரிப்பு தான் எனக்கு வந்தது.

### அண்ணா அளித்த விருது

இயல், இசை, நாடக மன்றம் என்பது நான் உருவாக்கியது. இதற்கு முன்பு – தி.மு.கழகம் ஆட்சி வருவதற்கு முன்பு – **1967**க்கு முன்பு இதற்குப் பெயர் சங்கீத நாடக சபா. சங்கீத நாடக சபா என்று வட மொழிச் சொல்லில் பெயர் பெற்றிருந்த இந்த மன்றத்திற்கு இயல், இசை, நாடக மன்றம் என்ற பெயரைச் சூட்டி அமைத்தவனே நான்தான். அந்த நாடக மன்றத்தின் சார்பாக நடைபெற்ற விழாவில் – அப்போது முதல் அமைச்சராக இருந்த அறிஞர் அண்ணா அவர்கள் – சிறந்த வசனகர்த்தா என்பதற்கான விருதை எனக்கு வழங்கி, அதற்கான மாலையை எனக்கு அணிவித்தார்கள். நம்முடைய நண்பர் அந்த விழாவில் நன்றி கூறும்போது நான் சொன்னேன் – இது அண்ணா அவர்களுக்கு வழங்கப்பட்ட விருது, அவருக்கு விருது வழங்க வேண்டும் என்பதற்காக – அவருக்குப் பதிலாக எனக்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதை அண்ணா அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியிருக்கிறார்கள் என்று சொன்னேன். மீண்டும் அந்த மாலையை கழுத்திலே போட்டுக் கொண்டு அண்ணா அவர்கள் அந்த விழாவிலே பேசியதன் அடிப்படையிலேதான் ஆண்டுதோறும் ஏறத்தாழ எழுபது பேருக்கு கலையுலக வித்தகர்களுக்கு கலைஞர்களுக்கு கலையிலே இன்னும் மேம்பட்டு விளங்கி வருபவர்களுக்கு மேலும் மேலும் உற்சாகம்




எஸ்.எஸ்.ஆர். போன்றவர்கள் எல்லாம் அந்த விழாவிலே கலந்து கொண்டார்கள். அப்போது அண்ணா அவர்கள் அந்த மாலையை எனக்கு அணிவிப்பதாக பாவனை செய்து – சிறந்த வசனகர்த்தாவிற்கு இந்த விருதை வழங்குகிறேன் என்று சொல்லிவிட்டு அந்த மாலையை என் கழுத்துவரையிலே கொண்டு வந்து காட்டிவிட்டு, பிறகு அதனை தன் கழுத்திலேயே போட்டுக் கொண்டார்கள். அளிக்கின்ற வகையிலே இந்தக் கலைத் துறைக்கு ஆகவேண்டிய எல்லா பணிகளையும் நான் ஆற்றி வருகிறேன்.

### திரைப்படத் தொழிலாளர்கள் வாழ்வதற்கான இடம்

தமிழிலே பெயர் வைக்கின்ற படங்களுக்கு கேளிக்கை வரியே கிடையாது என்ற ஒரு

நிலையை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். இதுபோன்ற மன்றங்களுக்கு முன்பெல்லாம் படப்பிடிப்பு என்றால், அதற்குச் செலுத்த வேண்டிய கட்டணத் தொகையை மிகக் குறைவாக ஆக்கி – வசதி செய்து கொடுத்திருக்கிறோம். அவர்களுடைய தொழிலுக்கு இன்றைக்கு முக்கியமான மூச்சாக, உயிராக இருக்கின்ற தொழிலாளர்களுக்கு, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் – கடந்த விழாவிலே கூட நம்முடைய ரஜினி அவர்களும், வேறு நடிகர்களும், நண்பர்களும் எடுத்துக்காட்டியதைப் போல அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் வாழ்வதற்கான ஒரு அருமையான இடத்தை நீங்களே தேர்வு

உரியதாக ஆகி, அதிலே அவர்கள் எல்லாம் குடி அமர்ந்து இதுபோன்ற ஒரு விழாவிலே நம்மையெல்லாம் பாராட்டவிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி திரையுலகத்திலே உச்சி முதல் உள்ளங்கால் வரையில் என்பதைப்போல – உள்ளங்கால் இல்லாவிட்டால் உச்சி இல்லை என்பதை உணர்ந்து – அந்த உள்ளங்காலையும் போற்றி – உச்சியையும் வாழ்த்தி – நான் இந்தக் கலையுலகத்திலே வாழுங்காலம் எல்லாம் என்னை அர்ப்பணித்துக் கொண்டு ஆக வேண்டிய காரியங்களைச் செய்வேன் என்று குறிப்பிட்டு – கலை உணர்வு இன்னும் என்னுடைய உடலிலே ஊறிக் கொண்டிருக்கின்றது –



செய்யுங்கள், நாங்கள் வழங்குகின்றோம் என்று குறிப்பிட்டேன். நண்பர் குகநாதன் அந்த இடத்தைத் தேர்வு செய்து அந்த இடம் பற்றிய விவரங்களை நிதித்துறை செயலாளரிடம் – நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க இருவரும் பேசி, அந்த இடத்தை அவர்களுக்குத் தருவதாக வாக்களித்து, விரைவில் அந்த இடம் அவர்களுக்கு

ஏனென்றால் சின்னக் குழந்தையாக நான் இருக்கும்போது கலை உணர்வால் நான் பாதிக்கப்பட்டவன். எங்கள் ஊர் திருக்குவளை கோவிலில் ஒரு உற்சவம் நடைபெற்றால், அதைப் பார்த்துவிட்டு வந்து, அதே உற்சவத்தை என்னுடைய வீட்டில் நடத்திக் கொண்டிருக்கின்ற அளவிற்கு கலை ஆர்வம் சின்னக் குழந்தையாக

இருந்தபோதே எனக்கு இருந்தது. அந்தக் கலையார்வம் தொடர்கின்ற காரணத்தினாலே தான் இன்றளவும் கலையுலகத்திலே ஏறத்தாழ எண்பது படங்கள் எழுதி முடித்த பிறகும்கூட இப்பொழுதும் 81–ஆவது படத்திற்கு உரையாடல் எழுதிக் கொண்டிருக்கின்றேன். அப்படி தீட்டப்படுகின்ற உரையாடல்களுக்காக கிடைக்கின்ற வருமானத்தை நான் எனக்காக வைத்துக் கொள்ளாமல் – என்னுடைய குடும்பத்திற்காக செலவழிக்காமல் – அதை கலைக் குடும்பங்கள் வாழவும், ஏழையெளிய இப்போது தங்கம் என்ன விலை என்பதை எண்ணிப் பார்த்து, பரவாயில்லை இது உயர்ந்த மாலைதான் என்றெண்ணி இதை நான் வைத்துக் கொண்டிருக்கிறேன். இது ஒன்றை மாத்திரம் கலையுலகத்தின் நினைவாக – கலையுலகக் காவலர்கள் என்பால் காட்டுகின்ற அன்பின் நினைவாக – இந்த விருதை எனக்குக் கொடுத்தார்களே ரஜினியும், கமலும், மற்ற கலைஞர்களும் அவர்களுக்கு நான் செலுத்துகின்ற மரியாதையாக – அதை உடனடியாக




நலிவுற்ற குடும்பங்கள் வாழவும் அந்த நிதியை முதல் அமைச்சர் நிவாரண நிதி மூலமாக வழங்கி விடுகிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அதைப்போல இங்கேயும், ஏதாவது ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் தருவார்கள், அதை இயல், இசை நாடக மன்றத்திற்கே வழங்கலாம் என்று வந்தேன். ஆனால் அப்படி அவர்கள் எதுவும் தரவில்லை. அவர்கள் ஒரேயொரு மாலையைத்தான் போட்டிருக்கிறார்கள். அந்த மாலை தங்கத்தால் ஆன ஒரு பதக்கத்தைக் கொண்ட மாலை. யாருக்காவது கொடுத்துவிட்டால், அவர்கள் எனக்கு அணிவித்ததற்கு மரியாதை இல்லாமல் போய்விடும். ஆகவே அதைக் கொடுக்காமல் அவர்களை என்னுடைய நெஞ்சிலே வைத்திருப்பதைப் போல கலையுலக மக்களையெல்லாம் என்னுடைய நெஞ்சிலே வைத்திருப்பதைப் போல இதை நான் வைத்துக் கொண்டிருக்கிறேன், இதை யாருக்கும் கொடுக்கமாட்டேன் என்று கூறி, இந்த விழாவிலே உங்களையெல்லாம் சந்திக்கும் அரிய வாய்ப்பு கிடைத்தமைக்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். ❖

# தமிழகத்தின் வருங்கால மின் தேவைக்காக மேலும் 5 ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்திக்கான திட்டங்களை நிறைவேற்றுகிறது தமிழக அரசு

14–12–2009 அன்று, தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தைத் தொடங்கிவைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் ஆற்றிய உரை.




தமிழ்நாடு மின்சார வாரியம் 1957ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டு 2007இல் பொன்விழா கண்டுள்ளது. இன்றைக்கு தமிழகத்தில் மின்வசதி பெறுவோர் எண்ணிக்கை 2 கோடியே 3 இலட்சத்து 87 ஆயிரமாகவும், மின்உற்பத்தி நிறுவு திறன் 10 ஆயிரத்து 214 மெகாவாட் ஆகவும் உள்ளது. இந்த வாரியம் மேலும் செம்மையாகச் செயலாற்றி, மின்உற்பத்தி மற்றும் மின் விநியோகத்தைப் பொதுமக்களின் தேவைக்கேற்ப வழங்குவதற்கு ஏதுவாக, மத்திய அரசு 2003இல் பிறப்பித்த சட்டத்தின்படி தமிழ்நாடு மின்சார வாரியத்தை,


- தமிழ்நாடு மின்சார வாரிய நிறுவனம்,
- தமிழ்நாடு மின்தொடரமைப்புக் கழகம்,
- தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

என 3 அமைப்புகளாகப் பிரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதன்படி, தமிழ்நாடு மின்தொடரமைப்புக் கழகத்தை இன்று தொடங்கி வைப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழகத்தின் மின்தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. தொழில் வளர்ச்சிக்குத் தேவைப்படும் கூடுதல் மின்சாரம், விவசாயிகளுக்குத் தேவையான இலவச மின்சாரம் ஆகியவற்றை வழங்குவதிலும் தமிழகம் சிறப்பாகச் செயல்பட்டு வருவதால் மின்உற்பத்தியைத் தொடர்ந்து அதிகரிக்க வேண்டியதில் கவனம் செலுத்துவது மாநில அரசிற்குக் கடமையாகிறது.

கடந்த கால ஆட்சியில் – இந்தக் கடமையைச் சரியாக நிறைவேற்றாததன் காரணமாகத் தற்போது தமிழகத்தில் மின் பற்றாக்குறை ஏற்பட்டு, அதைச்சரி செய்வதற்காக வெளி


உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை★2010 ஜூன் 23-27



15 ஆயிரத்து 152 மெகாவாட்டாக உயரும். இது நமது வருங்காலத் தேவையையும் கருத்தில் கொண்டு இந்த அரசினால் உருவாக்கப்பட்டுள்ள மின் திட்டங்கள் ஆகும்.

இந்த மின் திட்டங்களுடைய பணிகளை மேற்பார்வையிடுவதற்கும், இதன்மூலம் கிடைக்கும் மின்சாரத்தைச் சரியான முறையில் பகிர்ந்தளிப் பதற்கும் இப்போது புதிதாக ஏற்படுத்துகின்ற இந்தக் கழகங்கள் பயன்படும் என்று நான் நம்புகிறேன். ஏற்கெனவே அறிவித்தவாறு, தமிழகத்தைப் பொறுத்தவரையில் மின் வாரியம் எந்தக் காரணத்தைக் கொண்டும் தனியார் வசம் ஒப்படைக்கப்பட மாட்டாது.

மாநிலங்களில் இருந்தும், மையத் தொகுப்பில் இருந்தும் பெரும் செலவில் மின்சாரம் வாங்க வேண்டிய ஒரு கட்டாயச் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையை மாற்றுவதற்காக 2006ஆம் ஆண்டில் இந்த அரசு பொறுப்பேற்றபின், தற்போது உற்பத்தியாகும் 10 ஆயிரத்து 214 மெகாவாட் மின்சாரத்தை 15 ஆயிரத்து 152 மெகாவாட்டாக உயர்த்திடத் திட்டமிடப்பட்டது. இதற்காக, வடசென்னை அனல் மின் நிலையத்தில் 1,200 மெகாவாட் மின் உற்பத்திக்கும்; மேலும் அதே வடசென்னையில், தேசிய அனல் மின் நிலைய கழகத்துடன் இணைந்து 1,500 மெகாவாட் மின் உற்பத்திக்கும்; மேட்டூர் அனல் மின் நிலையத்தில் கூடுதலாக 600 மெகாவாட் மின் உற்பத்திக்கும்;

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துடன் இணைந்து 1,000 மெகாவாட் மின் உற்பத்திக்கும்;

உடன்குடியில் பாரத மிகுமின் நிலையத்துடன் இணைந்து 1,600 மெகாவாட் மின் உற்பத்திக்கும்

என மொத்தம் 5 ஆயிரத்து 900 மெகாவாட் மின் உற்பத்தி செய்திடப் புதிய மின்திட்டங்களுக்கு இந்த அரசு அனுமதி அளித்து, அதற்கான பணிகள் எல்லாம் தொடர்ந்து நடைபெற்று வருவதால் –

இந்தத் திட்டங்கள் எல்லாம் 2012 இறுதியில் முடிவடையும். அப்பொழுது, நமது மின்உற்பத்தி

இந்தப் புதிய மின் உற்பத்திக் கழகங்களை ஏற்படுத்தியதின் காரணமாக, பணியாளர் களுக்கும் அலுவலர்களுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்பதை நான் திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மூன்று நிறுவனங்களும், தமிழ்நாடு மின்சார வாரியத் தலைவர் தலைமையிலேயே தொடர்ந்து இயங்கும்.

இந்த மூன்று நிறுவனங்களிலும் உள்ள தொழிலாளர்கள், அலுவலர்கள் தங்களது விருப்பப்படி, எந்த நிறுவனத்தில் பணிபுரிய வேண்டும் என்பதை அவர்களே முடிவு செய்து கொள்ளலாம்.

மேலும், இந்த மூன்று நிறுவனங்களிலும் பணி புரியும் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்கள் இப்போது அடைந்து வரும் அனைத்துச் சலுகைகளையும் தொடர்ந்து பெறுவார்கள். இன்று தொடங்கப்படும் தமிழ்நாடு மின்தொடரமைப்புக் கழகம் தமிழகத்தில் சிறப்பான மின்விநியோகத்திற்கு உதவிட என் நல்வாழ்த்துகளை உரித்தாக்குகிறேன்.

★ ★ ★

# பொதுமக்கள் அனைவரும் சாலைப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஒத்துழைக்க வேண்டும்!

30-11-2009 அன்று நடைபெற்ற
சாலைப் பாதுகாப்பு மற்றும்
நகர்ப்புர போக்குவரத்து நிருவாகம்
பற்றிய தேசிய கருத்தரங்கை
தொடங்கிவைத்து
மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர்** அவர்கள்
ஆற்றிய உரை.




**சா**லைப் பாதுகாப்பு மற்றும் நகர்ப்புரப் போக்குவரத்து நிருவாகம் பற்றிய தேசியக் கருத்தரங்கைத் தொடக்கி வைப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தக் கருத்தரங்கு மிகவும் சரியான தருணத்தில் திட்டமிடப்பட்டுள்ளது. நமது நாட்டில், பயங்கரவாதத்தை விட சாலை விபத்துகளில் அதிகமானவர்கள் உயிரிழக்கின்றனர். நகர்ப்புர நிலைமைகளில் இது ஒரு அச்சுறுத்தலாகி விட்டது. எனவே இந்தக் கருத்தரங்கை இப்போது திட்டமிட்டுள்ளது மிகச் சரியானதும், காலத்தேயானதுமாகும் என்று நான் கருதுகிறேன்.

தமிழ்நாடு காவல்துறை தொடங்கப்பட்டு 150ஆவது ஆண்டை நிறைவு செய்கிறது. தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோதெல்லாம், மாநில அரசு காவல்துறையினரின் நல்வாழ்வுக்கு முன்னுரிமை அளித்து வந்துள்ளது.



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை★2010 ஜூன் 23-27

காவல்துறையினரின் பணி நிலைமைகளை மேம்படுத்தவும், மேலும் அதிகமான வசதிகளை செய்து தரவும் தி.மு.க. அரசுகளால் மூன்று காவல்துறை கமிஷன்கள் நியமிக்கப்பட்டன. இந்தக் கமிஷன்களின் பரிந்துரைகளின் அடிப்படையில், பல்வேறு நலத்திட்டங்கள் அமலாக்கப்பட்டு காவல்துறையும் நவீனமயமாக்கப்பட்டுள்ளது. எங்களது அரசால் 1973ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல்துறையில் பெண் போலீசார் சேர்க்கப்பட்டனர்.




தமிழ்நாடு காவல்துறைக்கு மிக உயர்ந்தபட்ச பயிற்சி அளிப்பதற்காக சர்வதேசத் தரத்திலான போலீஸ் அகாதமியும் இந்தியாவிலேயே மிகப்பெரியதுமான காவல்துறை பயிற்சி நிறுவனம் 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் என்னால் திறந்து வைக்கப்பட்டது.

இன்று நான் தமிழ்நாடு காவல்துறையின் 150 ஆண்டுகால வரலாற்றில் மைல்கற்களான தி.மு.க. அரசுகளின் மிகமுக்கியமான சாதனைகள் சிலவற்றை முன்னிலைப்படுத்திக் காட்டுகிறேன். நாங்கள் 150ஆவது ஆண்டைக் கொண்டாடும்போது, இந்த சாதனைகள் அனைத்தையும் எதிர்கால சந்ததியினர் பயனடைவதற்காக ஆவணப்படுத்தி முன்னிலைப்படுத்த வேண்டும். இந்த உண்மைகளை மறைக்க முயலுபவர்கள் பொய்யர்களே ஆவர்.

சாலைப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தமிழக அரசு நகர்ப்புரப் போக்குவரத்து நிருவாகத்துக்கு மிகவும் முக்கியத்துவம் அளித்துள்ளது. சாலையில் இயங்குதலும் பாதுகாப்பும் நகரத் திட்டமிடுவோர் எவரும் சமாளிக்க வேண்டிய சவாலாகும்.

சாலை விபத்துகளில் பலியாவோரில் ஏறத்தாழ 80 சதவீதத்தினர் பாதசாரிகள் ஆவர் என்று கணிக்கப்பட்டுள்ளது. பெரிய நகரங்களில் தெருக்களில் உறங்கும் வீடற்றவர்கள் பாதிப்புக்குள்ளாகும் பிரிவினராக உள்ளனர். வளர்ந்து வரும் நகரங்களில் போக்குவரத்து நிருவாகம் எதுவும் தவிர்க்காமல் இப்படி பாதிப்புக்குள்ளாகக் கூடியவர்களைப் பற்றி கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

சாலைகளின் நீள, அகலங்களின் அதிகரிப்பையும் மீறி கடந்த பல ஆண்டுகளாக வாகனங்களின் எண்ணிக்கை வளர்ச்சி கவலைக்குரிய மற்றொரு பிரச்சினையாகும். உதாரணமாக, சென்னை மாநகரில் சாலைகளின் நீள அகலங்கள் ஏறத்தாழ அதிகரிக்காமல் நின்றுவிட்டன. இருப்பினும் வாகனங்களின் எண்ணிக்கை கடந்த 15 ஆண்டுகளில் மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பில் இருசக்கர வாகனங்களின் பங்கு கணிசமாக உள்ளது. இது மாநகரில் விபத்துகள் அதிகரித்துவரும் போக்கிற்கு காரணமாக உள்ளது.

ஒரு பகுதியின் பொருளாதார வளர்ச்சி சாலைப் பாதுகாப்பின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தொழில் வளர்ச்சியினால், சென்னை மாநகரில் வர்த்தக கண்டெய்னர் லாரிகளின் போக்குவரத்து அதிகரித்துள்ளது. எனவே, நகர்ப்புரங்களில் போக்குவரத்து நிருவாகம் பற்றிய முழுமையான மறுபரிசீலனை தேவைப்படுகிறது.

சாலை விபத்துகளில் பலியாவோர் எண்ணிக்கை அதிகரித்து வருவது பற்றி நான் மிகவும் கவலைப்படுகிறேன். நமது நாட்டில் ஒவ்வொரு மணி நேரமும் 13 பேர் சாலை விபத்துகளில் பலியாகின்றனர் என்றும், உலகிலேயே நமது நாட்டில்தான் பலியாவோர் அதிகமான விகிதத்தில் உள்ளனர் என்றும் அறிந்து துயரம் அடைகிறேன். இந்த நிலைமையின் ஆபத்தை தமிழ்நாடு உணர்ந்துள்ளது. சாலை விபத்துகளில் சிக்கியவர்களுக்கு உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்கப்படுவதை உறுதி செய்ய கடந்த ஆண்டு என்னால் துவக்கி வைக்கப்பட்ட அவசரகால நிருவாகச் சேவை (EMS) இத்தகைய சம்பவங்களை சமாளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த சேவையில் கவனிக்கப்படும் சம்பவங்களில் 32 சதவீதம் சாலைகளில் ஏற்படும் விபத்துகள் சம்பந்தப்பட்டவைகளாக உள்ளன.

சாலைப் பாதுகாப்பும், போக்குவரத்து நிருவாகமும், காவல்துறை மற்றும் அரசு நிருவாகத்தினர் தனிப் பொறுப்பு மட்டுமல்ல. தொடர்புடைய அனைத்துப் பிரிவினரும் அனைவருக்கும் சாலைகளைப் பாதுகாப்பானவைகளாக மாற்ற பங்களிப்பினைச் செலுத்த வேண்டும். பள்ளி மட்டங்களிலிருந்தே சாலைப் பாதுகாப்பும், போக்குவரத்து நிருவாகமும் பாடத்திட்டத்தின் பகுதியாக இருக்க வேண்டும். புதிய விளையாட்டு முறைகள் மற்றும் ஒய்வு நேர செயல்பாடுகள் மூலமாகக் குழந்தைகளுக்கு இந்த அம்சங்கள் குறித்து உணர்வூட்ட வேண்டும்.

சாலைப் பாதுகாப்பின் முக்கியத்துவம் பற்றி உணர்ந்து செயலாற்றுதல் ஆகியவை அமலாக்க இயந்திரத்தின் முன்னுரிமையாக இருக்க வேண்டும். சாலையில் நிற்கும் காவலர் அரசு அதிகாரத்தின் சின்னம் என்ற பாத்திரத்துடன் நில்லாமல், சாலைகளைப் பயன்படுத்துவோரின் பாதுகாப்புக்கும் நலனுக்கும் பொறுப்பான பிரச்சினை தீர்ப்பாளர் என்ற அவரது பாத்திரத்தையும் உணர வேண்டும். போக்குவரத்துப் பிரச்சினைகளை சமாளிக்க உள்ளூர் அளவில் பொறுப்புணர்வை வளர்க்க அவர்கள் செயலாக்கத்துடன் பங்காற்ற ஈடுபடுத்தவும், ஊக்கமளித்திடவும் வேண்டும்.

போக்குவரத்து நிருவாகத்தில் நாம் சாலை பொறியியல் அம்சங்களுக்கு அதிகபட்ச முக்கியத்துவம் அளிக்க வேண்டும். காலங்காலமாகப் போற்றப்பட்டு வரும் போக்குவரத்து அமைப்பு மற்றும் சாலை அமைப்புகள் ஆகியவை வெற்றிகரமான தீர்வுகளை வழங்கலாம்.

வளர்ந்து வரும் பொருளாதாரத்திற்கும், சாலைகள் வளமைக்கு மிகவும் முக்கியமானவையாகும். ஒவ்வொரு குடிமகனுக்கும் நாம் பாதுகாப்பான, இடரற்ற பயணத்தை உறுதி செய்ய வேண்டும். சாலைப் பாதுகாப்பு மற்றும் நகர்ப்புரப் போக்குவரத்து நிருவாகம் தொடர்பான முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க நாடு முழுவதுமிருந்து இங்கு வந்துள்ள வல்லுநர்களை நான் வரவேற்கிறேன். உங்களுடைய கூட்டு விவாதங்கள் அனைவரது நலனுக்காகவும் முறையான, செயல்படுத்தப்படக் கூடிய தீர்வுகளைக் காணும் என்பதில் ஐயமில்லை. இந்தக் கருத்தரங்கம் வெற்றி பெற வாழ்த்துகிறேன். ★




உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு–கோவை ★ 2010 ஜூன் 23-27

# கும்மிடிப்பூண்டி அருகே 4 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் டயர் உற்பத்தித் தொழிற்சாலை!

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் தலைமையில்

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்களின் முன்னிலையில்

பிரான்சு நாட்டு மிச்சலின் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்.



**பி**ரான்ஸ் நாட்டைச் சார்ந்த மிச்சலின் நிறுவனம் உலகின் மிகப்பெரிய டயர் உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றாகும். 19 நாடுகளில் 1 இலட்சத்து 21 ஆயிரம் பணியாளர்களுடன் ஆண்டுக்கு 190 மில்லியன் டயர்களை உற்பத்தி செய்யக் கூடிய 69 தொழிற்சாலை களையும், 3 தொழில்நுட்ப மையங்களையும், 2 ரப்பர் தோட்டங்களையும் கொண்டுள்ள மிச்சலின் நிறுவனம் 2007ஆம் ஆண்டில் 1,079 பில்லியன் ரூபாய் அளவிற்கு விற்று முதல் செய்துள்ளது.

இத்தகைய மிகப்பெரிய மிச்சலின் டயர் நிறுவனம் தமிழ்நாட்டில் அமைந்துள்ள தொழில் முதலீடுகளுக்குரிய சாதகமான சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டத்தில் அமையவிருக்கும் சிப்காட் தொழில் வளாகத்தில் 290 ஏக்கர் நிலப்பரப்பில் டயர் தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றினை அமைத்திட முடிவு செய்துள்ளது. ஒருங்கிணைந்த மோட்டார் வாகனத் திட்டங்களைத் தவிர்த்து, மிச்சலின் நிறுவனம் ஒரே இடத்தில் அமைக்கும் இந்த மிகப் பெரிய டயர் உற்பத்தித் திட்டம், 7 ஆண்டு காலத்தில் 4,000 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகள் செய்யும்; 1,500 பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகள் வழங்கும். மேலும், கும்மிடிப்பூண்டி வட்டாரத்தில் தொழில்கள் வளர்ச்சி அடைவதற்கான புதிய

ஊக்கத்தினையும் இத்திட்டம் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் முன்னிலையில், இந்த மிச்சலின் டயர் உற்பத்தித் தொழிற்சாலை அமைக்கப் படுவதற்காக 16.11.2009 அன்று நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பாக தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு. எம்.எப். பாரூக்கி, இ.ஆ.ப., மிச்சலின் இந்தியா தமிழ்நாடு டயர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் சார்பாக அந்நிறுவனத்தின் ஆப்பிரிக்கா இந்தியா மத்தியக் கிழக்கு நாடுகளுக்கான தலைவர் திரு. பிரசாந்த் பிரபு ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வின்போது, மிச்சலின் நிறுவனத்தின் இந்திய திட்ட இயக்குநர் நிகோலஸ் ப்யூ மோன், ஆப்பிரிக்க இந்திய, மத்தியக் கிழக்கு நாடுகளுக்கான விற்பனைத் துறைத் தலைவர் திரு. வெங்கடேஷ் ரங்காச்சாரி, வரி மற்றும் சட்டத்துறை துணைத் தலைவர் திரு.ஹாக்சென்சான், திட்ட மேலாளர் (அனுமதிகள்) திரு. டாமினிக் கெலோபின், பொது ஆலோசகர் திருமதி. நந்திதா குரானா ஆகியோரும்; தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித் துறை முதன்மைச் செயலாளர் திரு.கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., சிப்காட் நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் என். கோவிந்தன், இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் வழிகாட்டி அமைப்பின் செயல் துணைத் தலைவர் எம்.வேல்முருகன் ஆகியோர் கலந்துகொண்டனர். ❖



தமிழகத்தில் ஏரோ ஸ்பேஸ் தொழிற்பூங்கா அமைப்பது குறித்து
சிங்கப்பூரில் அந்நாட்டு அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளுடன்
மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்
ஆலோசனை நடத்தினார். (24-11-2009)

# தமிழக முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு தமிழக அரசின் சார்பில் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நலத்திட்ட உதவிகள் !

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் அறிவிப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் **12-11-2009** அன்று தமிழக அமைச்சரவையின் நாற்பதாவது கூட்டம் நடைபெற்றது.

"மேலும் இந்தப் பேரிடர்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தொடர்ந்து நிவாரணப் பணிகளில் ஈடுபட வேண்டுமென்று மக்கள் பிரதிநிதிகள் அனைவரையும் இந்த அமைச்சரவை கேட்டுக் கொள்கிறது"



கூட்டத் தொடக்கத்தில், "அண்மையில் பெய்த பெரு மழை, புயல் காரணமாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகள் பாதிக்கப்பட்டு – குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில் நூறுக்கு மேற்பட்ட இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டு – அவற்றின் காரணமாக சுமார் 80 பேர் உயிரிழப்புக்கு உள்ளாகியிருக்கின்றார்கள். அவர்களின் குடும்பத்தினருக்கு அமைச்சரவை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

என்ற தீர்மானமும் அடுத்து நிறைவேற்றப் பட்டது.

வெள்ள நிவாரணப் பணிகள் மற்றும் நிவாரண நிதி உதவிகள் வழங்குதல் ஆகியவற்றை உடனடியாகத் தொடர்புடைய அனைத்து அரசுத் துறைகளும் மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துவதுடன், நிலச்சரிவு மிக அதிக அளவில் நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு, தேவையான நிலச்சரிவுத் தடுப்புப்

பணிகள் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சரவையில் முடிவு செய்யப்பட்டது.

அடுத்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிவுரைக்கிணங்க தமிழகத்தில் வாழும் இலங்கைத் தமிழர்களின் முகாம்களை கடந்த ஒரு வார காலமாகப் பார்வையிட்ட தமிழக அமைச்சர்கள் தந்த பரிந்துரைகள் பற்றி அமைச்சரவையில் விரிவாக விவாதிக்கப் பட்டு பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

தமிழகத்தில் வாழும் இலங்கைத் தமிழர்களின் துயரங்களை உடனடியாக களைய தமிழக அரசின் சார்பில் ஒட்டு மொத்தமாக 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்குவதென்று முடிவெடுக்கப்பட்டது.

தமிழகத்தில் பல்வேறு முகாம்களிலும் உள்ள 5 ஆயிரத்து 982 குடியிருப்புகளைப் பழுதுபார்த்துப் புதுப்பிக்கும் பணியை உடனடியாக மேற்கொள்ளுதல்; முகாம்களில் குடிநீர் வசதிகளை மேம்படுத்துதல்; புதிய கழிவறைகள் கட்டுதல்; பழைய கழிவறை களைப் பழுதுபார்த்தல்; புதிய கழிவுநீர்க் கால்வாய்கள் அமைத்தல்; பழைய கழிவுநீர்க் கால்வாய்களைப் பழுதுபார்த்தல்; முகாம்களில் உள்ள சாலைகளைச் சீரமைத்தல்; மின்கம்பங்கள் மற்றும் தெரு விளக்குகள் அமைத்தல்; வீடுகளில் உள்ள மின் இணைப்புகளைப் பழுதுபார்த்தல் ஆகிய பணிகளுக்காக 37 கோடியே 33 இலட்சம் ரூபாயும்;

**கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இலங்கைத் தமிழர்களும் பயன்பெறலாம்!**

தமிழக முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழர்கள் தங்களது உடைமைகள் அனைத்தையும் தங்கள் நாட்டில் இழந்து இங்கு அரசு வழங்கும் மாதாந்திர பணக் கொடையினை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வருவதால் ஆண்டு வருமானம் 72 ஆயிரம் ரூபாய்க்கும் குறைவாக உள்ள மக்களுக்கு தமிழக அரசு நடைமுறைப்படுத்தி வரும் உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தை முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுபடுத்த ஒரு கோடி ரூபாயும்;

தமிழக மக்களுக்கு வழங்கப்படுவது போல் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள் குடும்பங் களுக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிட 4 கோடியே 54 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாயும்;

தமிழகத்திலுள்ள ஏழைப் பெண்களின் திருமணங்களுக்குத் தலா 20 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கிடும் திருமண நிதியுதவித் திட்டத்தை, முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழர் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களும் பயனடையும் வகையில் நீட்டித்திடவும் அதனடிப்படையில் ஏறத்தாழ 1,200 பெண்களின் திருமணங்களுக்கு திருமண நிதியுதவி வழங்க 2 கோடியே 40 இலட்சம் ரூபாயும்;

முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களின் விளையாட்டுத் திறன்களை மேம்படுத்தும் வகையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையரகம் வாயிலாக, ஏறத்தாழ 4 இலட்சத்து 1,000 ரூபாயும்;

தமிழகத்தில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு இலவசப் பேருந்து பயண



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜூன் 23-27

அட்டை வழங்கும் திட்டத்தை நீட்டித்து, கல்லூரிகளில் பயின்று வரும் முகாம்வாழ் 354 மாணவ–மாணவிகளுக்கும் ஏறத்தாழ 8 இலட்சத்து 7 ஆயிரம் ரூபாயும்;

– என மொத்தம் 45 கோடியே 39 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய் செலவில், முதற்கட்டமாக, தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கான முகாம்களில் கூடுதல் வசதிகளை ஏற்படுத்தி, நலத்திட்ட உதவிகள் வழங்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளதாக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார். தொடர்ந்து மீதமுள்ள 54 கோடியே 60 இலட்சத்து 33 ஆயிரம் தொகையினை அவர்களுக்குப் புதியதாக கான்கிரீட் வீடுகள் கட்டப் பயன்படுத்திக் கொள்வதென்றும் அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார்.

**ஊனமுற்றோருக்கு உதவி நிதி – உபகரணங்கள்!**

மேலும், தமிழகத்தில் ஊனமுற்றோர் களுக்கு, அவர்களின் ஊனத்தின் தன்மை மற்றும் தகுதிக்கேற்ப அரசினால் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டத்தை நீட்டித்து, உடல் ஊனமுற்ற முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் இலவச செயற்கை உறுப்பு உபகரணங்கள், உதவித் தொகையுடன் கூடிய பள்ளிக் கல்வி, மூன்றுசக்கர கையுந்து ஆகியவற்றை ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறை வாயிலாக வழங்குதல்;

ஈமச்சடங்கிற்காக 12 வயதிற்கு மேற்பட்ட பெரியவர்களுக்கு 500 ரூபாயும், சிறியவர்களுக்கு 300 ரூபாயும் 19.9.2008 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதியுதவியினை மேலும் உயர்த்தி, தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரிய உறுப்பினர்களின் குடும்பங்களில் ஈமச் சடங்கிற்காக 2 ஆயிரத்து 500 ரூபாய் வழங்கப்படுவதுபோல, இவர்களுக்கும் வழங்குதல்;

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள் சில குறிப்பிட்ட காரணங்களுக்காக அனுமதி பெற்று வெளி மாவட்டங்களுக்குச் செல்லும்போது உடனடியாகத் திரும்ப இயலாத நிலை ஏற்பட்டால் பணக்கொடை வழங்கும் நாளில் அவர்கள் முகாமிற்கு வருகை தந்து பணக் கொடை பெற்றுக் கொள்ள சிறப்பு அனுமதி வழங்குதல்;

**ஓட்டுநர் உரிமம்!**

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு 2008ஆம் ஆண்டு அரசு வழங்கிய தெளிவுரைகளின் அடிப்படையில் ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டு வருகிறது. இலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தினைக் கருத்தில் கொண்டு தற்போதுள்ள விதிமுறைகளைத் தளர்வு செய்து சம்பந்தப்பட்ட முகாம் பொறுப்பு வட்டாட்சியரின் பரிந்துரை மற்றும் இலங்கைத் தமிழர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அடையாள அட்டையின் அடிப்படையில் ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்கேற்ப திருத்திய தெளிவுரைகள் வழங்க ஆவன செய்தல் போன்ற சலுகைகளும் வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

★ ★ ★

# இலங்கை அகதிகள் முகாம்களின் அடிப்படை வசதிகள் மேம்பாட்டிற்காக தமிழக அரசின் சார்பில் உடனடியாக ரூ.12 கோடி அனுமதி!



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு.கருணாநிதி** அவர்களின்
தலைமையில் நடைபெற்ற
சிறப்பு ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் 2.11.2009 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் பிரச்சினை குறித்த சிறப்பு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு நா.வீராசாமி, மாண்புமிகு உயர்கல்வி மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி, மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு, மாண்புமிகு குடிசை மாற்று வாரியம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடுத்துறை அமைச்சர்


உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜுன் 23-27

திரு. சுப.தங்கவேலன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு, மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன், தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித் துறை முதன்மைச் செயலாளர் திரு. கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., பொது மற்றும் உள்துறை (கூடுதல் பொறுப்பு) செயலாளர் திரு. ஜோதி ஜெகராஜன், இ.ஆ.ப., மறுவாழ்வுத் துறை இயக்குநர் எம்.முத்தையா கலைவாணன்,இ.ஆ.ப., காவல்துறை தலைவர் (நுண்ணறிவு) திரு. ஜாபர்சேட், இ.கா.ப., மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இலங்கைத் தமிழ் அகதிகள் மிகுந்த அவதியுறுவதாக வந்த செய்தி குறித்து விவரங்களைக் கோரினார். அவர்களும் தமிழர்கள் என்பதை மறவாமலும் – அவர்களை அகதிகள் என்ற நோக்கத்தோடு பார்க்கக் கூடாது என்றும் கூறி, இந்தப் பிரச்சினைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அவர்களின் அல்லல்களுக்கு உடனடித் தீர்வு காண வேண்டுமென்று வலியுறுத்தினார்.

### அடிப்படை வசதிகள்

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு கழக அரசு காலத்தில் செய்யப்பட்ட பல்வேறு சலுகைகளை பற்றிய விவரங்களைக் கேட்ட பின்னர், தொடர்ந்து அவர்களுக்கு எந்த விதத்தில் உதவி அளிக்க வேண்டும் என்பதைப் பற்றி அறிந்திட தமிழகத்திலே உள்ள 115 முகாம்களுக்கும் உடனடியாக அமைச்சர்கள் சென்று நேரிலே நிலைமைகளை அறிந்து, நவம்பர்த் திங்கள் 10ஆம் தேதிக்குள் முதல் அமைச்சருக்கு அறிக்கையினை அளிக்க வேண்டுமென்றும், அந்தப் பரிந்துரை களின் அடிப்படையில் அவர்களுக்குத் தேவையான உதவிகள் அளிக்கப்பட வேண்டுமென்றும் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

2006ஆம் ஆண்டு தி.மு.கழக அரசு ஐந்தாவது முறையாகப் பதவியேற்ற பிறகு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அமைச்சர்களையெல்லாம் இதுபோல முகாம்களைப் பார்வையிட அறிவுறுத்தியதின் பேரில் அவர்களும் அவ்வாறு சென்று அளித்த அறிக்கையினையொட்டி, முகாம்களில் உள்ள வீடுகளுக்கு மறு சீரமைப்பு செய்திடவும், அடிப்படை வசதிகளைச் செய்து தரவும் சுமார் 16 கோடி ரூபாய்க்கான முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு, அது மத்திய அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்டு பரிசீலனையிலே உள்ளது.


மத்திய அரசிடமிருந்து அதற்கு ஒப்புதல் இன்னமும் வராத நிலையில் 2009–2010ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் தமிழக அரசின் சார்பில் ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது அமைச்சர்கள் முகாம்களைப் பார்வையிட்டு நவம்பர் 10ஆம் தேதிக்குள் அறிக்கை அளித்தபின், அதன் அடிப்படையில் மேலும் இந்த முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு உதவிடும் வகையில் அடிப்படை வசதிகள் மேம்பாட்டிற்காக 12 கோடி ரூபாய் தமிழக அரசின் சார்பில் உடனடியாகச் செலவிடுவது என்றும், அந்தத் தொகையை எவ்வாறு செலவழிப்பது என்பது பற்றி நவம்பர் 10ஆம் தேதிக்குப் பிறகு அமைச்சர்களின் அறிக்கையின் அடிப்படையில் மேல் நடவடிக்கைகளை எடுப்பது என்றும் இன்றைய கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

❖ ❖ ❖

# சுற்றுலாவின் மூலமாக பொருளாதார வளத்தைப் பெருக்கமுடியும்

சென்னை தீவுத்திடலில் 36ஆவது இந்திய சுற்றுலா – தொழில் பொருட்காட்சியை தொடங்கிவைத்து மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை:– (22–12–2009)


**நா**ன் இந்த அரங்கத்திற்குள்ளே நுழைந்து இந்த மேடைக்கு வந்ததும் – மேடையிலிருந்து எதிரே பார்த்தேன். விழாவினை நடத்துகின்ற



இறையன்பு அவர்களையும் தம்பி சுரேஷ் ராஜன் அவர்களையும் நான் கூப்பிட்டு "ஏனய்யா, இவ்வளவு கூட்டம் அமைதியாக அமர்ந்திருக்கும்போது – அங்கே மாத்திரம் 200 பேர் பின்னால் திரும்பிக் கொண்டு கூட்டமாக நின்று கொண்டிருக்கிறார்களே ஏன்" என்று கேட்டேன். அவர்கள் ஒரு நமட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டு, "அது கூட்டம் அல்ல, கூட்டம் போல் இருக்கின்ற ஓவியம்" என்றார்கள். இதைவிட வேறு ஒரு சிறப்பு இந்தப் பொருட்காட்சிக்கு தேவையில்லை என்றே நான் கருதுகின்றேன். இதைப் பார்ப்பதற்கே மக்கள் தினந்தோறும் வருவார்கள். வருகின்றவர்கள் கலைஞர்



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை★2010 ஜூன் 23-27



காப்பீட்டுத் திட்டத்திற்காக சீட்டுகளை வாங்க வருவதைவிட, இந்த பிரமாண்டமான பொருட்காட்சியில் மிக மிக அதிக அளவிற்கு இந்த ஓவியத்தைப் பார்ப்பதற்காகவே வருவார்கள் என்பதிலிருந்தே இந்தப் பொருட்காட்சியின் சிறப்பை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம்.

**இராமாயணம் – சிலப்பதிகாரம்**

நம்முடைய ரமேஷ் பிரபா அவர்கள் இங்கே தொகுப்புரை ஆற்றும்போது, இந்த நிகழ்ச்சிக்கு நான் வந்திருப்பதற்கு உரிய பெருமையை எடுத்துச் சொன்னார்கள். இந்தப் பொருட்காட்சி – கண்காட்சி நடைபெற வேண்டுமென்று 1971ஆம் ஆண்டிலேயே நான் ஆவல் கொண்டு, 74ஆம் ஆண்டு தான் முதன்முதலாக சுற்றுலாப் பொருட்காட்சி இங்கே அமைக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டு தொடர்ந்து 36 ஆண்டு காலமாக இது நடைபெற்று வருகின்றது. இடையிடையே அரசுகள், ஆட்சிகள் மாறினாலுங்கூட, சுற்றுலாப் பொருட்காட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதை நடத்துவதற்குக் காரணமாக இருக்கின்ற அனைவரையும் நான் பாராட்டுகின்றேன்.

சுற்றுலா ஒரு நாட்டின் பொருளாதாரத்தை வளப்படுத்தக்கூடியது, விரிவாக்கக்கூடியது. நம்முடைய நாட்டில் எழுதப்பட்டுள்ள இதிகாசங்கள், இலக்கியங்கள், வரலாறுகள் எல்லாம் சுற்றுலாவிற்குப் பயன்படக் கூடியவை. சுற்றுலாவை மனதிலே வைத்துக் கொண்டு எழுதப்பட்ட இலக்கியங்கள், இதிகாசங்கள், வரலாறுகள் எல்லாம் நிறைய உண்டு. குறிப்பாக ராமாயணத்தை எடுத்துக் கொண்டால், ராமன் அயோத்தியிலேயிருந்து தண்டகாருண்யம் வரையிலே வந்து வேதாரண்யத்திலே இருக்கின்ற கோடியக் கரையிலே நின்று – அங்கிருந்து இலங்கைத் தீவைப் பார்த்தான் என்று ராமாயணத்திலே எழுதப்பட்டு – அதற்கான சின்னங்கள் எல்லாம் இன்றைக்கும் இருக்கின்றன. கோடியக்கரையிலே ஒரு இடத்திலே ஒரு கருங்கல் பதிந்திருக்கும் – அதில் "ராமன் நின்று இலங்கையைப் பார்த்த இடம் இது" என்று எழுதப்பட்டிருக்கும். ராமன் நின்று பார்த்தானோ இல்லையோ, ஆனால் எழுதப் பட்டிருக்கும். இதெல்லாம் சுற்றுலா வளர்ச்சிக்கு இன்றைக்கும் பயன்படுகின்றன. அந்தப் பகுதிக்குச் செல்கின்றவர்கள் சென்னைக்கு வந்தால் என்ன சொல்வார்கள் ? வேதாரண்யம், கோடியக்கரைக்குப் போயிருந்தேன், அங்கே ராமன் பாதம் எல்லாம் இருக்கின்றது என்று சொன்னால், அதைக் கேட்பவர்கள் தாங்களும் போய் அதைப் பார்த்துவிட்டு வர வேண்டும் என்ற ஆவலோடு செல்வார்கள். இப்படியே சுற்றுலா ஒருவர் சொல்லி ஒருவர் கேட்டு வளர்ந்திருக்கின்றது.


அதற்கு தக்கவாறு தான் நம்முடைய இலக்கியங்களும், இதிகாசங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. சிலப்பதிகாரத்தை எடுத்துக்கொண்டால் கண்ணகி பூம்புகாரிலிருந்து கோவலனோடு புறப்பட்டு, மதுரைக்குச் சென்று, மதுரையிலே விற்கச் சென்ற சிலம்பு காரணமாக கள்வர் பட்டம் கட்டப்பட்டு, அதன் விளைவாக கோவலன்

கொலையுண்டு, கொலையுண்ட கோவலனுக்காக கண்ணகி நீதி கேட்க – மதுரை மன்னன் பாண்டிய நெடுஞ்செழியனுடைய கொலுமண்டபம் சென்று – அந்தக் கொலுமண்டபத்திலே வழக்குரைத்து – அதற்குப் பிறகு கண்ணகி அங்கேயுள்ள மக்களிடம் தன் குறையைச் சொல்லி, அது வரையிலே சிலப்பதிகாரம் போய் முடிகிறது. நீங்கள் பார்த்தால், பூம்புகாரிலே நடந்த கதை, பூம்புகாரிலே பிறந்த கண்ணகி, பூம்புகாரிலிருந்து கோவலனால் ஏமாற்றப்பட்ட கண்ணகி – அந்தக் கண்ணகியின் கதை பூம்புகாரிலேயே முடிந்திருக்க வேண்டியதை இளங்கோவடிகள் – அதோடு நிறுத்தாமல் – எதிர்காலத்திலே சுற்றுலாவிற்குப் பயன்படும் என்பதற்காக – மதுரை மாநகரத்தையும், மதுரைக்குச் செல்கின்ற வழியிலே அவர்கள் கண்ட பல காட்சிகளையும், சுற்றுலாவிற்குப் பயன்படுகின்ற வகையிலே விவரித்து, வர்ணித்து, இறுதியாக வஞ்சி மூதூர் வரையிலே கதையை நீட்டிச் செல்கிறார் என்றால், அவைகள் எல்லாம் சுற்றுலாவிற்குப் பயன்பட்ட – பயன்பட்டுக் கொண்டிருக்கின்ற நம்முடைய இலக்கிய ஓவியங்களாகும்.

எனவே இதிகாசம் ஆனாலும், இதிகாசமான ராமாயணம் ஆனாலும் தமிழ் இலக்கியமான சிலப்பதிகாரம் ஆனாலும், அவைகளை எல்லாம் எழுதியவர்கள் சுற்றுலா கண்ணோட்டத்தோடு தான் எழுதியிருக்கிறார்கள் என்பதை நாம் படிக்கும்போது புரிந்துகொள்ள முடிகிறது. ஆகவே அந்தக் காலத்திலேயே சுற்றுலாவிற்காக விளம்பரங்கள், ஆக்க பூர்வமான கருத்துகள் வழங்கப் பட்டிருக்கின்றன என்பதற்கு இவைகள் எல்லாம் உதாரணங்களாகும். எனவே சுற்றுலா ஒரு நாட்டிலே பெருகினால் தான், உலகம் முழுதும் இருக்கின்ற நாடுகளிலே உள்ள மக்கள் – அந்த நாட்டிற்கு வந்து சுற்றுலாவின் மூலமாகப் பொருளாதார வளத்தை அந்த நாட்டிற்கு அவர்களுக்குத் தெரியாமலேயே அதனை வழங்கி, அதன்மூலமாக அந்த நாட்டின் வளத்தைப் பெருக்குகின்ற ஒரு நிலை ஏற்படும்.

**சென்னையின் மாற்றம்**

வெளிநாடுகளுக்குச் செல்கிறோம் என்றால், பிரெஞ்ச் நாட்டிற்குச் சென்றால் அங்கே கொடிய லூயி மன்னன் வாழ்ந்த இடம் எது என்று காட்டுவதற்கு நூல்கள், கட்டுரைகள், அதற்கான அரசின் ஏற்பாடுகள் இவைகள் அத்தனையும் இருக்கின்றன. இவைகள் எல்லாம் சுற்றுலாவிற்கு பயன்படக் கூடிய அளவிற்கு இருக்கின்றன. நம்முடைய



இந்தியாவிலும் மற்ற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், சுற்றுலா மூலமாக வருகின்ற வருமானம் மற்ற நாடுகளை விட இந்தியாவில் குறைவாகத்தான் இருக்கும். ஆம் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. அந்த வருமானத்தைப் பெருக்குவதின் மூலம் உலக அறிவைப் பெற்றுக் கொள்ளவும், சுற்றுலாவின் பயன்களை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லவும் நமக்கெல்லாம் கடமை உண்டு. அந்தக் கடமை இருப்பதால் தான் இங்கே இந்தச் சுற்றுலாக் கண்காட்சியைப் பல்வேறு விதமான அறிவுரைகளை வழங்குகின்ற களஞ்சியமாக நாம் நிர்மாணித்திருக்கிறோம்.

சென்னை மாநகரத்திலே ஏற்பட்டிருக்கின்ற வளர்ச்சியை இங்கே எடுத்துச் சொன்னார்கள். பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஏன் நான் சென்னைக்கு குடிவந்த அந்தக் காலத்தில் சென்னை மாநகரம் இருந்த நிலைமையையும், இன்றைக்கு சென்னை மாநகரம் மாறியிருக்கின்ற நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்து நான் ஆச்சரியத்தில் முழுகுகின்றேன். இந்தச் சென்னை மாநகரத்தில் 15 ஆண்டுகள் அல்ல, 15 மாதங்களுக்கு முன்பு கூட சென்னை மாநகரத்திலே இருக்கின்ற கட்டடங்களைக் காண முடியாத அளவிற்கு தட்டிகள், விளம்பரப் பதாகைகள் இவைகள் எல்லாம் சென்னை மாநகரத்திலே இருந்த காட்சியை நீங்கள் யாரும் மறந்திருக்க முடியாது. நான் டெல்லி, பெங்களூர் போன்ற இடங்களுக்குச் சென்றபோது அங்கே கண்ட காட்சியை எங்கேயும் சாலையோரங்களில் பெரிய பெரிய பலகைகளை வைத்து, விளம்பரங்களை வைத்து, மாளிகையையோ மண்டபங்களையோ, இயற்கை காட்சிகளையோ யாரும் அங்கே மறைக்கவில்லை.

ஆனால் சென்னையிலேதான் அவைகள் மறைக்கப்பட்டிருந்தன. நான் நம்முடைய அதிகாரிகளையெல்லாம் அழைத்து அவர்களிடம் கேட்டுக்கொண்டு அவர்கள் விரைவாகவும், வேகமாகவும் செயல்பட்ட காரணத்தால், சென்னை மாநகரத்திலே ஒரே நாளில் இருந்த எல்லா விளம்பரப் பலகைகளும் அகற்றப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். பத்திரிகைகளில் எல்லாம் விளம்பரங்கள் வந்தன. “கலைஞர் அவர்களே, முதலமைச்சர் அவர்களே, கருணை கூர்ந்து அந்த விளம்பரப் பலகைகளை எல்லாம் மீண்டும் அங்கே அமைப்பதற்கு வழி செய்யுங்கள்” என்று எனக்கு வேண்டுகோள் விடுத்து ஒவ்வொரு நாளும் நாளேடுகளில் ஒரு பக்க விளம்பரங்கள் வந்து கொண்டே இருந்தன. நான் அதையெல்லாம் பார்க்காதவன் போல இருந்து விட்டேன். அப்படி இருந்த காரணத்தால் தான் இன்றைக்கு கண்களை அகல விரித்துப் பார்க்கிறேன். சென்னை மாநகரத்தின் முழு அழகையும் என்னால் காண முடிகிறது, நீங்களும் கண்டு கொண்டிருக்கிறீர்கள். இந்த முழு அழகைக் கண்டால் போதாது, மேலும் இந்த மாநகரம் தூய்மை பெற்று எழிலோடு விளங்க வேண்டும் என்ற அந்த ஆசையை நிறைவேற்றுகின்ற வகையில் நம்முடைய மாநகராட்சி மன்றத்தில் நம்முடைய மேயர் அவர்களுடைய உறுதுணையோடு அங்கே பணியாற்றுகின்ற அலுவலாளர்களுடைய ஒத்துழைப்போடு மாநகரத்தை மேலும் மேலும் அழகாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

**தூய்மையைப் பேணுங்கள்**

இந்தக் கடற்கரையை அழகுபடுத்த நாம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் சாதாரணமானதல்ல. கடற்கரையை அழகுபடுத்த யார் இடையூறு என்றால், அந்த அழகை விரும்பாதவர்கள் அல்ல. அந்த அழகு இருந்தால், நீங்கள் அழகு படுத்துவதற்காக எங்களுடைய குடிசைகளைப் பிரித்தெரிந்தால் நாங்கள் வாழ வழியில்லை, நாங்கள் உட்கார, ஓய்வெடுக்க, உறங்க எங்கே செல்வது என்கின்ற கிளர்ச்சியை ஏழையெளிய மக்கள் நடத்தத் தொடங்கினார்கள். அவர்களுக்கு உறுதுணையாக சில கட்சிகள் – ஆளுங்கட்சிக்கு எதிரான கட்சிகள் எல்லாம்

கிளம்பினார்கள். அவர்களையும் சமாதானப்படுத்தி, அவர்களுக்கும் விவரத்தைச் சொல்லி டெல்லியைப் பாருங்கள், மும்பையைப் பாருங்கள், பெங்களூரைப் பாருங்கள், சென்னையும் அதுபோல ஆக வேண்டாமா என்று அவர்களிடத்திலே கெஞ்சிக் கேட்டு, இப்போது சென்னை மாநகரத்திலே நல்ல காற்றோட்டமான நிலையை உருவாக்கியிருக்கிறோம். சென்னை மாநகரத்திலே கட்டப்பட்டிருக்கின்ற கட்டடங்கள் எல்லாம் தெரிகின்ற அளவிற்கு இங்கேயிருந்த மரங்கள் அகற்றப்பட்டு கடற்கரையிலே பல்லாயிரக்கணக் கானவர்கள் உலவுகின்ற கடற்கரையிலே இருந்த தூசிகளையெல்லாம் அகற்றி, அழுக்கற்ற தூய்மையான கரையாக, கடற்கரையாக அதை மாற்றியிருக்கிறோம்.

நேற்றையதினம் ஏறத்தாழ 30 கோடி ரூபாய் செலவில் கடற்கரை, காமராஜர் சாலையோரத்தில் நாம் மேற்கொண்ட அந்தப் பணிகளை பல்லாயிரக்கணக்கான மக்கள் பொருட்காட்சியை வந்து பார்ப்பதைப் போல பார்த்து விட்டுச் செல்கிறார்கள் என்றால், நான் உள்ளபடியே அதற்காக பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இதுபோன்ற அழகு மிக்க ஒரு நகரை காண்பதற்காக நாம் கண்ட கனவு பலித்தது என்று சொல்லமாட்டேன், பலித்துக் கொண்டு வருகிறது, இது முழுமையாகப் பலிப்பதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் வேண்டும்.

இன்று நாங்கள் கடற்கரையை சீர்படுத்தி விட்டால் நாளைக்கு கடற்கரைக்கு உள்ளே சென்று அதை அசுத்தப்படுத்துகின்றவர்கள் நாங்கள் சொல்லியும் கேட்காமல் அதைச் செய்வார்களேயானால் நாங்கள் என்ன செய்ய முடியும்? கேட்டுக் கொள்ளலாம், வேண்டுகோள் விடுக்கலாம். உணர்ந்து பார்க்க வேண்டும். ஒவ்வொருவரும் – இது நம்முடைய நகரம், நம்முடைய தெரு, நம்முடைய உடைமை, இதை நாம் தான் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும், நாம் தான் சுகாதார வசதியோடு இந்தப் பகுதியைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொரு மனிதனுக்கும் சென்னை மாநகரத்திலே உள்ளவர்களுக்கு வந்தால்தான் இங்கே உள்ள இந்தச் சுற்றுலா கண்காட்சியிலே நீங்கள் காணுகின்ற தூய்மையை அங்கேயும் காண முடியும்.

இதில் பெறுகின்ற இன்பத்தை அங்கேயும் நீங்கள் பெற முடியும். அந்த ஒத்துழைப்பை நீங்கள் தாருங்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். கட்டணம் செலுத்தி, இலட்சக்கணக்கானவர்கள் இங்கே வந்து செல்வது மாத்திரம் பெரிதல்ல. வந்து செல்பவர்கள் இந்த இடத்திலே எந்தவிதமான மாசுமருவும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த இடத்தைத் தூய்மையாகப் போற்றிப் பாதுகாக்க வேண்டும். அதற்காக ஆவன செய்ய வேண்டும் என்று உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். இந்த வேண்டுகோளை நீங்கள் அலட்சியப்படுத்தாமல் – இந்த வேண்டுகோள் உங்களுடைய பாதங்களிலே வைக்கப்பட்ட வேண்டுகோள் என்று கருதி – இதை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தூய்மையான சென்னை – அழகான சென்னை – நேர்த்தியான சென்னை – நாகரிகமான சென்னை – நாடு போற்றும் சென்னையைக் காண்போம் – அதற்கு வழிவகுத்துத் தாருங்கள் என்று உங்கள் அனைவரையும் கேட்டுக் கொண்டு – இந்த நல்ல நிகழ்ச்சியிலே நான் கலந்து கொள்வதற்கு இடமளித்த நம்முடைய அமைச்சர் அவர்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும், குறிப்பாக இறையன்பு போன்றவர்களுக்கும் நான் என்னுடைய வணக்கத்தையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மண்டபத்தில் இந்தப் பொருட்காட்சியில் ஓவியங்கள் தீட்டியிருக்கின்ற கலைஞர்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன். அவர்களுடைய அற்புதமான படைப்புகளுக்கு என்னுடைய வாழ்த்துகள் என்று கூறி விடைபெறுகின்றேன்.

★



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு–கோவை★2010 ஜூன் 23–27

# ஆயுதங்களைவிட புத்தகங்களுக்கே சிறப்பும் பெருமையும் தரப்படுகிறது

33ஆவது சென்னை புத்தகக் காட்சியைத் தொடங்கிவைத்து
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்
30–12–2009 அன்று ஆற்றிய உரை




**தொ**டர்ந்து நடைபெறுகின்ற சென்னை புத்தகக் காட்சியினுடைய 33ஆவது நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்ற வாய்ப்புப் பெற்றமைக்காக அதனை வழங்கிய அமைப்பாளர்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

புத்தகம் படிப்பது – புத்தகம் சேர்ப்பது – புத்தகம் அளிப்பது – புத்தகம் எழுதுவது – புத்தகம் தயாரிப்பது என்று இப்படி புத்தகத்தோடு தொடர்பு கொண்ட பலரும் இந்த விழாவிலே கலந்து கொண்டிருக்கிறீர்கள். நான் புத்தகத்தோடு தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பவன். எனக்கு வாழ்க்கையில் பிறந்த நாள் முதல் இதுவரையில் ஒரே அகம் தான் – என்னுடைய பழைய அகம் தான். சிலபேருக்கு அரசியலில் புதுப் புது அகங்கள். புத்தகங்கள் மாறி மாறி வருவதுண்டு. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நான் கண்ட அகம் – காணுகின்ற அகம் – காண விரும்புகின்ற அகம் ஒரே அகம் – அந்த அகம் தமிழர்களுடைய அகம் – அகம் என்பதற்கு நெஞ்சம் என்கின்ற அந்தப் பொருளில் இத்தனையும் நான் கூறினேன்.

**புத்தகக் காட்சியின் பயன்**

இன்றைக்கு இந்த விழாவிலே கலந்து கொண்டு ஆறு பேருக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம், ஆறு இலட்சம் ரூபாயை இந்த அமைப்பின் சார்பில் வழங்குகின்ற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது என்றால், கடந்த இரண்டு

ஆண்டுகளுக்கு முன்பு இதே மேடையில் நான் அறிவித்தேன். எனக்கு தனிப்பட்ட முறையில் கிடைத்த தொகையில் ஒரு கோடி ரூபாயை அறக்கட்டளை நிதியாக வங்கியிலே டெபாசிட் செய்து – அதிலிருந்து கிடைக்கின்ற வட்டியிலிருந்து – இந்தப் புத்தகக் கண்காட்சி ஆண்டுதோறும் நடைபெறும்போது – அந்த விழாவில் தமிழ் விற்பன்னர்கள், தமிழ் வித்தகர்கள், தமிழ் அறிஞர்கள், தமிழ் கருதவில்லை. இரண்டு பேரும் ஒரே நாட்டைச் சார்ந்தவர்கள் தான். நான் தமிழ்நாட்டைக் குறிப்பிடவில்லை – செட்டிநாட்டைக் குறிப்பிடுகிறேன். அவர்கள் இருவரும் – அந்தத் தொகையிலிருந்து கிடைக்கின்ற வட்டியைக் கொண்டு, அறக்கட்டளையின் சார்பாக நாணயமாக வழங்கப்பட வேண்டும் என்பதிலே அக்கறை உள்ளவர்கள் என்பதை நான் மிக நன்றாக அறிவேன். அதனால்தான்




எழுத்தாளர்கள் – இவர்களுக்கு எல்லாம் பரிசிலாக வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு என்னுடைய வேண்டுகோளை இந்தச் சங்கம் ஏற்று கடந்த ஆண்டுகளில் கண்ணதாசனின் புதல்வர், தம்பி காந்தி அந்தப் பொறுப்பையேற்றுக் கொண்டு அதற்குப் பிறகு இந்த ஆண்டு நம்முடைய அருமை நண்பர் சேது. சொக்கலிங்கம் அவர்கள் அந்தப் பொறுப்பையேற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

ஏதோ வழங்குகின்றவர்களிடம் பெரிய மாற்றம் ஏற்பட்டு விட்டதாக நான் ஒவ்வொரு ஆண்டும் இந்த விழா நடைபெறுகின்ற நேரத்தில் எல்லாம், இந்த விழாவினைக் காண வேண்டும், இதிலே கலந்து கொண்டு இந்தப் பரிசிலைப் பெறுகின்ற தமிழ் ஆர்வலர்கள் யார்யார், அறிஞர்கள் யார்யார், எழுத்தாளர்கள் யார்யார் என்பதை அறிந்து கொள்வதிலே மிகுந்த ஆர்வம் காட்டக் கூடியவன். அப்படிப்பட்ட நான் இன்றைக்கு இந்த விழாவிலே ஒருவேளை அவர்கள் அழைக்காமல் விட்டிருந்தால்கூட, இங்கே முன் வரிசையிலே அமர்ந்திருக்கின்ற தமிழ்ச் சான்றோர் களுடைய பக்கத்திலே ஒருவனாக அமர்ந்து


உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜூன் 23-27

இந்த விழாவினை காணுகின்ற வாய்ப்பினை நானாகத் தேடிக் கொண்டிருப்பேன். ஏனென்றால் புத்தகக் கண்காட்சியின் மூலமாக பெறுகின்ற பயன், பெற்றுள்ள பயன், பெற வேண்டிய பயன் – இவைகளையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது இந்த நாட்டிற்கு எவ்வளவு இன்றியமையாதது அது என்பதை புரிந்து கொள்ள முடிகின்றது.

**புத்தகங்களுக்கு பெருமை**

அதனால்தான் நம்முடைய நாட்டிலே மாத்திரமல்ல, நம்முடைய நாட்டை வெல்லுகின்ற அளவிற்கு பிற நாடுகளில் ஆயுதங்களுக்குத் தருகின்ற முக்கியத்துவத்தைவிட, சிறப்பைவிட, பெருமையைவிட புத்தகாலயங்களுக்கு சிறப்பு தருகிறார்கள். புத்தகங்களுக்கு பெருமை தருகிறார்கள். அந்த அளவில் தமிழ்நாட்டில் கடந்த சில ஆண்டு காலமாகத்தான் அத்தகைய எழுச்சி ஏற்பட்டிருக்கின்றது. அந்த எழுச்சிக்கு வித்திட்டவர்களிலே பலர், மேடையிலும் இருக்கிறார்கள், என் எதிரிலும் வீற்றிருக்கிறீர்கள். அவர்களுக்கெல்லாம் நான் நன்றியினை, பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நான் ஒரு எழுத்தாளன்தான். கடந்த 70 ஆண்டுக் காலமாக எழுதிக் கொண்டிருப்பவன். இன்னும் எழுதிக் கொண்டிருப்பவன். நாளைக்கும் எழுதப் போகிறவன். தொடர்ந்து எழுதிக் கொண்டே இருக்கப் போகிறவன். இன்றைக்கு இங்கே புகழப்பட்ட முதலமைச்சர் என்ற இந்தப் பதவிக்கு நான் உரியவன் என்ற முறையிலே அல்ல – இந்தப் பதவியிலே பொறுப்பேற்றிருப்பவன் என்ற நிலையிலே அல்ல – நான் இந்த நிலையிலே இன்றைக்குப் பாராட்டப்படுகின்ற, சிறப்பிக்கப்படுகின்ற நிலையில் இல்லாவிட்டாலும், இதைவிடப் பெருமையாக எதை கருதுவேன் என்றால், எனக்கு அண்மையிலே கொல்கத்தாவிலிருந்து வருகை தந்து, இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் உள்ள பல்வேறு தமிழ்ச் சங்கங்களின் சார்பாக அளிக்கப்பட்ட அந்த விருதைப் போல் – இன்றைக்கு என் முன்னால் என்னுடைய வாழ்த்துகளோடு வழங்கப்பட்ட விருதுகளைப் போல ஒரு விருது எனக்கு வழங்கப் படுமேயானால் – முதலமைச்சர் பதவியை விட அது மூவாயிரம் மடங்கு, முப்பதாயிரம் மடங்கு பெரியது என்று நான் கருதக் கூடியவன். ஏனென்றால் என் எழுத்து பாராட்டப்பட்டால், என் எழுத்து சிறப்பிக்கப்பட்டால், என் எழுத்தை பிறர் ஒருவர் புகழ்ந்து பேசினால் அதிலே ஏற்படுகின்ற மகிழ்ச்சியைவிட என் ஆட்சியைப் புகழ்ந்து பேசும்போது அந்த மகிழ்ச்சி ஏற்படவில்லை.

**புத்தகத் தொண்டு**

எவ்வளவு கஷ்டத்திற்கிடையே – எவ்வளவு சிக்கல்களுக்கிடையே – எவ்வளவு பிரச்சினைகளுக்கிடையே இந்த ஆட்சியின் மூலமாக நமக்குக் கிடைத்த புகழ் என்பதையெண்ணி ஒருக்கணம் நான் அதற்காக செலவிடுவேன். ஆனால் என் புத்தகத்தை நீங்கள் பாராட்டி, என்னுடைய எழுத்தை நீங்கள் பாராட்டி, அதற்காக எனக்கு சிறப்பு செய்கிறீர்கள், எனக்கு வாழ்த்து கூறுகிறீர்கள் என்றால் அதிலே ஏற்படுகின்ற

மகிழ்ச்சி, ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற நிலையிலே எனக்கு ஏற்படுவதில்லை.

அதனால்தான் அண்மையிலே கூட அலுத்துப் போய்விட்டது எனக்கு என்பதை எண்ணியெண்ணி நான் ஒரு நிகழ்ச்சியிலே சொன்னேன் – உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு முடிந்த பிறகு நான் வேறு ஒரு திக்கில் என்னுடைய பயணத்தைத் தொடருவேன், மக்களோடு இருந்து கொண்டே அந்தப் பயணத்தைத் தொடருவேன், அதிகாரத்திலே, அரசாங்கத்திலே இருந்து கொண்டல்ல அதை நான் செய்யப்போவது என்று குறிப்பிட்டிருக்கிறேன். எனக்குள்ள ஆசை, ஜெயகாந்தனுக்குப் பக்கத்திலே உட்கார்ந்திருக்க வேண்டும் என்பது – எனக்குள்ள ஆசை வைரமுத்துக்குப் பக்கத்திலே உடகார்ந்திருக்க வேண்டும் என்பது – எனக்குள்ள ஆசை அறவாணனுக்குப் பக்கத்திலே உட்கார்ந்திருக்க வேண்டும் என்பது – எனக்குள்ள ஆசை, நம்முடைய பெரிய மீசைக்காரார், வா.மு. சேதுராமனுக்குப் பக்கத்திலே உட்கார்ந்திருக்க வேண்டும் என்பது – அந்த ஆசை தான் எனக்கு உள்ளதே தவிர, அரசுக் கட்டிலிலே வீற்றிருக்க வேண்டும் என்ற ஆசை அல்ல. அதன் காரணமாகத்தான் நீங்கள் என்னை அழைத்தீர்கள் என்றால், தயவு செய்து திருத்திக்கொள்ளுங்கள். நான் எனக்கிருக்கின்ற வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, அந்த வாய்ப்பின் வாயிலாகக் கிடைத்த தொகையை மற்றவர்களுக்கு வழங்க – புத்தகத் தொண்டினை ஆற்ற – எழுத்தார்வத்தை வளர்க்க – அதைப் பயன்படுத்துகின்ற நிலையிலே நான் இன்றைக்கு இந்த விழாவிலேகூட கலந்து கொண்டு இந்த விருதுகளையெல்லாம் வழங்குகின்ற அந்த வாய்ப்பைப் பெற்றிருக்கிறேனே அல்லாமல் வேறல்ல.

நம்முடைய நல்லி குப்புசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். என்னுடைய வாழ்க்கையிலே நடந்த பல நிகழ்ச்சிகளைத் தொகுத்து இங்கே வழங்கினார்கள். என்னுடைய நகைச்சுவை உணர்வைப் பற்றியெல்லாம் இங்கே சொன்னார்கள். அவர் நகைச்சுவையையும் அறிந்தவர் – நகையின் சுவையையும் அறிந்தவர். அதனால் அவர் அதைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள்.

ஒன்றை நான் இவ்வளவு பேருக்கு மத்தியிலே குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கிறேன். புத்தகங்களை எழுதிய எழுத்தாளர்களுக்கு இங்கே பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. நான் கடந்த ஆண்டு என்று கருதுகிறேன். இங்கே விருதுகள் வழங்கப்பட்டபோது ஒரு எழுத்தாளருக்கு வழங்கப்பட்ட விருது பற்றி ஒரு சில சொல்ல வேண்டியிருக்கின்றது.

வழங்கியது தவறு என்று சொல்லமாட்டேன். ஆனால் அதைப் பெற்றவர்கள் எப்படி தவறு செய்திருக்கிறார்கள் என்பதை நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் என்னைக் காணும்போதெல்லாம் வழக்கமாக ஒரு நூலைத் தருவதுண்டு. சில நாட்களுக்கு முன்பு அப்படி அவர்கள் தந்த நூல் சென்னையின் வரலாற்றை விளக்கும் நூல். அது ஒரு பெரிய தடிப் புத்தகம். 600 பக்கங்களைக் கொண்டது. சென்ற ஆண்டு அந்தப் புத்தகத்தை எழுதிய எழுத்தாளருக்கு இங்கே விருது வழங்கப்பட்டிருக்கின்றது. நான்


உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜுன் 23-27

மரியாதையோடு, அன்போடு, உணர்வோடு, தமிழ் ஆர்வத்தோடு இந்தப் புத்தகக் கண்காட்சி தொடர்ந்து இத்தகைய அருஞ்செயல்களைச் செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளோடு நான் அளித்த அந்த ஒரு கோடி ரூபாயில் அமைக்கப்பட்ட கருணாநிதி அறக்கட்டளையின் மூலம் வழங்கப்பட்ட விருதுகளில் ஒன்றை அந்த எழுத்தாளர் பெற்றிருக்கிறார்.

அப்படி விருது பெற்றவர் எழுதிய புத்தகம் ஆயிற்றே என்று அந்த "சென்னை" என்ற பெயர் கொண்ட புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தேன். எப்போதுமே என்னிடம் ஒரு புதிய புத்தகம் கிடைத்தால் இரவோடு இரவாக – ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களில் படித்து முடித்து விடுவது என் வழக்கம். அப்படி இரவு முழுவதும் படித்து நான் அந்த புத்தகத்தை நிறைவு செய்தேன். அந்தப் புத்தகத்தில் "சென்னை – காலவரிசை" என்று ஒன்றைத் தொகுத்துள்ளார். அதில் எந்தெந்த ஆண்டு போர்த்துகீசியர் ஆண்டார்கள், ஆங்கிலேயர்கள் எப்போது ஆட்சியைப் பிடித்தார்கள் என்ற வரலாறெல்லாம், சரித்திரக் குறிப்புகள் எல்லாம் உள்ளன. அதில் 1948ஆம் ஆண்டுக்குப் பிறகு 1967ஆம் ஆண்டு தி.மு. கழகம் ஆட்சியில் அமர்ந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் யார் தலைமையிலே ஆட்சி அமைந்தது என்று குறிப்பிடவில்லை. யார் முதலமைச்சராக இருந்தார் என்று குறிப்பிடவில்லை. தேர்வுக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அந்தக் குழு தேர்வு செய்த எழுத்தாளர் ஒருவர் எழுதிய புத்தகம் அது. அதிலே தான் 1969இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு – நான் முதல் அமைச்சராக ஆனது பற்றியோ – எனக்கு முன்பு முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்களுடைய செயல்முறைத் திட்டங்களைப் பற்றியோ எதுவுமே இல்லை. 1971இல் பொதுத்தேர்தல் நடைபெற்று மீண்டும் தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தது பற்றி சென்னை என்ற அந்த நூலில் ஒரு வரி கூட இல்லை. 600 பக்கங்கள் கொண்ட புத்தகம் அது. இடம் இல்லை என்று சொல்ல முடியாது.

1977ஆம் ஆண்டு பற்றிக் குறிப்பிட்டு என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக ஆனார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் மகிழ்கிறேன். அதன்பிறகு 1991ஆம் ஆண்டு என்று குறிப்பிட்டு ஒரு மாதம் மட்டும் முதல்வராக இருந்த திருமதி ஜானகி அம்மையார் அவர்களைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிறகு 1996ஆம் ஆண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆண்டு நான்காவது முறையாக முதல் அமைச்சராக நான் ஆனேனே, அது குறிப்பிடப் பட்டிருக்கிறதா என்று தேடித் தேடிப்பார்த்தேன். எந்தக் குறிப்பும் கிடையாது. அதிலே வந்தால்தான் எனக்குப் பெருமை என்பதற்காக அல்ல. அதிலேகூட வரவில்லையே என்ற வருத்தம் தான். மாறாக அந்த ஆண்டில் கோயம்பேடு காய்கறி அங்காடி திறக்கப்பட்டதை சென்னையின் புகழ்மிக்க செய்திகளில் ஒன்றாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதைத் திறந்தவன் யார் என்றாவது குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்றால் அதுவும் கிடையாது. அதே ஆண்டில் தான் – ஏற்கெனவே அண்ணா அவர்களால் சென்னை ராஜ்யத்திற்கு "தமிழ்நாடு" என்று பெயரிடப்பட்டிருந்த போதிலும், சென்னைக்கு மெட்ராஸ் என்ற பெயர் மாற்றப்படாமல் இருப்பதை எண்ணிப் பார்த்து – "சென்னை"

என்று நான் ஆணை பிறப்பித்தேன். அந்தச் செய்தியை வெளியிட்டுள்ள அந்த நூல் அதைச் செய்தது யார் என்று குறிப்பிட்டிருக்கிறதா என்றால் இல்லை. அதன் பிறகு 1998ஆம் ஆண்டு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது தமிழ்நாட்டிலே தான், சென்னையிலே தான். ஆனால் சென்னை வரலாறு எழுதப்பட்ட அந்தப் புத்தகத்தில் அந்தப் பல்கலைக்கழகத்தை யார் தொடங்கியது என்ற செய்தி குறிப்பிடப்படவில்லை.

இது இங்கே குறிப்பிடப்பட்ட புத்தக ஆசிரியருக்கு நான் விடுக்கின்ற அன்பான கேள்வி. அப்படி என்ன இந்தக் கருணாநிதி தவறு செய்துவிட்டான்? அப்படி என்ன தாழ்ந்து போய்விட்டான் – தமிழனாகப் பிறந்தான் என்ற ஒன்றைத் தவிர வேறென்ன தாழ்வு அவனுக்கு? அவன் தமிழ்ச் சமுதாயத்திலே குறிப்பிடப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்தான் என்பதைத் தவிர அவனுக்கு வேறென்ன தாழ்வு? எனவே ஒரு புத்தகத்தை வெளியிடும்போது – அந்தப் புத்தகத்தை ஆராய்ந்து பார்த்து – மூன்று பேர், நான்கு பேர் குழுவாக அமர்ந்து – இன்றைக்கு செய்ததைப் போல விருதுகளை வழங்குகின்ற நேரத்தில் – அந்த விருதுக்கு உரிய புத்தகத்தை அவர் எழுதியிருக்கிறாரா என்பதை விருது வழங்குகின்ற நான் மாத்திரமல்ல, அதை ஆய்வு செய்து, தேர்வு செய்த குழுவினர் மாத்திரமல்ல – எல்லாவற்றையும் விட முக்கியமாக அதை எழுதிய ஆசிரியரே எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த விருதைப் பெற தகுதியானவர் தானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

இது நான் மகிழ்ச்சியாக இருக்கும் ஒரு விழாவில் உங்கள் மனதை சோகத்தில் ஆழ்த்துவதற்காகச் சொல்கின்ற செய்தி அல்ல. அடுத்த ஆண்டு முதல் இதுபோன்ற நூல்களை எழுதிய எழுத்தாளர்களுக்கு வழங்குகின்ற விருதுகளை வழங்குகின்ற நேரத்தில் இன்னும் உன்னிப்பாக, இன்னும் கவனமாக நாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் இதைச் சொல்லுகிறேனே அல்லாமல் வேறல்ல. எனவே அந்த முறையிலே இந்தப் புத்தகக் கண்காட்சி இன்றைக்கு 33ஆவது ஆண்டாக நடைபெறுகின்ற இந்தக் கண்காட்சியை தொடர்ந்து நடத்தி வருகின்ற நண்பர்களுக்கும், இடையிலே இடைவெளி ஏற்பட்டாலும், அந்த இடைவெளியை நிரப்பிவிட்டு அங்கே பொறுப்பேற்க வருகின்ற இளம் தோழர்களுக்கும், அருமை நண்பர்களுக்கும், புரவலர்களுக்கும், புலவர்களுக்கும், பெருந்தகை யாளர்களுக்கும், சான்றோர்களுக்கும், எல்லா பெருமக்களுக்கும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இந்த விழாவிலே கலந்து கொள்கின்ற வாய்ப்பு கிடைத்தமைக்காக நான் மிகுந்த மகிழ்ச்சியடைந்து இந்த வாய்ப்பிலே சிலவற்றைச் சொன்னேன் என்றால், அது தமிழகத்தின் நன்மைக்காக சொல்லப்பட்டது என்று நீங்கள் கருதிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு – தவறு இழைத்திருப்பேன் எனில் பொறுத்தருள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு இந்த அளவோடு விடைபெற்றுக் கொள்கிறேன்.

★ ★ ★

# பாரி மகளிர் பாடிய செய்யுள்

– கலைஞர்

**வா**ள் கொண்டான் கையில்; வள்ளல் தன்மை கொண்டான் நெஞ்சில்!
வேள்பாரி யெனும் பெயர் கொண்டான் தமிழினத்து வரலாற்றில்!
மூவேந்தர் ஒன்று கூடி அவன் பறம்புமலை சூழ்ந்து
முற்றுகையிட்டார் எனினும் அஞ்சாமல் நின்றானன்றி
முழங்காலை மடித்துத் தொழுது போற்றித் தன்
முடிதனையே காத்துக்கொள்ள நினைத்தானில்லை!
பாரியெனும் மன்னவனைப் பகைவர் பலர்கூடி வென்றிடலாம் எனினும்
வாரி வழங்குகின்ற அவன் வள்ளல் தன்மையினை வெல்வார் –
யாருமிலர் என்பதாலே –

மாறி மாறிப் பல்லாண்டு சுழன்றபோதும்
மாறிடாத பெயராகப் பாரியின் பெயர் நிலைத்ததிங்கே!
அவனை, வென்றார்! வீழ்த்தினார்! கொன்றார்! எனும்
அரசர் மூவர் பெயர் என்னவென அறிந்திடாது இவ்வையம்!
ஆனால், களம்பட்டு உயிர்விட்டான் எனினும் பாரியின் பெயர்
அழியாமல் மறையாமல் உயிரோடு உலவுதல் ஏன் ?
மறவன் எனும் நிலை மட்டும் மன்பதையில் புகழ் சேர்ப்பதில்லை!
மனிதனாகவும் வாழ்ந்திடல் வேண்டுமென்ற
அறநெறியை விட்டு அணுவளவும் பிறழாது – ஒருவன்
அளந்து வைக்கும் அடிகள் ஒவ்வொன்றும்தான்
வாழையடி வாழையென வருகின்ற சமுதாயத்து
வழித்தோன்றல்களின் பயணப்பாதையாகும்!

தேருக்கோர் அச்சாணி போல் – பறம்புமலைப்பக்கம் பல
ஊருக்கு மன்னவனாய்த் திகழ்ந்த பாரியினைப்
போருக்கு அழைத்துக் கொன்ற பின்னர்; அவன்
புதல்வியர் இருவரைக் கவர்ந்திட எண்ணிய வேந்தர் மூவரின்
கண்களை மறைத்துக் கபிலர் எனும் புலவர் பிரான் அந்தப்
பெண்களைத் தனது பொறுப்பில் காத்திடத் துணிந்து முனைந்தார்.

நண்பர்க்கு நல்வாழ்வு வாய்த்தபோது அருகிருந்து சுவைத்துவிட்டுத்
துன்பத்தால் துயருறும்போழ்து தொலைவில் ஓடுதல் துரோகமென்பதை
எண்ணியும் பார்க்கா பிறவிகள் சிலபேர் –
புண்ணியவான்களாய் வேடம் புனையும் இப்புவியில்
தமிழாய்ந்த தமிழ் மகனாம் கபிலர் பிரானை
அமிழ்தாக நினைத்து மகிழ்ந்து; அவர்
அருகிருக்கும் நேரமெல்லாம் குளிர்
தரு விரிக்கும் நிழலின் கீழ் இருப்பது போல் உணர்ந்த பாரி
சிறகொடிந்த பறவைகளாய்
செல்வ மகளிர்தமை விடுத்துச்
செத்துவிட்ட செய்தி வந்தவுடன்
கபிலப் புலவர் சில நொடியில்
சிறகானார் பாரிமகளிர் இருவர்க்கும் –
அதனாலே மூவருமே பறந்து போனார்.



பாரி பெற்ற முத்திரண்டைப்
பத்திரமாய்ப் பாதுகாக்கப்
பரிவு காட்டும் மாந்தரிடம்
ஒப்படைத்தார்; ஓரிரு நாள்!
ஒளிபடைத்த மணி யிரண்டும்
ஒப்பற்ற அழகுப் பேழை.
உளிபடாச் சிலையைப் போல
உருக்கொண்டு மணக்கும் தாழை.
மாரிக்கிடையே வானைக் கீறுகின்ற
மின்னல் போல
பாரிக்கு மகளாய் வாய்த்தோர்
விளங்கலானார்.


உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜூன் 23-27

தங்கியிருந்த இல்லத்து மேல்தளத்தில் அமர்ந்தவாறு
பொங்கி வழியும் பால் பானை வாய் போலத் தோன்றுகின்ற
முழு நிலவின் ஒளி வெள்ளம் பாய்ந்து பரவுவதை – ஒரு
பழுதில்லா எழிலுடைய பாரி மகளிர் பார்த்தனர் விண்ணில்!
அழுதழுது முற்றிலும் வற்றியிருந்தனவாம் நீர்த்துளிகள் கண்ணில்!
ஆனாலும் அவர் நெஞ்சில் வற்றாத தமிழ் ஊற்றுப் பெருகி
'அற்றைத் திங்கள் வெண்ணிலவில்' என்ற பாட்டாய் எழுந்ததுவாம், உளமுருகி!
"கடந்த திங்கள் இற்றை நாளில் கடைந்தெடுத்த வெண்ணெய் போல்
எழுந்த நிலா வானில் திரிந்தபோது எங்களிருவருடன்
பழுத்த மரப் பாரியாம் எங்கள் தந்தை
சிரித்த முகத்துடனே அருகிருந்தார் –
இற்றைத் திங்கள் வெண்ணிலவில் எங்கள் தந்தையுமில்லை;
கொற்றவர் மூவர் எமது குன்றமும் வென்றதால்
தந்தையை இழந்து தாயகம் இழந்து
தவிக்கிறோம் இன்று தனிமையில் நின்று..."
பாரி மகளிர் பாடலைக் கேட்டு மனமிக நொந்து
பரிவுடன் அவர்தம் கூந்தலைக் கோதி
பாவலர் கபிலர்... ஆறுதல் சொன்னார்; உம்
காவலராகக் கணவர் வாய்ப்பர் என்று தேறுதல் சொன்னார்...
"திங்கள் ஒன்றுக்கு முன்னர் இருந்த குன்றமும் இல்லை
எங்கள் தந்தையும் இல்லை என் செய்க?" என
தங்கப் பதுமைகள் இரண்டும் – துயரத்
தணலில் வீழ்ந்து தத்தளித்த நிலையையும்
சங்கப்பாடலாய்த் தந்தனர் நமக்கு –
சோகப் பாடல் எனினும் – அதிலோர்
சுவையைக் கண்டோம்; சுளைத்தமிழ் உண்டோம் அன்றோ?

★ ★ ★

**★"அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்**
**எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர் கொளார்;**
**இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவில்**
**வென்று எறி முரசின் வேந்தர் எம்**
**குன்றும் கொண்டார்; யாம் எந்தையும் இலமே!"**

★ ★ ★

*(புறநானூறு: பாடல்: 112*
*பாடியவர்: பாரி மகளிர்)*

**பொருள் விளக்கம் :**

அற்றைத் திங்கள் = கடந்த மாதம்! இற்றை = இன்றைய.

(கலைஞரின் 'சங்கத்தமிழ்' நூலிலிருந்து)

# இந்திய தேசிய கல்வெட்டுப் பயிற்சி மையத்தை தமிழகத்தில் அமைக்க வேண்டும்!

## உரிய இடம் வழங்க தமிழக அரசு தயாராக உள்ளது !



மாண்புமிகு இந்தியப் பிரதமர்
டாக்டர் **மன்மோகன் சிங்** அவர்களுக்கு
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர்** அவர்கள் கடிதம்

**ம**த்திய அரசாங்கம் இந்திய தேசிய கல்வெட்டுப் பயிற்சி மையம் ஒன்றைத் துவக்க இருப்பது பற்றி அறிந்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

பழங்கால கல்வெட்டுகளைப் பாதுகாத்து வருவதும் எதிர்கால சந்ததியினருக்காக அழிந்துவிடாமல் அவைகளைக் காப்பாற்றி வருவதும் மிக முக்கியமானதாகும்.

கல்வெட்டுகளைப் பராமரிப்பில் அனுபவம் வாய்ந்தவரும், பத்மபூஷன் விருது பெற்றவருமான ஐராவதம் மகாதேவன் அவர்கள், இம்மாதம் 2 ஆம் தேதி தொல்லியல் துறையின் சார்பில் நடந்த மத்திய ஆலோசனை வாரியக் கூட்டத்தில் பேசுகையில், தமிழகத்தில், இந்திய தேசிய கல்வெட்டுப் பயிற்சி மையத்தை நிறுவவேண்டும் என்று பரிந்துரைத்துள்ளார்.

தமிழகத்தில் அதிக அளவில் – அதாவது ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் உள்ளன. அவைகளில் 60 ஆயிரம் கல்வெட்டுகள் தமிழில் உள்ளவையாகும். எனவே, ஐராவதம் மகாதேவனின் பரிந்துரையானது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அந்த இந்திய தேசிய கல்வெட்டுப் பயிற்சி மையத்தைத் தமிழகத்தில் அமைப்பதற்கு தேவையான இடத்தை வழங்க தமிழக அரசு தயாராக உள்ளது.


எனது இந்த வேண்டுகோளைத் தாங்கள் கனிவுடன் பரிசீலித்து உரிய ஆணையினை விரைவில் வெளியிட்டால் நான் பெருமைக்குரியவராவேன்.

கோவையில் அடுத்த ஆண்டு (2010) ஜூன் மாதம் நடைபெறும் உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டிற்கு முன்னோட்டமாக உங்களின் அறிவிப்பு இருக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நீங்கள் இதில் ஆர்வமுடன் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க விழைகிறேன். ★

**வே**லைவாய்ப்பற்ற
படித்த இளைஞர்களுக்கு
உதவித் தொகை வழங்கும் திட்டம்
2006இல் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு
அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி,
10ஆம் வகுப்பு வரை படித்தவர்களுக்கு மாதம்
150 ரூபாய் வீதமும், 12ஆம் வகுப்பு வரை
படித்தவர்களுக்கு மாதம் 200 ரூபாய் வீதமும்,
பட்டப்படிப்பு படித்தவர்களுக்கு
மாதம் 300 ரூபாய் வீதமும் இந்த அரசினால்
உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 3 இலட்சத்து
53 ஆயிரத்து 488 படித்து வேலைவாய்ப்பற்ற
இளைஞர்களுக்கு 156 கோடியே 15 இலட்சத்து
30 ஆயிரத்து 604 ரூபாய் உதவித் தொகை
வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து
செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் கீழ்,
மேலும் பல இளைஞர்கள் பயன்பெற வேண்டும்
என்னும் நோக்கத்துடன், இத்திட்டத்தின்
சலுகையை ஒரு பயனாளி பெற
நிர்ணயிக்கப்பட்டுள்ள அவரது குடும்ப
ஆண்டு வருமானம், ஆண்டுக்கு 24 ஆயிரம்
ரூபாய் என்பதை 50 ஆயிரம் ரூபாய்
என உயர்த்தி
மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்
4.11.2009 அன்று ஆணையிட்டுள்ளார்.




# வேலைவாய்ப்பற்ற படித்த இளைஞர்களுக்கான உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் குடும்ப வருமான வரம்பு உயர்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர்** அவர்கள் ஆணை

# ஐந்தாம் கட்டமாக மேலும் 40 இலட்சம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவது குறித்த சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் 16ஆவது கூட்டம் 5.11.2009 அன்று காலை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் (இந்திய கம்யூனிஸ்ட் மார்க்ஸிஸ்ட்), திரு. வை.சிவபுண்ணியம் (இந்திய கம்யூனிஸ்ட்), திரு. எச். அப்துல் பாசித், சட்டமன்ற உறுப்பினர் (இந்திய யூனியன் முஸ்லீம் லீக்), பூவை திரு. மு. ஜெகன் மூர்த்தி சட்டமன்ற கட்சித் தலைவர் (புரட்சி பாரதம்) மற்றும் திரு. டி. ரவிகுமார், சட்டமன்ற உறுப்பினர் (விடுதலைச் சிறுத்தைகள்) ஆகியோரும், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர். திருமதி.பூங்கோதை அவர்கள், தலைமை செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித்துறை



அவர்கள், சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்கள் திரு. டி. சுதர்சனம் (காங்கிரஸ்), திரு. சி.கோவிந்தசாமி முதன்மைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தகவல் தொழில்நுட்பவியல் துறை செயலாளர்



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜுன் 23-27

திரு. பி.டபிள்யூ.சி டேவிதார், இ.ஆ.ப., வருவாய்த் துறை முதன்மைச் செயலாளர் திரு. என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., முதன்மை செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் திரு. என். சுந்தரதேவன், இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவன மேலாண்மை இயக்குநர் டாக்டர் சந்தோஷ் பாபு, இ.ஆ.ப., ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் அண்ணா பிறந்த பொன்னாளான 15.9.2006 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, முதற்கட்டமாக 30 ஆயிரம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும், இரண்டாவது கட்டமாக 25 இலட்சம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும், மூன்றாம் கட்டமாக 37 இலட்சத்து 50 ஆயிரம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும் வழங்கப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து நான்காம் கட்டமாக 41 இலட்சத்து 62 ஆயிரத்து 500 வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்ய ஆணைகள் வழங்கப்பட்டு, 31.10.2009 வரை 26 இலட்சத்து 81 ஆயிரத்து 899 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பொது மக்களுக்கு விநியோகிப்பதற்காக மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

நான்கு கட்டங்களிலும், மொத்தம் 2,267 கோடியே 87 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் 1 கோடியே 4 இலட்சத்து 42 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு வழங்க அனுமதிக்கப்பட்டு, 2,036 கோடியே 69 இலட்சத்து 81 ஆயிரத்து 103 ரூபாய் செலவில் இதுவரை 85 இலட்சத்து 15 ஆயிரத்து 343 குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் மேலும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

5.11.2009 அன்று நடைபெற்ற சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டத்தில், தமிழக அரசின் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், நான்காம் கட்டத்தில் 8 இலட்சத்து 37 ஆயிரத்து 500 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கூடுதலாகக் கொள்முதல் செய்யலாம் என்றும்; ஐந்தாம் கட்டமாக 2009 – 2010ஆம் ஆண்டில், மேலும் 40 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்யலாம் என்றும், இக்கொள்முதல் தொடர்பாக 2009 நவம்பர் மாத முதல் வாரத்தில் சர்வதேச ஒப்பந்தப் புள்ளிகளைக் கோருவது என்றும், 2009 டிசம்பர் மாத மத்தியில் ஒப்பந்தப்புள்ளிகளைத் திறப்பதென்றும், டிசம்பர் மாத மூன்றாம் வாரத்தில் ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்வதென்றும், 2010 பிப்ரவரி தொடங்கி டிசம்பர் வரை 40 இலட்சம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளையும் பொது மக்களுக்கு வழங்குவது என்றும், இத்திட்டத்தின் நான்காம் கட்டத்தில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்குவதற்கு முடிவுகள் மேற்கொண்ட போது நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி நெறிமுறைகள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கான தொழில்நுட்பக் குறியீடுகளையே (Technical Specifications) தற்போதைய ஐந்தாம் கட்ட கொள்முதலுக்கும் பின்பற்றுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

★ ★ ★

# மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அறிவிப்பின்படி தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் அமைப்பு !

சட்டமன்றப் பேரவையில் 6.7.2009 அன்று நடைபெற்ற 2009–10ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள், "பொருளாதார, சமூக, கல்வி நிலையங்களில் மிகவும் அடித்தளத்தில் வாழ்ந்து வரும் 'புதிரை வண்ணார்' இனத்தைச் சார்ந்த மக்கள், மிகக் குறைவான எண்ணிக்கையில் இருந்தாலும், அவர்களின் நலத்திலும் அக்கறை கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், அவர்களுக்கென்று ஒரு தனி நல வாரியம் அமைத்து மற்ற நல வாரிய உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும் அனைத்து சலுகைகளும் அளித்திட வேண்டும் என முடிவு செய்துள்ளார்கள்" என அறிவித்தார்.

இதன்படி புதிரை வண்ணார் இனத்தைச் சார்ந்த மக்களுக்கென்று தனியாக தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் அமைக்க அரசு உத்தேசித்து அவ்வாறே ஆணையிட்டுள்ளது.

இந்த புதிரை வண்ணார் நல வாரியம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரைத் தலைவராகக் கொண்டு செயல்படும். இந்த வாரியத்திற்கு கீழ்க்கண்ட அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் அலுவல்சாரா உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாரியம் புதிரை வண்ணார் இனமக்களின் முன்னேற்றத்திற்காக அரசு மூலம் வழங்கப்படும் அனைத்து நலத்திட்டங்களும் மற்றும் உதவிகளும் சிறப்பான முறையில் தங்கு தடையின்றிக் கிடைப்பதற்கும் இதனைக் கண்காணிக்கும் வகையிலும் செயல்படும்.

இச்சமுதாய மக்களின் கல்வி அறிவு நிலை பின்தங்கிய நிலையில் உள்ளதைக் கணக்கில் கொண்டு இவ்வினத்தைச் சேர்ந்த அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்,

இச்சமூகத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்குத் தங்குதடையின்றி கல்வியறிவு பெற வசதியாக இத்துறைமூலம் செயல்படும் விடுதிகளை இவர்களை எவ்விதப் பாகுபாடும் இன்றி விண்ணப்பித்த அனைவரையும் சேர்த்துக் கொள்ளுதல்,

இச்சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா, தொகுப்பு வீடுகள் கட்டித்தருதல்,

இச்சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் பொருளாதார முன்னேற்றம் அடைவதற்கு பொருளாதாரத் திட்டங்களை முழு மானியத்துடன் வழங்குதல்,

தாட்கோ மூலம் வழங்கப்படும் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களில் இவர்களுக்குக் கணிசமான அளவில் கிடைக்க நடவடிக்கை எடுத்தல்.

சலவைத் தொழில் சார்ந்த கடைகள் நடத்தவும் தாட்கோ மூலம் சிறு கடன்கள் வழங்கவும் மேலும் இலவச சலவைப் பெட்டிகள் வழங்கவும் நடவடிக்கை எடுத்தல்,

இச்சமுதாய மக்களுக்கு பல்வேறு தொழில்களுக்கான பயிற்சி வகுப்புகள் தாட்கோ மூலம் செயல்படுத்தி இவர்கள் தனியாகத் தொழில் தொடங்குவதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகிய மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளதாக அந்த அரசு ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ ★ ★



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு–கோவை ★ 2010 ஜூன் 23–27

# கலைஞர் அரசின் திட்டங்களுக்கெல்லாம் மகுடமாகத் திகழ்கிறது கலைஞர் காப்பீட்டுத் திட்டம்

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
5–11–2009 அன்று சென்னை–சிந்தாதிரிப்பேட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில்
''உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின்''
அடையாள அட்டைகளை பயனாளிகளுக்கு வழங்கி ஆற்றிய உரை :–




**உ**யிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் பயனாளிகளுக்கு அடையாள அட்டை வழங்கும் இந்த இனிய நிகழ்ச்சியில் பங்குபெறுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இதுபோன்ற நிகழ்ச்சியின் மூலம் இத்திட்டம் குறித்து மக்கள் மேலும், அறிந்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. 10 நாட்களுக்கு முன் மாவட்ட ஆட்சியர் என்னிடம் இவ்விழாவிற்கு வருமாறு அழைத்த போது இது ஏற்கெனவே முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களால் துவங்கப்பட்ட திட்டம் – மாவட்ட அளவில் அடையாள அட்டைகள் வழங்குதல் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. இதற்கு மீண்டும் நான் வர வேண்டுமா என்று கேட்டேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இந்த நிகழ்ச்சியின் மூலம் ஏழை மக்கள் மேலும்

விழிப்புணர்வு பெற்று பயன்பெற நீங்கள் வந்தால் சிறப்பாக இருக்கும் என்று கூறினார். இக்கருத்து சரி என்று தோன்றியதால் இந்த நல்லதொரு விழாவில் கலந்துகொள்ள ஒப்புதல் அளித்தேன். இத்திட்டத்தின் நோக்கம் பற்றி மேயர் அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் இங்கே விளக்கியுள்ளார்கள். தலைவர் கலைஞர் அரசு ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பாட்டாளி மக்கள் என ஒட்டு மொத்த தமிழகத்திற்கும் சிறப்பான மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. தலைவர் கலைஞர் அவர்களின் திட்டங்களுக்கு எல்லாம் மகுடம் சூட்டுவது போல் இந்த "உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்" திகழ்கிறது.

தலைவர் கலைஞர் அவர்கள் 5 ஆவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று சிறப்பான திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். இப்போது மட்டும் அல்ல, எப்போதெல்லாம் தலைவர் கலைஞர் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறாரோ அப்போதெல்லாம் மக்கள் நலத் திட்டங்களை சிறப்பான முறையில் நிறைவேற்றி வருகிறார். தமிழக மக்கள் அனைவருக்கும் குறைந்த செலவில் தரமான மருத்துவ சேவை கிடைத்திட பல்வேறுத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். அதில் குறிப்பிடத்தக்கது வருமுன் காப்போம் திட்டம், ஏழைச்சிறார்களுக்கு இருதய அறுவை சிகிச்சைத் திட்டம், பள்ளிச்சிறார்களுக்கான இருதய அறுவை சிகிச்சைத் திட்டம், அதுமட்டும் இல்லாமல் அரசு ஊழியர்களுக்கு புதிய காப்பீட்டுத் திட்டம் என பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயன் அடைந்து வருகிறார்கள். இதில் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப் பட்டுவரும் திட்டம் தான் உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டமாகும். இந்த காப்பீட்டுத் திட்டம் ஆந்திர மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தாலும், ஆந்திரத்தில் மக்கள் பயன் பெற காப்பீட்டுத் தொகையை பயனாளிகள் செலுத்த வேண்டும். ஆனால், தமிழ்நாட்டில் மக்கள் செலுத்த வேண்டிய காப்பீட்டுத் தொகையை கலைஞர் அரசே மக்களின் சார்பாக செலுத்துகிறது. ஒவ்வொரு குடும்பமும் 4 ஆண்டுகளுக்கு ரூபாய் ஒரு இலட்சம் வரை இருதயம் தொடர்பான நோய்கள், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை போன்ற 51 வகையான நோய்களுக்கு அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் இலவசமாக உயர் சிகிச்சைப் பெறலாம்.

உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்திற்கு காப்பீட்டுத் தொகையாக ரூ. 517 கோடியை மக்களுக்காக கலைஞர் அரசே செலுத்துகிறது. இதுவரை 81 இலட்சத்து 97 ஆயிரத்து 511 குடும்பங்கள் இந்த திட்டத்தில் உறுப்பினராக சேர்க்கப் பட்டுள்ளனர். இதில் 28 இலட்சத்து 84 ஆயிரத்து 897 குடும்பங்களுக்கு சிறப்பு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 458 அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் மக்கள் உயர் சிகிச்சைப் பெறலாம். இதுவரை 8 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இத்திட்டத்தால் பயன் அடைந்துள்ளார்கள். சென்னை மாவட்டத்தில் மட்டும் 2 இலட்சத்து 80 ஆயித்து 447 உறுப்பினர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளனர். இந்த விழாவில் மட்டும் 560 பயனாளிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படுகிறது. இதுவரை பெரும் பணக்காரர்கள் மட்டும் பெற்று வந்த உயர் சிகிச்சையை ஏழை எளிய மக்களும் பெறுவதற்கு வசதியாக தலைவர் கலைஞர் அவர்கள் உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்தியுள்ளார்.

ஏழை எளிய மக்கள் இதுபோன்ற திட்டங்களை பயன்படுத்திக் கொண்டு பயன்பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

★ ★ ★




உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜூன் 23-27

# தமிழகத்தில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளுக்கும் மின்னணுப் பட்டியல் இயந்திரம் வழங்க அரசு நடவடிக்கை



மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் 2.11.2009 அன்று
தாம்பரத்தில் உணவுத்துறை சார்பில்
நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை

மாநில நுகர்வோர் தொலைத்தொடர்பு உதவி மையம், சென்னை மாநகரில் செயல்படுகின்ற அனைத்து நியாயவிலைக் கடைகளுக்கும் மின்னணுப் பட்டியல் இயந்திரங்களை வழங்குதல், 251 நியாயவிலைக் கடைகளுக்கு புதிய கட்டடம் கட்டும் பணியைத் துவக்கி வைத்தல், இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச அடுப்புக்களைப் பயனாளிகளுக்கு வழங்குதல் மற்றும் தாம்பரம் உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுதல் என ஐந்து நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து எழுச்சியுடன் நடைபெறும் இவ்விழாவில் கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.



## தொலைபேசி சேவை மையம்

இங்கு பேசிய உணவுத்துறை அமைச்சரும், செயலர் அவர்களும் உணவுத்துறையின் சாதனைகளையெல்லாம் பட்டியலிட்டார்கள். 2008–2009ஆம் நிதியாண்டில் அறிவிப்புகளில் ஒன்றாக பொது விநியோகத் திட்டம் மற்றும் நுகர்வோர் சேவைகள் தொடர்பான குறைகளை தீர விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அதனைச் செயல்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு இன்று வெற்றிகரமாக இந்தத் தொலைபேசி சேவை மையம் துவக்கி வைக்கப்படுகிறது. இதன் வாயிலாக பொது விநியோக அங்காடிகளில் பொருள் வாங்குகின்ற நுகர்வோர்களுக்கும், வெளிச்சந்தையில் பொருள்களை வாங்குபவர் களும் தங்கள் நுகர்வில் குறைபாடுகள் இருந்தால் களைவதற்காக இந்த மையம் அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை நகரில் கூட்டுறவுத் துறையின் சார்பாக 939 நியாயவிலைக் கடைகளும், நுகர் பொருள் வாணிபக் கழகம் சார்பாக 351 நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன. நியாயவிலைக் கடைகளில் போலிப் பட்டியல் தயாரிப்பதைத் தடுக்கவும், பொதுமக்களுக்கு வழங்கப்படும் பொருட்கள் உரிய முறையில் வழங்கப்படுகின்றதா என்று கணினி மூலம் கண்காணிக்கவும் சென்னை நகரிலுள்ள அனைத்துக் கடைகளுக்கும் இன்றைய விழாவில் மின்னணுப் பட்டியல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் மின்னணுப் பட்டியல் இயந்திரங்கள் வழங்க 57 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. படிப்படியாக தமிழகத்திலுள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளுக்கும் மின்னணுப் பட்டியல் இயந்திரம் வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 30,394 நியாயவிலைக் கடைகள் இயங்கி வருகின்றன. இதில் நுகர்ப்பொருள் வாணிபக் கழகத்தால் 1,197 கடைகளும், கூட்டுறவு



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு–கோவை ★ 2010 ஜூன் 23–27

சங்கத்தின் மூலம் 28,368 கடைகளும், மகளிர் சுயஉதவிக் குழுக்களால் 640 கடைகளும், மற்ற நிறுவனங்களால் 181 கடைகளும், நடமாடும் நியாயவிலைக் கடைகளாக 8 கடைகளும் செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் 13,926 கடைகள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இன்றைய விழாவில், 8 கோடியே 78 இலட்சம் செலவில் 251 நியாயவிலைக் கடைகளுக்கு புதிய சொந்த கட்டடங்கள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப் பட்டுள்ளது.

2006 சுதந்திர தின விழா பேருரையின் போது முதல்வர் கலைஞர் அவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள ஏழைக் குடும்பங்களுக்கு இலவச எரிவாயு இணைப்பு அடுப்புடன் வழங்கப்படும் என அறிவித்தார். 2006–2007ஆம் நிதியாண்டில் முதற்கட்டமாக 3 இலட்சம் பயனாளிகளுக்கு இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து 2007–2008ஆம் நிதியாண்டில் 8 இலட்சம் இலவச எரிவாயு இணைப்புகளுடன் கூடிய அடுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இன்று இவ்விழாவில் 305 எரிவாயு இணைப்புகள் கூடிய அடுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

## சோதனைகளை சாதனைகளாக்கும் அரசு

எந்த ஆட்சியாக இருந்தாலும் உணவுத்துறை பொறுப்பில் உள்ளவர்கள் அச்சத்தோடு இருப்பார்கள்; உணவுத்துறை அமைச்சர்களும் மாறிக் கொண்டே இருப்பார்கள். தற்போதைய அமைச்சர் எ.வ.வேலு உணவுத்துறை அமைச்சராக கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார். சோதனைகளையும், சாதனைகளாக மாற்றுவது தான் தலைவர் கலைஞரின் அரசாகும். தற்போது துணை முதலமைச்சர் பொறுப்பில் உள்ள நான், 2006ஆம் ஆண்டு உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்த போது, தலைவர் கலைஞர் அவர்கள் என்னிடம் கிராமம் கிராமமாகச் சென்று மக்களின் குறைகளைக் கேட்டறிந்து நல்லாட்சியைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதன்படி நானும் மண்டல அளவில், மாவட்ட அளவில் பல்வேறு ஆய்வுக் கூட்டங்களை நடத்தி அதில் மக்கள் பிரதிநிதிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களையும் கலந்து கொள்ளச் செய்து மக்களின் குறைகளைக் களைவதில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறேன்.

நானோ, அமைச்சர்களோ வெளியூர் பயணம் மேற்கொள்வதாக இருந்தால் முதல்வரிடம் அனுமதி வாங்கித்தான் செல்வது வழக்கம். இதன்படி ஒரு முறை நான்கு நாட்கள் நான் வெளியூர் பயணம் செல்ல இருக்கிறேன் என்று முதல்வரிடம் தெரிவித்த போது எனது தாய் அருகில் இருந்தார். அவர் தாய்ப் பாசத்தோடு இப்படி ஊர் ஊராகச் செல்கிறாயே, உன் உடல்நலம் என்னாவது என்று கேட்டார். அதற்கு முதல்வர் அவர்கள் ஊர் ஊராகச் செல்ல வேண்டும் என்பதால் தான் இவருக்கு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் பொறுப்பை வழங்கியுள்ளேன் என்று கூறினார். உணவு அமைச்சருடைய செல்போன் நம்பர் அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் விளம்பரப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் எந்த குறையாக இருந்தாலும் அமைச்சரை நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம். நான் கூட இதனைச் சோதிக்க பல ஊர்களி லிருந்து வேறு தொலைபேசிகளிலிருந்து அவருடன் தொடர்பு கொண்டுள்ளேன். அவர் உடனே அனைத்து தொலைபேசி அழைப்பு களுக்கும் பதில் அளித்துள்ளார். இதனை நான் பாராட்டுகிறேன்.

சென்ற ஆண்டு உணவு மானியத்திற்கு 2,900 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்

> "பேச்சுப் போட்டியில் பள்ளி மாணவன் ஒருவன் – ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் வழங்கும் சாதனை குறித்து பேசும் போது; மகாத்மா காந்தியை தேசத் தந்தை என்கிறோம், அதை "FATHER OF NATION MAHATMA GANDHI – FATHER OF RATION DR. KALAIGNAR" என்றான். இது என் மனதில் ஆழமாக பதிந்தது. இவ்வாறு உணவுத்துறையின் செயல்பாடுகள் தலைவர் கலைஞர் ஆட்சியில் சிறப்பாக உள்ளது"

பட்டுள்ளது. இந்த ஆண்டு 3,500 கோடி ரூபாய் வரை உயர்த்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உத்தேசித்துள்ளார். அரிசிப் பயன்பாடு மூன்றாண்டுகளுக்கு முன்பு 2.5 இலட்சம் டன்னாக இருந்தது. தற்போது 3.18 இலட்சம் டன்னாக உயர்ந்து உள்ளது. மூன்றாண்டு களுக்கு முன்பு 6,000 டன்னாக இருந்த கோதுமை நுகர்வு, தற்போது 13,000 டன்னாக உயர்ந்துள்ளது. அதுபோலவே, சர்க்கரை நுகர்வு மூன்றாண்டுகளுக்கு முன் 20,000 டன், தற்போது 34,000 டன்னாக உயர்ந்துள்ளது.

தேர்தல் அறிக்கையின் போது தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய் என அறிவித்தார். ஆட்சிப் பொறுப்பேற்ற பின் கோட்டைக்குக் கூட செல்லாமல் விழா மேடையிலேயே ஒரு கிலோ அரிசி 2 ரூபாய் என அறிவித்து கோப்பில் கையெழுத்திட்டார். அதுவும் தற்போது ஒரு கிலோ அரிசி 1 ரூபாய் என வழங்கப்படுகிறது. நம்முடைய இளைஞர் அணி சார்பாக அறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் பள்ளி மாணவன் ஒருவன் – ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் வழங்கும் சாதனை குறித்து பேசும்போது மகாத்மா காந்தியை தேசத் தந்தை என்கிறோம், அதை "FATHER OF NATION MAHATMA GANDHI – FATHER OF RATION Dr. KALAIGNAR" என்றான். இது என் மனதில் ஆழமாக பதிந்தது. இவ்வாறு உணவுத்துறையின் செயல்பாடுகள் தலைவர் கலைஞர் ஆட்சியில் சிறப்பாக உள்ளது. மக்களின் உணர்வுகளை புரிந்து, தேவைகளை அறிந்து செயல்படும் அரசாக, தலைவர் கலைஞர் அரசு விளங்கி வருகிறது என்று கூறி விடைபெறுகிறேன்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். ராஜா, கூட்டுறவு மற்றும் உணவுத்துறைச் செயலாளர் திரு. க.சண்முகம், இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல் துறை ஆணையாளர் திரு. க.ராஜாராமன், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * *




உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு–கோவை ★ 2010 ஜுன் 23–27

# ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் 2012க்குள் நிறைவேற்றப்படும்

மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள 3 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள் மற்றும் 18 ஊராட்சி ஒன்றியங் களிலுள்ள 6,755 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 29.8 இலட்சம் மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட மற்றும் தரமான குடிநீர் வழங்குவதற்காக ஒகேனக்கல் குடிநீர் மற்றும் புளோரைடு பாதிப்பு குறைப்புத் திட்டம் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனத்தின் நிதி உதவியுடன் 1,334 கோடி திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

தருமபுரியிலிருந்து, 45 கி.மீ. தூரத்தில் ஓடும் காவிரியாற்றினை நீராதாரமாகக் கொண்டு இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்காக இந்திய ஆட்சிப் பணி நிலையிலுள்ள திட்ட இயக்குநர் மற்றும் இணை மேலாண்மை இயக்குநர் 9.11.2007 அன்று நியமிக்கப்பட்டார்.



இத்திட்டப் பணிகளைக் கண்காணிக்கவும், மற்றும் அரசுடன் இணைந்து பிற துறைகளின் ஒத்துழைப்பு பெறவும் திட்ட மேலாண்மைப் பிரிவு வாரிய தலைமை அலுவலகம் சென்னையில் 11.02.2008இல் ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டத்தைச் செயல்படுத்து வதற்காக திட்ட செயலாக்கப் பிரிவு அலுவலகம் 12.02.2008 அன்று தருமபுரியில் ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 26.02.2008 அன்று தருமபுரியில் அடிக்கல் நாட்டப்பட்டது.

திட்ட மேலாண்மை ஆலோச கராக நிப்பான் கோயி கம்பெனி லிமிடெட், ஜப்பான் நிறுவனம் நியமிக்கப்பட்டு 03.10.2008 முதல் திட்ட மேலாண்மைப் பணி துவங்கப்பட்டுள்ளது.

மேலும் தற்போதைய விலை மதிப்பீட்டின் படியும், இறுதி வடிவமைப்பின் படியும் ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தின் திருத்திய மதிப்பீடு ரூபாய் 1,928.80 கோடியாகும்.

இத்திட்டத்தின் செயலாக்கப் பணிகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 5.12.2009 அன்று ஆய்வு செய்தார்.

திட்டப்பணிகள் 5 தொகுப்பு களாகப் பிரிக்கப்பட்டு, முன் தகுதிகாண் விண்ணப்பங்கள் பெற நவம்பர் 2008இல் விளம்பரப்படுத்தப்பட்டு, நான்கு தொகுப்புகளுக்கான முன் தகுதிகாண் ஒப்பந்தக்காரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும், இதர ஒரு தொகுப்புக்கான முன் தகுதிகாண் ஒப்பந்தக்காரர்கள் தேர்வு செய்யும் பணி! பரிசீலனையில் உள்ளது எனவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ஸ்வரன்சிங், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

தொகுப்பு ஒன்றுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் நவம்பர் 2009இல் பெறப்பட்டு தொழில்நுட்ப ஒப்பந்தப் புள்ளிகள் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிறு வனத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப் பட்டு உள்ளது.

தொகுப்பு–2, 3 மற்றும் 5 பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் பெற 2009 டிசம்பர் மாத இறுதிக்குள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அரசு அறிவித்தபடி களப்பணிகள் மார்ச் 2010இல் துவங்கப்பட திட்ட மிட்டபடி அனைத்துப் பணிகளும் டிசம்பர் 2012க்குள் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டுவர மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

இந்த ஆய்வில் நகராட்சி நிருவாகத் துறை செயலாளர் டாக்டர்.நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., சென்னை மின்சார வாரியத் தலைவர் திரு.சி.பி.சிங், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய திட்ட இயக்குநர் மற்றும் இணை மேலாண்மை இயக்குநர் திரு. பங்கஜ்குமார் பன்சல், இ.ஆ.ப., மற்றும் குடிநீர் வடிகால் வாரிய பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.


★

# சுயஉதவிக் குழுவினர் உடனுக்குடன் கடனை திருப்பிச் செலுத்துவதால் தமிழகத்தில் வங்கிகள் போட்டி போட்டுக் கொண்டு கடன் தருகின்றன!

16-11-2009 அன்று, சென்னையில் நடைபெற்ற மணிமேகலை விருது - சிறந்த வங்கிகளுக்கான விருது வழங்கும் விழாவில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை.

இன்றைய விழாவில் மணிமேகலை விருது, சிறந்த வங்கிகளுக்கான விருது, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகை - பெருங்கடன் மற்றும் 2,200 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குகின்ற நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து ஒரு மாபெரும் விழாவாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. இந்த விழாவில் பங்கு கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைய விழாவில் 2,200 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.16 கோடியே 42 இலட்சம் சுழல்நிதி மானியத்துடன் கூடிய வங்கிக்கடனும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.5 கோடி ஊக்கத் தொகையும், ரூ.52 கோடி பெருங்கடனும், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் ரூ.3 கோடியே 90 இலட்சம் வாழ்வாதார நிதியும், சிறந்த சேவை புரிந்தமைக்காக வங்கிகளுக்கு விருதுகளும், சிறப்பாக செயல்பட்ட மகளிர் குழுக்களுக்கு மணிமேகலை விருதுகள் வழங்கும் விழா எனப் பல்வேறு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து ஏற்றமிகு விழாவாக இந்த விழா நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.



இந்த விழாவில் மட்டும் ரூ.78 கோடி, சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படவுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் சுய உதவிக் குழுக்களை தொடங்கிவைத்தார். சுய உதவிக் குழு என்பது அரசியல் ஆதாயம் அடைவதற்காக தோற்றுவிக்கப்படவில்லை என்று கலைஞர் அவர்கள் கூறினார். பெண்கள் தன்னம்பிக்கையுடன் சொந்தக் காலில் நிற்பதற்காகவும், வாழ்க்கையில் வளம் பெறுவதற்காகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று தலைவர் கலைஞர் அவர்கள் அப்போதே கூறியிருக்கின்றார்.

அப்படி தொடங்கப்பட்ட மகளிர் குழு இன்று தமிழகத்தில் ஒரு பேரியக்கமாக விளங்கிக் கொண்டு இருக்கிறது. ஏறத்தாழ 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மகளிர் இங்கு குழுமி இருந்தாலும், மிக அமைதியாக, பொறுமையாக, கட்டுப்பாடுடன் நீங்கள் இருப்பது மகளிர் சுயஉதவிக் குழு மிகப்பெரிய வெற்றி பெற்றுள்ளது என்பதைக் காட்டுகிறது. 1997ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் தமிழக அரசின் நிதி உதவியுடன் மகளிர் திட்டத்தினை தொடங்கி இன்று மகளிர் திட்டம் மாபெரும் இயக்கமாக திகழ்ந்து கொண்டு இருக்கிறது.

தமிழகத்தில் தற்போது 4 இலட்சத்து 12 ஆயிரத்து 104 குழுக்கள் உள்ளன. இதில் 65 இலட்சத்து 72 ஆயிரம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். ஊரகப் பகுதிகளில் மட்டும் 2 இலட்சத்து 86 ஆயிரத்து 307 குழுக்களும், நகர் பகுதியில் ஒரு இலட்சத்து 25 ஆயிரத்து 797 குழுக்களும் உள்ளன. கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 96,668 மகளிர் சுய உதவிக் குழுக்கள் புதிதாக அமைக்கப் பட்டுள்ளன. இந்த நிதி ஆண்டில் 21 ஆயிரத்து 175 குழுக்கள் தொடங்கப் பட்டுள்ளன.



**வங்கிக் கடன் – சுழல் நிதி அதிகரிப்பு**

வங்கிக் கடனைப் பொறுத்தவரை அ.தி.மு.க ஆட்சியில் கடந்த 5 ஆண்டுகளில் வழங்கப்பட்ட வங்கிக்கடன் ரூ.1,644 கோடி மட்டுமே. சுழல் நிதியாக ரூ.76 கோடி மட்டுமே வழங்கப்பட்டது. நான் அரசியலுக்காக கூறவில்லை, கடந்த மூன்றரை ஆண்டுகளில் கலைஞர் ஆட்சியில் வழங்கப்பட்ட வங்கிக்கடன் ரூ.4,716 கோடி ஆகும். சுழல் நிதியாக ரூ.200.71 கோடி வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தைப் பொறுத்தவரை சுயஉதவிக் குழு பெண்கள் வாங்கியக் கடனை வட்டியுடன் முறையாக திருப்பிச் செலுத்திவிடுகின்றனர்.

2008–2009ஆம் ஆண்டில் இந்திய அளவில் மொத்தம் ரூ.11,132 கோடி வங்கிக் கடன் உதவி மகளிர் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்திற்கு மட்டும் ரூ.2,174 கோடி

வங்கிகள் மூலம் மகளிர் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்திய அளவில் வழங்கப்பட்ட கடன் தொகையில் இதில் 20 சதவிகிதம் ஆகும். இந்தியன் வங்கியைப் பொறுத்தவரை தேசிய அளவில் மகளிர் குழுக்களுக்கு ரூ.1,864.87 கோடி கடன் உதவி வழங்கியுள்ளது. தமிழகத்திற்கு மட்டும் ரூ.1,159 கோடி கடன் உதவி வழங்கியுள்ளது. வழங்கப்பட்ட கடன் உதவியில் இது 62 சதவீதம் ஆகும்.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி வழங்கியுள்ள கடன் தொகையில் 48 சதவீதம் தமிழகத்திற்கு வழங்கியுள்ளது. வங்கிகள் தமிழகத்தில் செயல்படும் மகளிர் குழுக்களுக்கு போட்டிப் போட்டு கடன் உதவி வழங்குவதற்கான காரணம் தமிழகத்தில் செயல்படும் மகளிர் குழுவினர் கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்துவதால்தான். இது மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு மட்டும் பெருமை சேர்ப்பதல்ல, தமிழகத்திற்குப் பெருமைச் சேர்ப்பது ஆகும். தொடக்க வேளாண்மை வங்கிகள் பெருங்கடன்களை மகளிர் கூட்டமைப்புகளுக்கு முனைப்புடன் வழங்குகின்றன. பெருங்கடன்களை இந்தியன் வங்கியும் முனைப்புடன் வழங்கிட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**மணிமேகலை விருது**

இந்த ஆண்டு சிறந்த வங்கிகளாக இந்தியன் வங்கி, பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆகியவை தேர்வு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்படவுள்ளது என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். சிறப்பாக செயலாற்றும் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை ஊக்குவிக்கும் வகையில் மணிமேகலை விருதுகள் வழங்கப்படவுள்ளது. மகளிர் சுயஉதவிக் குழுவைச் சார்ந்த அனைத்து மகளிருக்கும் எனது மனமார்ந்த, நெஞ்சார்ந்த பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மேயர் இங்கு பேசும்போது 1,000 பேராக இருந்தாலும் 5,000 பேராக இருந்தாலும் நானே நேரிடையாக ஒவ்வொரு மகளிருக்கும் சுழல் நிதியினையும், கடனுதவிகளையும் வழங்கி வருகிறேன் என்று கூறினார். பொதுவாக ஒரு நலத்திட்ட நிகழ்ச்சி என்றால் அடையாளத்திற்காக இரண்டு, மூன்று பேர்களுக்கு உதவிகளை வழங்கிவிட்டு மற்றவர்களுக்கு அலுவலர்களோ அல்லது அலுவலகத்திற்கு வந்து பெற்றுக் கொள்ளும்படியான நிலையோ இருக்கும். நலத்திட்ட உதவி பெறுபவர்கள் இதற்காக அலையக் கூடிய சூழ்நிலை ஏற்படும். ஆனால், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு அப்படி ஒரு நிலை ஏற்படக்கூடாது என்பதற்காக கடந்த மூன்று ஆண்டுகளாக நானே ஒவ்வொருவருக்கும் நேரிடையாக வழங்கி வருகிறேன்.

**உறுதுணையாக இருப்பேன்**

கடந்த மூன்று ஆண்டுகளில் கோவை மாவட்டத்திற்கு மட்டும் இதுவரை 4 முறை சென்று மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கியுள்ளேன். கடந்த மூன்று ஆண்டுகளில் 5 மாவட்டங்களுக்கு மூன்று முறையும், 18 மாவட்டங்களுக்கு இரண்டு முறையும், அனைத்து மாவட்டங்களுக்கும் ஒரு முறையாவது மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்குவதற்காக சென்றுள்ளேன்.

கடந்த மூன்று ஆண்டுகளில் இதுவரை ஒரு இலட்சத்து 419 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுமார் ரூ.584 கோடி சுழல்நிதி மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் உதவிகளை நானே நேரிடையாக வழங்கியுள்ளேன். இதற்காக நான் 60 மணி நேரத்திற்கு மேலாக நின்று கொண்டே மகளிருக்கான கடன் உதவிகளை வழங்கியுள்ளேன். 60 மணி நேரம் அல்ல; உங்களுக்காக எவ்வளவு நேரம் வேண்டும் என்றாலும் நிற்பேன், உங்களுக்கு என்றும் உறுதுணையாக இருப்பேன். பெண்களின் முன்னேற்றத்திற்காக பல திட்டங்களை செயல்படுத்தி வரும் இந்த அரசிற்கு தொடர்ந்து நீங்கள் பக்க பலமாக இருந்து துணை நிற்க வேண்டும். ★

# தானம் செய்தவர்களின் உடல் உறுப்புகளைப் பாதுகாக்க ரூ.5 கோடியில் பராமரிப்பு மையம்

16-11-2009 அன்று
சென்னை, அரசு ஸ்டான்லி
மருத்துவமனையில் ஸ்டெம் செல்
ஆராய்ச்சி நிலையத்திற்கு அடிக்கல் நாட்டி
மூளை இறந்த கொடையாளி
பராமரிப்பு மையத்தினைத் திறந்துவைத்து
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
ஆற்றிய உரை.

இந்த விழாவில் ஸ்டெம் செல் ஆராய்ச்சி மையத்திற்கு அடிக்கல் நாட்டுதல், மூளை இறந்த கொடையாளி பராமரிப்பு மையம், அதிநவீன அறுவை சிகிச்சை அரங்கு ஆகியன திறந்து வைக்கப்பட்டுள்ளது. ரூ. 25 கோடி மதிப்பீட்டிலான திட்டங்கள் இன்று ஸ்டான்லி மருத்துவமனைக்குக் கிடைத்திருக்கின்றது.

ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மிகப்பழமையான வரலாறு கொண்டது. 1782ஆம் ஆண்டு மிகப் பெரிய பஞ்சம் ஏற்பட்ட போது ஆரம்பிக்கப்பட்டு, மருந்துடன் கஞ்சியும் வழங்குகின்ற இடமாக ஸ்டான்லி மருத்துவமனை விளங்கியது. ஆகவே இந்த மருத்துவமனை கஞ்சித் தொட்டி மருத்துவமனை என்று கூட அழைக்கப் பட்டது.

1836ஆம் ஆண்டு சென்னை பல்கலைக்கழகம் தொடங்கியபோது, ஸ்டான்லி மருத்துவ பள்ளிக்கூடம் இங்கு



மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களின் முன்னிலையில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை– அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் ஸ்டெம் செல் ஆராய்ச்சி மையத்திற்கு அடிக்கல் நாட்டி, அதிநவீன சிறப்பு அறுவை சிகிச்சை அரங்கை திறந்துவைத்தார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர். (16–11–2009)



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு–கோவை ★ 2010 ஜூன் 23–27

தொடங்கப்பட்டது. அதன்பின் 1933ஆம் ஆண்டு அப்போதைய கவர்னர் ஸ்டான்லி அவர்களால் மருத்துவக் கல்லூரியாக மாற்றப்பட்டு, இன்று மிகப் பெரிய வளர்ச்சி பெற்றுள்ளது.

### அதிநவீன, உயர்தர சிகிச்சை

இம்மருத்துவமனையில் நாள்தோறும் 6,000 முதல் 8,000 வரை ஏழை நோயாளிகள் சிகிச்சைப் பெறுகிறார்கள். ஸ்டான்லி மருத்துவமனை கை மற்றும் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சையிலும், இரைப்பை, குடல் சார்ந்த சிகிச்சையிலும் இந்திய அளவில் மிகச்சிறந்த இடம் வகிக்கின்றது. இரைப்பை, குடல் சார்ந்த துறைக்கு என்று 2007 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களால் புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அந்நிகழ்ச்சியில் தலைவர் கலைஞர் அவர்கள் பேசும்போது "பட்டி தொட்டிகளில் வசிப்பவரும், நடைபாதை ஓலைக் குடிசைவாசிகளும் உயர்ந்த சிகிச்சைப் பெற வேண்டும். அதுவே இந்த அரசின் குறிக்கோள்" என்று கூறியுள்ளார். 2009ஆம் ஆண்டு தென்னிந்தியாவிலேயே முதல்முறையாக அரசு மருத்துவமனையில் வெற்றிகரமாக மிக அதிக பொருட்செலவு ஆகக்கூடிய கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையை ஒரு கூலித் தொழிலாளியின் மனைவிக்கு செய்து சாதனைப்படைத்தது ஸ்டான்லி மருத்துவமனை தான். வளர்ந்து வரும் மருத்துவத் துறையில் ஸ்டெம் செல் ஆராய்ச்சி மிக முக்கியமானதாகும்.

ஸ்டெம் செல் ஆராய்ச்சி மையத்தின் முக்கிய நோக்கமே நோயால் வாடுகின்ற மக்களுக்கு அதிநவீன மற்றும் உயர்தர மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என்பதாகும். இன்று ஸ்டான்லி மருத்துவமனையில் அகில இந்திய மருத்துவ விஞ்ஞானக் கழகத்தின் உதவியுடன் ரூ.20 கோடி மதிப்பீட்டில் ஸ்டெம் செல் ஆராய்ச்சி மையத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இன்றைய கால கட்டத்தில் உறுப்புமாற்று அறுவை சிகிச்சைகள் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இன்று காலை மறைந்த கண் சிகிச்சை நிபுணர் டாக்டர் அகர்வால் அவர்கள் கூட தனது கண்களை தானமாக வழங்கி உள்ளார்.

### மத்திய அரசின் பாராட்டு

தற்போது, மூளைச்சாவினால் இறந்தவர்களின் உடல் உறுப்புகளை வழங்கத் தயாராக இருந்தாலும், உடல் உறுப்புகளை சரியான முறையில் பாதுகாக்கவும், பராமரிக்கவும் முடியாத நிலை உள்ளது. அந்நிலையினை மாற்றத்தான் இன்றைய தினம் மூளை இறந்த கொடையாளி பராமரிப்பு மையத்தினை ரூ.5 கோடி செலவில் திறந்து வைத்துள்ளோம். மேலும், ஸ்டான்லி மருத்துவமனையில் ஏற்கெனவே இரண்டு அறுவை சிகிச்சை அரங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இன்று மேலும், இரண்டு அறுவை அரங்கங்கள் கிருமிகளற்ற உள்கட்டமைப்புடன் அதிநவீன வசதிகள் கொண்ட அறுவை சிகிச்சை அரங்கங்கள் திறக்கப்பட்டுள்ளது.

சென்னையில், தென்மாநிலங்களின் சுகாதார அமைச்சர்கள், செயலாளர்கள் ஆய்வுக் கூட்டத்தில் 12.11.2009 அன்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் குலாம் நபி ஆசாத் அவர்கள் பேசுகின்ற போது "சுகாதாரத் திட்டங்களை செயல் படுத்துவதிலும், மக்கள் நல்வாழ்விற்காகவும், புதுப்புதுத் திட்டங்களை கொண்டுவருவதிலும் இந்தியாவிலேயே தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலான தமிழக அரசு மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் முன்மாதிரி மாநிலமாக விளங்குகிறது" எனப் பாராட்டியுள்ளார். முந்தைய ஆட்சியில் மக்கள் நல்வாழ்வுத்துறைக்காக ஒதுக்கப்பட்ட நிதி ரூ.1,487 கோடி மட்டுமே. ஆனால் இன்று கலைஞர் அரசு நடப்பு நிதி ஆண்டில் ரூ. 3,391 கோடி ஒதுக்கியுள்ளது. இது ஒன்றே மக்களின் நல வாழ்விற்காக கலைஞர் அரசு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கின்றது என்பதை எடுத்துக்காட்டும்.

தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு நலத்திட்டங்களிலும் மிகச்சிறப்பான ஒன்றாக கலைஞர் காப்பீட்டுத் திட்டம் செயல்பட்டு வருகிறது. மக்கள் மனதில் இத்திட்டம் சிறப்பான வரவேற்பை பெற்றுள்ளது. மருத்துவத்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு தொடர்ந்து அரசின் மூலமாக வழங்கப்பட்டு வருகின்ற நிலையில் மருத்துவர்களும், செவிலியர்களும் நோயாளிகளுக்கு அன்பான, சிறப்பான சிகிச்சை அளித்து அரசிற்கு நீங்கள் எல்லாம் உறுதுணையாக இருக்க வேண்டும். அரசு மருத்துவமனைகளை நாடி வருகின்ற ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்களுக்கு எந்த நேரத்திலும் சிறப்பான மருத்துவ சிகிச்சையை நீங்கள் அளிக்க வேண்டும். உங்களது நற்பணி தொடர வேண்டும்.

❖ ❖ ❖

### மதுரையில் அமையவுள்ள

# பிளாஸ்டிக் பொறியியல் - தொழில்நுட்ப துணை மையத்திற்கு இலவச நிலம்



**த**மிழக அரசு தமிழகத்தின் தென் மாவட்டங்களில் சமூக பொருளாதார மேம்பாடுகளுக்கு வழிவகுத்திடும் நோக்கில், புதிய தொழிற் சாலைகளை அமைப்பதில் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. இந்நிலையில், மாண்புமிகு மத்திய இரசாயனம் மற்றும் உரங்கள் துறை அமைச்சர் திரு. மு.க.அழகிரி அவர்களின் முயற்சியால், தற்போது மதுரையில் பிளாஸ்டிக் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மத்திய நிறுவனத்தின் (CIPET) துணை மையம் மத்திய அரசின் உதவியோடு அமைக்கப்படவுள்ளது என்றும், 25 கோடியே 50 இலட்சம் ரூபாய் முதலீட்டில் அமையவிருக்கும் இம்மையத்திற்கான செலவில் 50 விழுக்காடான 12.75 கோடி ரூபாய் செலவினத்தை ஏற்கவும் இதற்காக இடையப்பட்டி கிராமத்தில் 14.37 இலட்சம் மதிப்பிலான 15 ஏக்கர் நிலத்தை இலவசமாக வழங்கிடவும் தமிழக அரசு முன்வந்துள்ளது என்றும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.



அதேபோல, மதுரை மாவட்டம் மேலூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள அம்பலக்காரன் பட்டியில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் அரசு பாலிடெக்னிக் கல்லூரி ஒன்றை 2010 – 2011ஆம் கல்வியாண்டில் தொடங்குவதற்கும், கல்லூரிக்குத் தேவைப்படும் கட்டடங்கள் 6 கோடி ரூபாய் செலவில் கட்டுவதற்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இதன் மூலம் மதுரை மாவட்டத்தின் கிராமப்புற ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த மாணவர்கள் தொழிற்கல்வி பெற்று தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

❖ ❖ ❖



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜூன் 23-27

# எல்லோரும் ஓரினம் என்பதை எடுத்துக்காட்ட சமத்துவபுரங்கள் திறக்கப்படுகின்றன!

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தஞ்சை மாவட்டம், திருவோணம் ஊராட்சி தோப்பு விடுதியில் பெரியார் நினைவு சமத்துவபுரத்தைத் திறந்துவைத்தும், நலத்திட்ட உதவிகளை வழங்கியும் ஆற்றிய உரை. (13-11-2009)

**த**ஞ்சை மாவட்டம் தோப்புவிடுதி பெரியார் நினைவு சமத்துவபுரம் ரூ.3 கோடியே 10 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு திறந்து வைக்கப் பட்டுள்ளது.

இத்துடன் இன்றைய தினம் ரூ.40 கோடியே 15 இலட்சம் மதிப்பில் 228 புதிய பணிகளுக்காக அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மேலும் இதுவரையில் இம்மாவட்டத்தில் ரூ.58 கோடியே 14 இலட்சம் மதிப்பில் கட்டி முடித்து நிறைவேற்றப்பட்ட புதிய திட்டப்பணிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இவ்விழாவில் 1,000 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.6 கோடி சுழல் நிதியாகவும் மற்ற அரசுத்துறைகளின் சார்பாக 1,384 பயனாளிகளுக்கு ரூ.2 கோடியே 6 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

**எல்லோரும் ஓரினம்**

தமிழகம் முழுவதும் சமத்துவபுரங்கள் திறக்கப்படுவதன் மூலம் தந்தை பெரியார் அவர்களின் கனவு நிறைவேறவும் அனைத்து மக்களும் ஓரினம் என்ற ஒருமைப்பாட்டுடன் வாழவேண்டும் என்பதற்காகவும் முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்துச் செயல்படுத்தி



வருகின்றார். அத்தி மரத்தில் அடி முதல் நுனி வரை காய்க்கும் அனைத்து காய்களுக்கும் அத்திக்காய் என்று ஒரே பெயர் உள்ளது. அதுபோல் அனைத்துத் தரப்பு மக்களும் ஒரே இனம் என்பதை எடுத்துக்காட்டிட 1996–97 ஆம் ஆண்டு முதல் சாதி சமய வேறுபாடு அற்ற சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. முதல் கட்டமாக 145 சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டன. இடையில் வந்த ஆட்சிக் காலத்தில் சமத்துவபுரங்கள் எவ்வித பராமரிப்பும் இல்லாமல் கிடப்பில் போடப்பட்டன. மேலும் புதிதாக 2008 ஆம் ஆண்டு பெரியார் வாழ்ந்த 95 ஆண்டுகால நினைவாக 95 புதிய சமத்துவபுரங்கள் அமைக்கவும், அனைத்து சமத்துவபுரங்களிலும் தந்தை பெரியாரின் திருஉருவச்சிலை வைக்கவும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நடப்பாண்டு 30 சமத்துவபுரங்கள் ரூ.75 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் முதலாவது சமத்துவபுரத்தை திருச்சி மாவட்டத்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வீடியோ கான்ஃபரன்ஸ் மூலம் திறந்து வைத்தார்கள். திருப்பூர் மாவட்டத்தில் நிதித்துறை அமைச்சர் பேராசிரியர் அவர்கள் ஒரு சமத்துவபுரத்தை திறந்துவைத்தார். சமத்துவபுரங்களை தமிழகம் முழுவதும் திறந்து வைத்து இன்று இந்த ஆண்டுக்கான 13ஆவது சமத்துவபுரத்தைத் திறந்து வைத்துள்ளேன். மீதமுள்ள 16 சமத்துவபுரங்களை டிசம்பர் மாதத்திற்குள் திறந்து வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**சுயஉதவிக் குழுக்கள்**

இதேபோல் மகளிர் மேம்பாட்டிற்காக 1989ஆம் ஆண்டு தருமபுரியில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் முதல்முதலாகத் தொடங்கப்பட்டு மகளிர் தங்களது சொந்தக் காலில் நிற்பதற்கு தொழில் தொடங்க வங்கிகள் மூலம் அதிகளவு கடன் குறைந்த வட்டிக்கு வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது தமிழ்நாட்டில் 4 இலட்சத்து 5 ஆயிரத்து 651 சுயஉதவிக் குழுக்கள் உள்ளன. இவற்றில் 65 இலட்சத்து 20 ஆயிரம் மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். 19 ஆயிரத்து 885 இளைஞர் சுயஉதவிக் குழுக்களும் தொடங்கப் பட்டுள்ளன.

தமிழக மக்கள் மிகவும் எதிர்பார்க்கும் திட்டமான இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் 2010 டிசம்பருக்குள் அனைவருக்கும் வழங்கி முடித்திட 5ஆவது கட்டமாக 40 இலட்சம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இதுவரை முதல்கட்டமாக 30 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் சமத்துவபுர மக்களுக்கும், இரண்டாம் கட்டமாக 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும், மூன்றாம் கட்டமாக 37 இலட்சத்து 50 ஆயிரமும், நான்காவது கட்டமாக 41 இலட்சத்து 62 ஆயிரத்து 500 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும் வழங்கப்பட்டு வருகிறது. திட்டமிட்டபடி அனைவருக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் இலவச எரிவாயு அடுப்புடன் கூடிய எரிவாயு இணைப் பும் வழங்கப்படும்.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஏழை மக்களின் மேம்பாட்டிற்காக ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கும் திட்டம், ஏழைப் பெண்களின் திருமணத்திற்காக ரூ. 10 ஆயிரம் வழங்கியதை ரூ.20 ஆயிரமாக உயர்த்தி வழங்குவது போன்ற மக்கள் நலத்திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்படும்.''

விழாவிற்கு மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி அவர்கள் தலைமை வகித்தார்.

மாண்புமிகு மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு. எஸ்.எஸ்.பழநி மாணிக்கம், மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு.எஸ்.என்.எம்.உபயதுல்லா, மாவட்ட ஆட்சித்தலைவர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.


★ ★ ★

# ஒவ்வொரு துறையிலும் துரிதமான வளர்ச்சியைக் காண வழிவகுத்துள்ளார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் !

புதுடெல்லியில் 5–12–2009 அன்று மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திருமதி. அம்பிகா சோனி தலைமையில் நடைபெற்ற மாநில தகவல்துறை அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. **பரிதி இளம்வழுதி** அவர்கள் ஆற்றிய உரை.

எங்களது அன்புக்குரிய தலைவர் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் எமது மாநிலத்தின் ஒவ்வொரு துறையிலும் துரிதமான வளர்ச்சியைக் காண வழி வகுத்துள்ளார். தேவை மிகுந்த இந்த நவீன உலகில் வெற்றிகரமான ஒட்டுமொத்த வளர்ச்சி என்ற இலக்கினை நோக்கி தமிழ்நாடு மிகவேகமாக முன்னேறி வருகிறது.

1995–ஆம் ஆண்டு கூடுதல் டி.ஜிபி. (குற்றவியல்)யின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் சி.பி.சி.ஐ.டி. திருட்டு வி.சி.டி. தடுப்புப் பிரிவு அமைக்கப்பட்டது. தற்போது இந்தப் பிரிவு ஒரு காவல்துறை கண்காணிப்பாளர், ஒரு துணை கண்காணிப்பாளர், 12 இன்ஸ்பெக்டர்கள், 14 சப்இன்ஸ்பெக்டர்கள் மற்றும் இதர அதிகாரிகள் 76 பேருடன் செயல்பட்டு வருகிறது. திரைப்படத் தொழிலுக்கும், அரசுக்கும் பெரும் வருவாய் இழப்பை ஏற்படுத்தி வரும் திருட்டு வி.சி.டிக்களை ஒழிப்பது தான் இந்தப் பிரிவின் பிரதான குறிக்கோளாகும். இதுவரை இப்பிரிவு 11,084 வழக்குகளைக் கண்டுபிடித்து 79 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களைப் பறிமுதல் செய்துள்ளது. திருட்டு வி.சி.டிகளால் பொதுமக்களின் பல்வேறு பிரிவினருக்கும்,



திரைப்படத் தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் போன்றவர்களுக்கும் இடையில் மோதல்களை உருவாக்கி வருவதாலும், பொது அமைதிக்கு ஊறு ஏற்படுத்துவதாலும் குண்டர் சட்டத்தில் 1.10.2004 முதல் திருத்தம் செய்து இத்தகைய மோசமான குற்றவாளிகள் 57 பேர் இதுவரை குண்டர் சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப் பட்டுள்ளனர். வெளி மாநிலங்களுக்கு திருட்டு டி.வி.டி., வி.சி.டி.க்கள், கடத்தப்படுவதும் தடுக்கப்பட்டு வருகிறது.

**கடுமையான சட்டம் தேவை**

திருட்டு வி.சி.டி. தடுப்புப் பிரிவு சந்தித்து வரும் சிரமங்கள் பல உள்ளன. திரைப்படத் தயாரிப்பாளர்கள் சம்பந்தப்பட்ட படம் வெளியிடப்படும் போதே அதன் உலக உரிமையை வெளிநாடுகளுக்கு விற்றுவிடுகின்றனர். திருட்டு வி.சி.டி களுக்கான மாஸ்டர் பிரிண்ட்டுகள் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. மேலும் புதிய படங்கள் இன்டர்நெட்டிலிருந்து எடுக்கப்படுகின்றன. அல்லது சிறிய திரையரங்குகளில் நள்ளிரவு நேரங்களில் சிறிய கேமராக்கள், செல்போன்கள் மூலம் படம் பிடிக்கப்படுகின்றன. நாட்டில் மிகவேகமாக வளர்ந்துவரும் தொழில்களில் ஒன்றான கேளிக்கைத் தொழிலுக்கு உடனடியாக திருட்டு வி.சி.டி.யை ஒழிக்கக் கடுமையான சட்டம் தேவை.

மத்திய அரசு ஒலி–ஒளிபரப்பு சேவை ஒழுங்கு முறைச் சட்டத்தை இயற்றுவதற்கு தமிழக அரசின் ஆதரவைத் தெரிவிக்கிறேன்.

1867–ஆம் ஆண்டின் பத்திரிகைகள் மற்றும் புத்தகங்கள் பதிவு சட்டத்திற்கு உத்தேசிக்கப் பட்டுள்ள திருத்தங்களை நாங்கள் வரவேற்கிறோம்.

மாநிலத்தில் தகவல் மற்றும் மக்கள் தொடர்பு இயக்குநர் புத்தகங்களுக்கான பதிவாளராக இருக்கிறார். ஒவ்வொரு பதிப்பாளரும் புத்தகப் பதிவாளருக்கு ஒவ்வொரு வெளியீட்டின் இரண்டு நகல்களை அனுப்ப வேண்டும். அப்படி பதிவு செய்த பிறகுதான் பொது நூலகங்களுக்கும், நிறுவனங்களுக்கும் புத்தகங்களை விநியோகிக்க பதிவாளர் மனு செய்ய முடியும். இந்த ஆண்டு ஜனவரி முதல் செப்டம்பர் வரை 836 புதிய புத்தகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**கேபிள் துறையை டிஜிட்டல் மயமாக்கல்**

கேபிள் தொலைக்காட்சிகளின் தரத்தை மேம்படுத்த இந்திய தொலைத் தொடர்பு வழங்குமுறை ஆணையத்தின் பரிந்துரைகளின்படி நாட்டிலுள்ள கேபிள் டி.வி. ஆப்ரேட்டர்கள் தரமான சேவைக்காக தங்களது சேவைகளை டிஜிட்டல் மயமாக்க வேண்டும், டி.டி.எச். சேவை போன்றவற்றின் சவால்களைச் சமாளிக்க நாட்டிலுள்ள 70 ஆயிரம் கேபிள் டி.வி. ஆப்ரேட்டர்களுக்கு சில நிவாரணங்களும் கூறப்பட்டுள்ளன. அவர்கள் தங்களது சேவையை விரிவுபடுத்தி அகன்ற அலைவரிசை போன்ற மதிப்புக் கூட்டப்பட்ட சேவைகளையும் அளிக்க வேண்டும். கேபிள் டி.வி. தொழில் டிஜிட்டல் மயமாக்கப்பட்டால், இந்தியா முழுவதும் கேபிள் டி.வி. மூலமாக அகன்ற அலைவரிசை சேவை கிடைக்கும். இது கிராமப்புற மக்களுக்கும் கட்டுப்படியான கட்டணங்களில் அகன்ற அலை வரிசை சேவை கிடைத்திட உதவும்.

புதிய தொழில்நுட்பங்கள் வளர்ச்சிக்கு உதவுகின்றன. அனைத்துத் துறைகளின் வளர்ச்சிக்கும் தமிழக அரசு பாடுபட்டு வருகிறது. கேபிள் டி.வி. தொழில் துறை டிஜிட்டல் மயமாவது அனைத்து நலத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து மக்களிடம் விளம்பரம் செய்ய அரசின் முயற்சிகளுக்கு உதவும்.

**கேளிக்கை வரி ரத்து**

திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியை 1939–ஆம் ஆண்டு 54 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதமாகக் குறைத்தும், 2000–ஆம் ஆண்டில் 25 சதவீதமாகவும், தற்போது நகராட்சிப் பகுதிகளில் புதிய படங்களுக்கு 15 சதவீதமாகவும், 10 ஆண்டுகளுக்கு மேலான பழைய படங்களுக்கு 10 சதவீதமாகவும், இதர பகுதிகளில் அனைத்து படங்களுக்கும் 10 சதவீதமாகவும் குறைத்து திரைப்படத் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க தமிழக அரசு பேருதவி புரிந்து வருகிறது. 2006 முதல் தமிழில் பெயர் வைக்கும் படங்களுக்கு கேளிக்கை வரி முழுமையாக ரத்து செய்யப்பட்டுள்ளது. ★



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு–கோவை ★ 2010 ஜூன் 23–27

# பெண்களின் வளர்ச்சிதான் இந்த நாட்டின் வளர்ச்சி!

19-11-2009 அன்று, தூத்துக்குடியில் எட்டயபுரம் அருகே உள்ள ராமனூத்தில்
பெரியார் நினைவு சமத்துவபுரத்தைத் திறந்து வைத்தும் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும்
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை.


**தூ**த்துக்குடி மாவட்டத்தில் ஒரு சிறப்பான அரசு விழா ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் பல்வேறு நிகழ்ச்சிகள் இணைக்கப்பட்டு, இந்த இனிய விழாவில் உங்களோடு சேர்ந்து நானும் இந்த விழாவில் பங்கேற்பதில் அளவில்லா மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வாய்ப்பை உருவாக்கித் தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவருக்கு உறுதுணையாக இருந்த அரசு அதிகாரிகள், அலுவலர்கள், மக்கள் பிரதிநிதிகள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று புதூர் ஒன்றியம் ராமனூத்தில் தந்தை பெரியார் பெயரில் சமத்துவபுரம் திறந்து வைக்கப்பட்டு அதன் தொடர்ச்சியாக தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை சார்பில் பாலங்கள் திறப்பு, ரயில்வே மேம்பாலம் திறந்து வைக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 550 படுக்கைகள் கொண்ட கூடுதல் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டன.

இந்த மேடையில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்குதல், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுதல், பல்வேறு அரசுத்துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்குதல் இப்படி பல்வேறு விழாக்களை ஒருங்கிணைத்து அரசின் சார்பில் நடைபெறக் கூடிய இந்த பெரும் விழாவில் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த நிகழ்ச்சியைப் பார்க்கும்போது எனக்கு ஒரு உணர்வு ஏற்படுகிறது. இது என்ன அரசு விழாவா? அல்லது மாவட்ட மாநாடா? என்று சொல்லும் அளவிற்கு நடைபெற்று வருகிறது.





இன்னும் உணர்வுபூர்வமாக பூரிப்போடு சொல்ல வேண்டுமென்றால் இது மாவட்ட மகளிர் மாநாடா ? என்று சொல்லக்கூடிய அளவில் நடைபெறுகிறது.



கடந்த ஆண்டு பெருமளவு மழை பெய்ததில் தூத்துக்குடி மாநகரம் எவ்வளவு பாதிக்கப்பட்டது. அதனால் இப்பகுதி மக்கள் எவ்வளவு சிரமப்பட்டார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

பாதிக்கப்பட்ட அந்தப் பகுதிகளை பார்வையிட தலைவர் கலைஞர் அவர்கள் என்னைத் தேர்வு செய்து அனுப்பினார். வெள்ளம் சூழ்ந்த பகுதிகளுக்கு நேரடியாக சென்று ஆய்வு செய்தபோது இப்பகுதி மக்கள் பட்ட அவதியை உணர முடிந்தது.

**பக்கிள் ஓடையை சீர் செய்ய நிதி ஒதுக்கீடு**

நீண்ட வரலாறு பெற்ற பக்கிள் ஓடை தூர்வாரப்படாததால் இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளதை அறிய முடிந்தது. உடன் சென்னை சென்று அதிகாரிகளை நேரடியாக அனுப்பி ஆய்வு நடத்தினோம். முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு சென்றோம்.

பக்கிள் ஓடையை சீரமைக்க தலைவர் கலைஞர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்தார். அதன் மூலம் பணிகள் நடைபெற்று இப்போது பக்கிள் ஓடை சீரமைப்பில் முதல் கட்டப் பணி முடிவடைந்தது.

இதனால் இந்த முறை மழை வந்த போது மழைநீர் தேங்காதநிலை ஏற்பட்டதை நீங்கள் அறிவீர்கள்.

இரண்டாவது கட்டப் பணிகளை நிறைவேற்றிட நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என சமூகநலத்துறை அமைச்சர் கீதாஜீவன் கோரிக்கை வைத்தார். அவர் இந்த கோரிக்கையை இப்போது மட்டுமல்ல கோட்டையில் என்னைச் சந்திக்கும் போதெல்லாம் பல முறை கோரிக்கை வைத்தார்.

நீங்கள் கவலைப்பட வேண்டாம் அதற்கு நிதி ஒதுக்கீடு செய்து இரண்டாவது கட்டப் பணியை முழுமையாக நிறைவேற்றித்தர காத்திருக்கிறேன் என்று அவரிடம் கூறினேன். இப்போது உங்களிடமும் அதையே தெரிவிக்கிறேன். சாலைகள் குண்டும் குழியுமாக உள்ளது. இதை சீரமைக்க சிறப்பு நிதி ஒதுக்கித் தர வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்கள்.



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜூன் 23-27

பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருவது உங்களுக்குத் தெரியும் அந்தப் பணி முடிவடைந்த உடன்தான் முழுமையான சாலை வசதி செய்து தர முடியும்.

எந்தந்தப் பகுதிகளில் பாதாளச் சாக்கடை திட்டப் பணி முடிவடைந்துள்ளதோ அந்தப் பகுதிகளில் சாலை அமைக்கும் பணி நிறைவேற்றித் தரப்படும் என்ற உறுதியை உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

இந்த விழாவில் ரூ.79 கோடியே 22 இலட்சம் மதிப்பில் 170 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப் பட்டுள்ளது.

ரூ.116 கோடி மதிப்பில் 623 பணிகள் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. 1,125 சுயஉதவிக் குழுக்களுக்கு தலா பத்தாயிரம் சுழல்நிதி மற்றும் வங்கிக் கடன், பொருளாதாரக் கடனாக ரூ.7 கோடியே 28 இலட்சம் மதிப்பில் வழங்கி இருக்கிறோம்.

ஏதோ இங்கு பேருக்கு 10 பயனாளிகளுக்கு மட்டும் சுழல்நிதி வழங்கி விட்டு செல்லமாட்டேன். ஒட்டு மொத்தமாக 1,125 சுயஉதவிக் குழுக்களுக்கும் சுழல்நிதி வழங்கி விட்டுத்தான் இந்த மேடையை விட்டு இறங்குவேன்.

இந்த நிதியை நீங்கள் சிறப்பாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

மேலும் இந்த விழாவில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம், வருவாய்த் துறை, ஊனமுற்றோர் நலத்துறை , சமூகநலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் 14 கோடியே 2 இலட்சம் மதிப்பில் 11,002 பயனாளிகள் பயன் பெற உள்ளார்கள்.

இந்த விழாவில் ஒட்டு மொத்தமாக அடிக்கல் நாட்டு விழா, திறப்பு விழா, நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா என 209 கோடியே 24 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது.


அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் விழாக்களில் 100 பயனாளிகள் இருந்தால் கூட வெறும் 10 பயனாளிகளுக்கு மட்டும் நலத் திட்ட உதவிகள் கொடுத்துவிட்டு மீதியை அரசு அதிகாரிகள் வழங்குவார்கள் அல்லது நலத்திட்ட உதவிகள் உங்கள் வீடு வந்து சேரும் என்று சொல்லிவிட்டு விழாவை முடித்து விடுவார்கள்.

அந்த திட்டத்தின் பயன் வீடு வந்து சேர்ந்ததோ, இல்லையோ, அதை பெற அவர்கள் எவ்வளவு சிரமப்படுவார்கள், காலதாமதம் கூட ஏற்படலாம் என்பதை புரிந்து கொண்டு, என்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றேனோ, மகளிர் சுயஉதவிக் குழுக்கள் என்றைக்கு என் துறையின் கட்டுப்பாட்டிற்குள் வந்ததோ அன்று முதல் விழாவில் எத்தனை மகளிர் சுய உதவிக் குழுக்கு கடன் வழங்க ஏற்பாடு செய்து இருந்தாலும் அத்தனை சுயஉதவிக் குழுக்களுக்கும் நானே வழங்குவேன் என்ற நடைமுறையை ஏற்படுத்திக் கொண்டு நானே நேரடியாக ஒவ்வொரு குழுவிற்கும் வழங்கி வருகிறேன்.

சென்னையில் பல்கலைக்கழகம் சார்பில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டு முழுமையாக நானே வழங்கினேன். விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெற்ற விழாவில் 3,780 பேருக்கு நானே நேரடியாக வழங்கினேன்.

கடந்த 3 ஆண்டுகளில் தொடர்ந்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 3 முறை முதல் 5 முறை வந்து மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கியுள்ளேன். தூத்துக்குடி மாவட்டத்திற்கு மகளிர் சுய உதவிக் குழுவிற்கு சுழல்நிதி வழங்க மூன்றாவது முறையாக வந்துள்ளேன்.

ஒட்டு மொத்தமாக கூட்டிப்பார்த்தால் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்



நிதியை 62 மணிநேரம் மேடையில் நின்று கொண்டே வழங்கியுள்ளேன்.

**தமிழன் என்று சொல்ல வேண்டும்**

அந்த நேரத்தை செலவாகக் கருதாமல் உங்களுக்கு சுழல்நிதி வழங்குவதை பெருமையாகக் கருதுகிறேன். சமத்துவபுரத் திட்டத்தை அறிவித்து அதற்கு தந்தை பெரியார் நினைவாக, பெரியார் நினைவு சமத்துவபுரம் என்று தலைவர் கலைஞர் அவர்கள் பெயரிட்டார்கள்.

தந்தை பெரியார் அவர்கள் நாம் அனைவரும் சாதி, மத பேதங்களை கடந்து ஒற்றுமையுடனும், ஒருமித்த கருத்துடனும் வாழ வேண்டும் என்று விரும்பினார். தந்தை பெரியார் கண்ட கனவை நிறைவேற்றி வருபவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

ஒரு குழந்தைப் பிறந்தவுடன் கேட்டால் ஆண் குழந்தை அல்லது பெண் குழந்தை பிறந்துள்ளது என்று கூறுவார்கள்.

வளர்ந்து பெரியாளாகியவுடன் அவரை செட்டியார், முதலியார், என சாதி பெயரைச் சேர்த்து சொல்லி அழைக்கும் நிலை உள்ளது. தலைவர் கலைஞர் அவர்கள் சாதி கொடுமைகளை ஒழிக்க வேண்டும் என்ற தந்தை பெரியாரின் கனவை நிறைவேற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறார். நீ யார் என்று கேட்டால் ஒட்டு மொத்தமாக தமிழன் என்று சொல்லும் நிலை வரவேண்டும்.

தந்தை பெரியாரின் கனவை நனவாக்கும் வகையில் சமத்துவபுரத் திட்டத்தை 1996இல் அறிவித்தார். 1997இல் சமத்துவபுரத் திட்டத்தை நிறைவேற்றினார். கடந்தமுறை 5 ஆண்டு கால தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் 145 சமத்துவபுரங்களை உருவாக்கியுள்ளார்.

அதன்பின் வந்த ஆட்சியாளர்கள் சமத்துவபுரத் திட்டத்தை கிடப்பில் போட்டார்கள். சமத்துவபுரங்களை பராமரிக்கக்கூட இல்லை.

2006இல் மீண்டும் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் சமத்துவபுரங்களை பராமரிக்க, பழுதுபார்க்க ரூ.14 கோடியே 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தார்.

தந்தை பெரியார் அவர்கள் 95 ஆண்டு காலம் வாழ்ந்தார்கள். அவரது வயதைக் குறிக்கும் வகையில் 95 புதிய சமத்துவபுரங்கள் உருவாக்கப்படும் என்று அறிவித்தார். அதில் தந்தை பெரியாரின் சிலை நிறுவப்படும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் கூறினார்கள்.

2008–2009 ஆம் ஆண்டில் 29 சமத்துவபுரங்கள் அறிவிக்கப்பட்டு இதுவரை 16 சமத்துவபுரங்கள் திறக்கப்பட்டுள்ளன. முதல் சமத்துவபுரத்தை திருச்சியில் தலைவர் கலைஞர் அவர்கள் வீடியோ கான்பரன்சிங் மூலம் திறந்து வைத்தார். இரண்டாவது சமத்துவபுரத்தை திருப்பூரில் பேராசிரியர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இதுவரை திறப்புவிழா நடைபெற்ற 16 சமத்துவபுரங்கள் போக மீதி 13 சமத்துவபுரங்கள் வரும் டிசம்பர் மாத இறுதிக்குள் திறக்கப்படும்.

மேலும் 2009–10 இல் 30 சமத்துவபுரங்களும் 2010–11இல் 36 சமத்துவபுரங்களும் திறக்கப்படும்.

**கம்பீரமான வளர்ச்சி**

மகளிர் சுயஉதவிக்குழு திட்டத்தை பொறுத்தவரை இந்தத் திட்டம் 1989 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டது. அது இன்று படிப்படியாகப் பெரிய அளவில் வளர்ந்துள்ளது.

பெண்கள் யார் தயவையும் எதிர்பாராமல் தன்னம்பிக்கையுடன் தன் சொந்தக்காலில் கம்பீரமாக நிற்கும் வகையில் மாபெரும் இயக்கமாக வளர்ந்துள்ளது.

பொதுவாக ஐந்து, ஆறு பெண்கள் ஒரு இடத்தில் கூடினாலே அந்த இடத்தில் ஒரு சலசலப்பு இருக்கும். அதனால் இங்கு ஆயிரக்கணக்கில் திரண்டு இருந்தும் அமைதியுடனும், கட்டுப்பாட்டுடனும் உள்ளீர்கள். இதுதான் சுயஉதவிக் குழு உருவாக்கப்பட்டதற்கான வெற்றியாகும்.

இது போன்ற அரசு விழாக்களுக்கு செல்லும் போது அவரவர் பகுதிகளில் தயாரிக்கப்பட்ட பொருள்களை வைத்து கண்காட்சியாக வைத்திருப்பார்கள். அந்த கண்காட்சியைப் பார்த்து விட்டுத்தான் மேடைக்கு வருவோம்.

அப்போது மகளிர் சுயஉதவிக் குழுவில் இந்த பொருட்களை தயாரிப்பதற்கான மூலப் பொருட்கள் எங்கு கிடைக்கிறது. எங்கு விற்பனை செய்கிறார்கள் என்று கூறுவார்கள். விற்பனை மூலம் இவ்வளவு லாபம் கிடைத்தது என பெருமையுடன் கூறுவார்கள்.

வங்கிகளில் அவர்கள் வாங்கிய கடனை முறையாக செலுத்தி 2ஆவது, 3ஆவது முறையாக மீண்டும் கடனைப் பெறும் சூழ்நிலையை மகளிர் சுயஉதவிக் குழுவினர் பெற்றுள்ளனர்.

அந்த அளவிற்கு எழுச்சி பெற்று பல சிறப்புகளை பெற்று வளர்ந்துள்ளனர். இன்னும் பல சிறப்புகளை பெற வேண்டும் என வாழ்த்துகிறேன். பெண்களின் முன்னேற்றம் இந்த நாட்டின் முன்னேற்றமாகும். பெண்களின் வளர்ச்சி தான் இந்த நாட்டின் வளர்ச்சி ஆகும். இப்படி யாரும் நினைத்துப் பார்க்க முடியாத திட்டங்களை நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமும் நிறைவேற்றி வரும் தலைவர் கலைஞர் அவர்களுக்கு நீங்கள் ஆதரவாக இருக்க வேண்டும்.

★ ★ ★

# தியாகத்தை – உழைப்பை மதித்து; கட்சிபேதமின்றி – பொதுவுடைமைவாதி சீனிவாசராவ் நினைவு மண்டபம் கட்ட உத்தரவிட்டவர் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்

மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்



**14–11–2009** அன்று, திருவாரூர் ஒடாச்சேரியில் சமத்துவபுரம் திறப்பு விழாவில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை

**தி**ருவாரூர் மாவட்டத்தில் திருவாரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒடாச்சேரி ஊராட்சியில் தந்தை பெரியார் பெயரில் அமைந்திருக்கக் கூடிய சமத்துவபுரத்தின் திறப்பு விழா, இன்று காலையில் திருத்துறைப் பூண்டியில் நடைபெற்ற தியாகி சீனிவாசராவ் அவர்களின் நினைவு மண்டபத்தின் திறப்பு விழா, மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கும் விழா, புதிய கட்டடங்களின் திறப்பு விழா, வளர்ச்சித் திட்டப் பணி



உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை★2010 ஜூன் 23-27

களுக்குரிய அடிக்கல் நாட்டுவிழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, இப்படி பல்வேறு விழாக்களை ஒருங்கிணைத்து எழுச்சியோடு, ஏற்றத்தோடு நடை பெறுகின்ற சிறப்பான இந்நிகழ்ச்சியிலே, இது நிகழ்ச்சி என்று சொல்லுவதா அல்லது அரசின் விழா என்று குறிப்பிடுவதா அல்லது திருவாரூரில் நடைபெறக்கூடிய மகளிர் மாநாடு என்று குறிப்பிடுவதா என்ற சந்தேக உணர்வோடு நான் உங்கள் முன்னாள் நின்று கொண்டிருக்கிறேன். காரணம் அந்த அளவிற்கு எழுச்சியோடு ஏற்றத்தோடு பெருமையோடு பூரிப்போடு அனைவரும் பெருமைப்படத்தக்க கூடிய வகையிலே இந்த நிகழ்ச்சி அமைந்திருக்கிறது. இப்படிப்பட்ட சிறப்பான நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக்கக்கூடிய இந்த மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் அவருக்குத் துணை நின்று பணியாற்றிக் கொண்டிருக்கக் கூடிய அரசு அதிகாரிகள், மாவட்டத்தை சார்ந்திருக்கக் கூடிய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப் பினுடைய பிரதிநிதிகள் அத்தனை பேருக்கும் அரசின் சார்பில் எங்களுடைய பாராட்டுகளை வாழ்த்துகளை நன்றி உணர்வோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே உங்களோடு சேர்ந்து நானும் பங்கேற்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் பெருமைப் படுகிறேன். இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையிலே இன்று காலையிலே திருத்துறைப்பூண்டி நகரத்தில் பொதுவுடமைக் கருத்துகளை உள்ளத்திலே ஏந்தி, கம்யூனிச சித்தாந்தத்தை லட்சியமாக ஏற்றுக்கொண்டு ஏழை எளிய மக்கள், குறிப்பாக விவசாயிகள், தொழிலாளர்கள், அவர்களுடைய உரிமையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக தன்னுடைய வாழ்நாள் முழுவதும் போராடி வாதாடி அதில் ஓரளவிற்கு வெற்றி கண்டு இன்று வரலாற்றிலே இடம் பெற்றிருக்கக்கூடிய ஒரு மாபெரும் தியாகியாக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய அனைவராலும் அன்போடு அழைக்கப்படக் கூடிய பி.எஸ்.ஆர். என்கிற சீனிவாசராவ் அவர்களுக்கு நினைவு மண்டபத்தை கட்டிட வேண்டும் என்று தொடர்ந்து குறிப்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை சார்ந்திருக்கக்கூடிய தலைவர்கள் அதிலும் குறிப்பாக சட்டமன்றத்திலே ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினராக இருந்த பழனிச்சாமி அவர்கள் அவரைத் தொடர்ந்து நம் அன்பிற்குரிய சிவ புண்ணியம் அவர்கள் அவர் வழியிலே அவர் தலைமையை ஏற்றுக்கொண்டு சட்டமன்றத்திலே அந்தக் கட்சியை சார்ந்திருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து சட்டமன்றத்திலே இந்த கருத்தை எடுத்து சொல்லி இந்த வேண்டுகோளை ஏற்று கட்சி வித்தியாசம் பார்க்காமல் உழைப்பை – தியாகத்தை மதித்து, அவை இன்று நிறைவேற்றப்படக்கூடிய நிலைக்கு வந்து நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு அதற்கான ஆணையை உரிய முறையில் வழங்கி உத்தரவு வழங்கி அது இன்று நினைவு மண்டபமாக கட்டப்பட்டு திருத்துறைப்பூண்டி நகரத்திலே எல்லோரும் பாராட்டக்கூடிய வகையிலே





ஏன் இன்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரப்பூர்வ நாளேடான ஜனசக்தி நாளிதழில் நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், இந்த அரசுக்கும் நன்றி தெரிவித்து விளம்பரங்கள், தீர்மானங்கள், வாழ்த்துகள், பாராட்டுகள், நன்றி உணர்வோடு எடுத்து சொல்லப்படுகின்ற நிலையிலே இன்று காலையிலே நம்முடைய பி.எஸ்.ஆர். நினைவு மண்டபம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும் தொடர்ந்து இன்று மாலையிலே நடைபெறக்கூடிய நிகழ்ச்சி நாங்கள் இந்த மேடைக்கு இந்த அரங்கத்திற்கு வருவதற்கு முன்பு சமத்துவபுரத்தைத் திறந்து வைத்து விட்டுத்தான் இந்த மேடைக்கு வந்திருக்கிறோம். குறிப்பாக இந்த நிகழ்ச்சியைப் பொருத்த வரையில் நான் கோடிட்டுக் காட்ட விரும்புவது, ஊரக வளர்ச்சித் துறை சார்பில் 50 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே முத்துப்பேட்டை ஒன்றியம் வளாங்காடு ஊராட்சியில் அமையவிருக்கக்கூடிய தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம் அதுபோல் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் உள்ளிட்ட 522 பணிகளுக்கும் நெடுஞ்சாலைத்துறை சார்பில் நபார்டு திட்டத்தின்கீழ் 13 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே பாலங்கள், சாலைப் பணிகள் உள்ளிட்ட 7 பணிகளுக்கும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் 8 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே பல்வேறு குடிநீர் அபிவிருத்தித் திட்ட பணிகள் உள்ளிட்ட 244 பணிகளுக்கும் கல்வித்துறையின் சார்பில் 6 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே பல்வேறு பள்ளிக்கட்டடப் பணிகள் உள்ளிட்ட 112 பணிகளுக்கும் சுகாதாரத்துறை சார்பிலே 2 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு கட்டடப் பணிகள் உள்ளிட்ட 112 பணிகளுக்கும், நகராட்சி மற்றும் பேரூராட்சி பணிகள் சார்பிலே 1 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே நகராட்சி புதிய அலுவலகக் கட்டடம்


சமுதாயக்கூடம், வணிக வளாக பணிகள் உள்ளிட்ட 6 பணிகளுக்கும், தீயணைப்பு மற்றும் தாட்கோ சார்பில் 1 கோடியே 41 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே 8 பணிகளுக்கும், ஆக 84 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே 911 பணிகளுக்கு இந்த விழாவில் அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.

திறப்பு விழாவை எடுத்துக் கொண்டால் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் 25 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே திருவாரூர் ஒன்றியம், நான் துவக்கத்திலே சொன்ன ஓடாச்சேரியில் தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம் உள்ளிட்ட 311 பணிகள், கல்வித்துறை சார்பிலே 5 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே பல்வேறு கட்டடப்பணிகள் உள்ளிட்ட 51 பணிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பிலே 2 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே 51 குடிநீர் மேம்பாட்டுப் பணிகள், சுகாதாரத்துறை சார்பிலே 2 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே இரண்டு மருத்துவமனை கூடுதல் கட்டடப் பணிகள், நெடுஞ்சாலைத்துறை சார்பிலே நபார்டு மற்றும் சாலைகள் திட்டத்திற்கு 2 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே 3 பாலம் மற்றும் சிறுபாலங்கள், பேரூராட்சிகள், பிற்படுத்தப்பட்ட நலத்துறை, நூலகத்துறை, தாட்கோ, தமிழ் வளர்ச்சித்துறை இப்படி பலதுறை களின் சார்பில் 2 சமுதாயக் கூடம் அதாவது 2 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே சமுதாயக் கூடங்கள், மாணவியர் விடுதிகள் உள்ளிட்ட 9 பணிகள், ஆக 40 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே 435 பணிகள் முழுமையாக நிறைவு பெற்று மக்களுடைய பயன்பாட்டிற்காக இந்த விழாவின் மூலம் திறந்து வைக்கப் பட்டிருக்கிறது. அதேபோல் நலத்திட்ட உதவிகள் ஆயிரக்கணக்கிலே இங்கு தாய்மார்கள், சகோதரிகள் மகளிர் சுய உதவிக் குழுவின் பெயரில் இங்கு வந்திருக்கிறீர்கள். ஆக இங்கு வந்திருக்கக்கூடிய சுயஉதவிக் குழுவினருக்கு 1,451 சுயஉதவிக் குழுவினருக்கு சுழல்நிதி மானியம் வங்கிக் கடன் உதவி, அதாவது 8 கோடியே 62 இலட்சம் ரூபாய் சுயஉதவிக் குழுவினருக்கு இந்த மேடையிலே வழங்கப்படவிருக்கிறது.

இதைச் சொல்லுகிறபோது இன்னொரு செய்தியையும் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். 1,451 சுயஉதவிக் குழுக்களுக்கு இந்த சுழல்நிதி வங்கிக் கடன் வழங்கப் படுகிறது என்று சொன்னால் ஏதாவது அடையாளத்திற்காக 5,6 பேர்களை அழைத்து அவர்களுக்கு மாத்திரம் தருகிறோம் என்று எண்ணவேண்டிய அவசியமில்லை. 1,451 குழுவினரையும் மேடைக்கு அழைத்து ஒவ்வொரு குழுவினருக்கும் இந்த மேடையிலே வழங்கப்படவிருக்கிறது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக அரசு நிகழ்ச்சிகள் என்று சொன்னால் அமைச்சர்களாக இருந்தாலும் சரி, அல்லது நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, உள்ளாட்சி அமைப்புகளுடைய தலைவர்களாக இருந்தாலும் சரி, மாவட்ட ஆட்சி தலைவர்களாக இருந்தாலும் சரி, அரசின் அதிகாரிகளாக இருந்தாலும் சரி நலத்திட்ட உதவிகள் என்ற நிலையை அவர்கள் உருவாக்கி அதற்காக நிகழ்ச்சி நடத்துகிறபோது அடையாளத்திற்கு



10 பேரை அழைத்து தந்துவிட்டு அதற்கு பிறகு உங்களுக்கு வீடு தேடிவரும் அல்லது நீங்கள் அரசினுடைய அலுவலகத்திற்குச் சென்று பெற்றுக்கொள்ளலாம் என்று சொல்லி அனுப்பி விடுவார்கள் பல்வேறு திட்டங்களைப் பொருத்தவரையில் அந்த நிலையில் இருக்கலாம், ஆனால் இந்த சுயஉதவிக் குழுக்கள் சமூகநலத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த நிலையில்தான் சுயஉதவிக் குழு இருந்து வந்தது. ஆனால் ஐந்தாம் முறையாக நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று அவருடைய தலைமையில் அமைந்த அமைச்சரவையில் ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித்துறை பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தபோது அந்த நிலையில் தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் சமூக நலத்துறையிடம் இருந்த இந்த சுயஉதவிக் குழுவை என் சார்பில் இருக்கக்கூடிய எங்கள் துறையிலே ஒப்படைத்தார்கள். அப்படி ஒப்படைக்கப் பட்டதற்கு பிறகு சுயஉதவிக் குழுக்களை பொறுத்த அளவிலே அது வங்கிக்கடனாக இருந்தாலும் சரி, சுழல்நிதியாக இருந்தாலும் சரி அத்தனை பேருக்கும் தரவேண்டும் என்ற ஒரு நிலையை ஒரு முடிவாக எடுத்து ஏன் ஒரு சபதமாக ஏற்றுக்கொண்டு நம்முடைய அமைச்சர்கள் எல்லாம் கூட என்னிடத்திலே கேட்பார்கள் அது முடியுமா, நடக்குமா, உங்களால் நிற்க முடியுமா, அதற்கு நேரம் போதுமா என்றெல்லம்கூட கேட்பார்கள், அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. முடியும், நிற்க முடியும், வழங்க முடியும் அது எந்த பிரச்சினைகளாக இருந்தாலும் அதை எல்லாம் ஏற்றுக்கொண்டு வழங்குவதற்கு நாங்கள் தயார் என்ற உறுதி எடுத்துக் கொண்டு தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறோம். ஆகவே உங்களுக்கு எந்த சந்தேகமும்



வரவேண்டிய அவசியமில்லை 1,451 குழுக்களுக்கும் நிதியைத் தந்து விட்டுத் தான் இந்த மேடையை விட்டு நாங்கள் இறங்கிப்போவோம், என்ற உறுதியை முதலிலே நான் உங்களிடம் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆக இந்த நிலையிலே சுய உதவிக் குழுக்கள் மாத்திரமல்ல, அரசின் துறைகளாக இருக்கக் கூடிய பல்வேறு துறைகள் வேளாண்மை, வேளாண்மை பொறியியல் துறை, தோட்டக்கலை துறை, சமூக நலத்துறை, வருவாய்த்துறை, தாட்கோ நிறுவனம், உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம், மாவட்ட தொழில் மையம் என்று பல்வேறு துறைகளின் சார்பில் 18 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே 11 ஆயிரத்து 774 பயனாளிகளுக்கு இந்த விழாவிலே வழங்கப்பட விருக்கிறது. ஆக மொத்தம் ஒட்டு மொத்தமாக கூட்டிப் பார்த்தால் நலத்திட்ட உதவிகள், அடிக்கல் நாட்டுதல், திறப்பு விழாக்கள் இந்த மூன்றையும் ஒருங்கிணைத்து கூட்டிப் பார்த்தால் இந்த நிகழ்ச்சியை பொருத்தவரைக்கும் நான் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன், 142 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே நடைபெறக் கூடிய நிலையிலே இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆக இந்த நிகழ்ச்சியை பொருத்தவரைக்கும் சமத்துவபுரம், அந்த சமத்துவபுரம் ஏன் தொடங்கப்பட்டது. இது ஏதோ புதிதாக 5ஆம் முறையாக 2006லே நம்முடைய தலைவர் கலைஞர் ஆட்சிக்கு வந்து உருவாக்கிய திட்டம் அல்ல. ஏற்கெனவே, 1996ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோதே இந்தத் திட்டத்தை ஏற்படுத்தித் தந்தார், அப்படி ஏற்படுத்தியபோது இந்தத் திட்டத்திற்கு தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம் என்ற ஒரு பெயரைச் சூட்டி மகிழ்ந்தார்,

**உங்களது உணர்வை புரிந்து அறிந்து அதற்கு ஏற்றவகையிலே பெண்களுக்கான நலத்திட்ட உதவிகளை, எத்தனையோ சாதனைகளை நாள் ஒரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக இன்றைக்கு தலைவர் கலைஞர் அவர்கள் காரியங்களை தொடர்ந்து தீட்டிக்கொண்டிருக்கிறார்கள். நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.**

தந்தை பெரியார் பெயரை சமத்துவபுரத்திற்குச் சூட்ட வேண்டிய அவசியம் என்ன? தந்தை பெரியார் கண்ட கனவு அவர் எண்ணிய எண்ணம் அவர் இந்த சமுதாயம் வாழவேண்டும் என்பதற்காக மட்டுமல்ல வாழக்கூடிய சமுதாயம் ஒற்றுமையோடு வாழவேண்டும், ஒருமித்த கருத்தோடு வாழவேண்டும், ஜாதி, மதங்களைக் கடந்து நாம் ஒற்றுமை உணர்வோடு வாழவேண்டும், என்கிற அந்த சித்தாந்தத்தை அடிப்படையாக வைத்து அவர் போராடினார், வாதாடினார். அதை நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

2009–2010ஆம் ஆண்டு மேலும் 30 சமத்துவபுரம், 2010–2011ஆம் ஆண்டு மேலும் 34 சமத்துவபுரங்கள் அதற்கான நிதிகள் எல்லாம் ஒதுக்கீடு செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட இருக்கிறது என்பதை நான் இந்த நிகழ்ச்சி மூலமாக நான் உங்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதேபோல் சுயஉதவிக் குழுவும் இப்பொழுது நாம் ஆட்சிக்கு வந்து உருவாகிய அமைப்பு அல்ல ஏற்கெனவே கலைஞர் ஆட்சிக்காலத்தில் 1989ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்திலே இந்த சுயஉதவிக் குழு முதன் முதலில் தொடங்கப் பெற்றது.

ஆனால் இப்போது மூன்றரை ஆண்டு காலத்திலே சுழல்நிதியாக 198கோடியே 50 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதுஒரு பெரும் சாதனை இல்லையா?


உங்களது உணர்வை புரிந்து அறிந்து அதற்கு ஏற்றவகையிலே பெண்களுக்கான நலத்திட்ட உதவிகளை, எத்தனையோ சாதனைகளை நாள் ஒரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக இன்றைக்கு தலைவர் கலைஞர் அவர்கள் காரியங்களை தொடர்ந்து தீட்டிக்கொண்டிருக்கிறார்கள். நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள், அப்படி நிறைவேற்றக்கூடிய இந்த ஆட்சிக்கு நீங்கள் என்றைக்கும் பக்கபலமாக துணை நிற்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் உங்களிடத்தில் அன்போடு கேட்டுக் கொண்டு, சுழல்நிதி பெற வந்திருக்கக்கூடிய – வங்கிக் கடனை பெற வந்திருக்கக்கூடிய சுயஉதவிக் குழு அத்தனை பேருக்கும் நான் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் அதேபோல் நலத்திட்ட உதவிகளைபெற வந்திருக்கக் கூடிய உங்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். ★

# கன்னியாகுமரி மாவட்டத்தில்

# பல ஆண்டுகளாக மின்சார வசதி இல்லாத 33 மலைவாழ் கிராமங்களுக்கு மின் இணைப்பு

மாண்புமிகு துணை முதலமைச்சர்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 2.12.2009 அன்று துவக்கி வைத்து ஆற்றிய உரை.



**மா**ண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மின்சாரம் இல்லாத கிராமங்களே தமிழ்நாட்டில் இருக்கக்கூடாது என்பதை மனதில் கொண்டு அதனை நிறைவேற்றி வருகிறார்கள். தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதோடு மட்டுமல்லாது அறிவிக்கப்படாத பல்வேறு திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறார்கள். சுதந்திரமடைந்து பல ஆண்டுகளாகியும் குமரி மாவட்டத்தில் மலைவாழ் மக்கள் வசிக்கும் கிராமங்களுக்கு மின்சாரம் வழங்க முடியாத நிலை இருந்து வந்தது. அதனை மாற்றி மலைப்பகுதி கிராமங்களுக்கு மின்சார வசதி அளித்திட வேண்டும் என்பதை மனதில் கொண்டு 2006 ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அதனை நிறைவேற்ற முனைப்பான திட்டங்களை உருவாக்கினார். இதனடிப்படையில் இத்திட்டம் இங்கு இன்று நிறைவேற்றப்படுகிறது.

மேலும் விடுபட்ட மலை கிராமங்களுக்கு மாவட்ட நிருவாகமும் மின்சார வாரியமும் தமிழக அரசும் இணைந்து மின்சாரம் வழங்கி அதில்

வெற்றியை காணும். இதன்மூலம் தி.மு.க ஆட்சியில் மின்சாரம் இல்லாத கிராமங்களே இல்லை என்ற நிலைமை உருவாகும். தேர்தல் அறிக்கையில் கலைஞர் அவர்கள் ஒரு கிலோ அரிசி 2 ரூபாய், விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி போன்ற பல்வேறு அறிவிப்புகளை அறிவித்தார். மாற்றுக்கட்சியினர்கள் தேர்தல் நேரத்தில் போலியான வாக்குறுதிகளை அளிக்கிறார்கள் என ஏளனம் செய்தார்கள். ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை மீண்டும் எங்களிடம் ஒப்படைத்தால் அனைத்துத் திட்டங்களும், வாக்குறுதிகளும் நிறைவேற்றுவோம் என்று கூறினார்கள். பொதுமக்களாகிய நீங்களும் தலைவர் கலைஞர் அவர்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தீர்கள். பதவிப்பிரமாணம் ஏற்றுக் கொண்ட முதல்வர் கலைஞர் அவர்கள் கோட்டைக்குச் செல்லாமல் கோட்டையிலிருந்து கோப்புகளை விழா மேடைக்கு கொண்டு வரச்செய்து தேர்தலில் அறிவித்த வாக்குறுதிகளை நிறைவேற்றினார்கள்.

ஐந்தாம் முறையாக தமிழ்நாட்டில் முதல்வராகப் பொறுப்பேற்ற கலைஞர் அவர்கள் மாவட்ட ஆட்சியர் மாநாட்டில் அனைவருக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க வேண்டும் என்று தெரிவித்தார்கள்.

அப்போது நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மலையோர கிராமங்களில் மின்சாரம் இல்லாத நிலை இருந்து வருகிறது எனக் கூறினார். அதனை மனதில் கொண்ட கலைஞர் அவர்கள் மின்சார இணைப்பு இல்லாத வீடுகளுக்கு மின்சார இணைப்புடன் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க வேண்டும் என அறிவித்து அதனை செயல்படுத்திட செய்தார்கள். அந்த அடிப்படையில் மலைவாழ் மக்கள் வசிக்கும் கிராமங்களில் மின்சார வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மின் கம்பங்களே எடுத்துச் செல்ல முடியாத பகுதிகள் வழியாக மின்கம்பங்களை எடுத்துச் சென்று மலைவாழ் கிராமங்களுக்கு மின்சாரம் வழங்க அனைத்து முயற்சிகளையும், நடவடிக்கைகளையும் மேற்கொண்ட கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களையும், மின்சார வாரிய அலுவலர்களையும் நான் மனதார பாராட்டுகிறேன்.

இந்த விழாவில் காவல்துறை, வனத்துறை, மின்சாரத்துறை ஆகிய துறைகளை சேர்ந்த அலுவலர்களும், பணியாளர்களும் தங்கள் வீட்டில் நடைபெறும் விழாவிற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பார்களோ அந்தளவிற்கு இன்று நடைபெறும் விழாவிலும் முழு ஈடுபாட்டோடு செயல்பட்டார்கள் என்பதை பார்க்கும்பொழுது நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. என். சுரேஷ்ராஜன், மாவட்ட ஆட்சியர் திரு. இராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப., நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. ஜே.ஹெலன் டேவிட்சன், உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் புதிதாக மின் இணைப்பு பெற்ற மலைவாழ் மக்கள் தங்களது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். அப்போது மின் இணைப்புப் பெற்ற மலைவாழ் மக்கள் கூறுகையில், ''கலைஞர் அரசு இருளிலே வாழ்ந்த எங்களுக்கு ஒளி கொடுத்து எங்கள் வாழ்வில் ஒளியேற்றியுள்ளது. சுதந்திரம் அடைந்து ஆண்டுகள் பலவாகியும் எங்களது குறைகள் தீர்க்கப்படாத நிலை இருந்தது. இன்று கலைஞர் அரசு இதனை எங்களுக்கு மின் இணைப்பை வழங்கி வாழ்நாளில் மறக்க முடியாத சாதனைகளை நிகழ்த்தி உள்ளது. இந்த இணைப்பை நாங்கள் பெற்றுள்ளதை எண்ணி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் பல கோடி நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்''. என்றனர்.

★ ★ ★


உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை ★ 2010 ஜூன் 23-27

# உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் நினைவாக கோவையில் உலகத் தரம் வாய்ந்த தாவரவியல் பூங்கா!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் அறிவிப்பு

**கோ**வையில் 2010 ஜூன் திங்கள் 23–27 தேதிகளில் நடைபெறவுள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் நினைவாக கோவை மாநகரத்தின் மையப்பகுதியில் உலகத்தரம் வாய்ந்த ஒரு தாவரவியல் பூங்கா அமைப்பது என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முடிவு செய்துள்ளார்.



இத்தாவரவியல் பூங்கா, இப்பகுதியில் வளரக்கூடிய தாவரங்கள், பூச்செடிகள், செடிகொடிகள் மற்றும் மரங்கள் போன்றவற்றைக் கொண்டு மிகப்பெரிய அளவிலும் உலகத்தரம் வாய்ந்ததாகவும் இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தி உள்ளார்.

கோவையில் தற்போதுள்ள மத்திய சிறைச்சாலையைப் படிப்படியாக வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு, இப்பகுதியில் இந்தத் தாவரவியல் பூங்கா அமைக்கப்படும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

❖ ❖ ❖

---

# நீலகிரி மாவட்டத்தில் பெருமழையால் வீடிழந்தவர்களை குடியமர்த்திட நடவடிக்கை!


**அ**ண்மையில் நீலகிரி மாவட்டத்தில் பெய்த பெருமழையின் காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சேதமடைந்த வீடுகள் குறித்த கணக்கெடுப்பு நடைபெற்று வருகின்றது.

நீலகிரி மாவட்டத்தில் **1,869** வீடுகள் நிலச்சரிவின் காரணமாக முழுவதுமாகவோ, பகுதியாகவோ சேதமடைந்துள்ளதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. சேதமடைந்த வீடுகளைப் புதிதாகக் கட்டுவது மற்றும் தற்காலிக வீடுகள் கட்டுவது குறித்து 16.11.2009 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், தலைமைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், வருவாய் நிருவாக ஆணையர், வருவாய்த்துறைச் செயலாளர், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முழுவதுமாக சேதமடைந்த வீடுகள் அனைத்தையும் மாற்றி, புதிய வீடுகள் கட்டுவதற்கு சுமார் ஆறுமாத காலம் ஆகும் என்பதால், உடனடியாக தற்காலிக வீடுகள் கட்டித் தருவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. இந்தத் தற்காலிக வீடுகள் ஒவ்வொன்றிற்கும் சுமார் 70 ஆயிரம் ரூபாய் செலவாகும். இந்தத் தற்காலிக வீடுகள் 15 நாட்களுக்குள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்டு விடும். தற்பொழுது முகாம்களில் தங்கியுள்ள முழுவதுமாக வீடுகளை இழந்த குடும்பங்களை அந்த வீடுகளில் உடனடியாக குடியமர்த்த போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். ஆறு மாதத்திற்குப் பிறகு புதிய வீடுகள் வழங்கப்படவுள்ளது. ❖



மகாகவி பாரதியார் அவர்களின் 128ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை காமராஜர் சாலையில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி, மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். முக்கியப் பிரமுகர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் உள்ளனர். (11–12–2009)



மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 131ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை பாரிமுனை, உயர்நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு நா. வீராசாமி, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி, ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். முக்கியப் பிரமுகர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் உள்ளனர். (10–12–2009)

## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலோடு 12ஆவது திட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்திட தமிழக அரசு முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது!

புதுடெல்லியில், 15–11–2009 அன்று நடைபெற்ற மாநில மின்துறை அமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. **ஆர்க்காடு நா. வீராசாமி** அவர்கள் ஆற்றிய உரை.



**இ**த்துறையில் பல்வேறு கொள்கை முன் முயற்சிகளில் மத்திய அரசு நல்ல முறையில் முன்னேறி வருவதுடன் மின் உற்பத்தி, கடத்தி, விநியோகம் போன்றவற்றிலும் சீர்திருத்தங்களை ஊக்குவிக்கும் வகையில் செயலாற்றி வருகிறது. புதிய அரசு அமைந்து 100 நாட்களுக்குள் நிறுவப்பட்டுள்ள திறனுடன் 41.123 மெகாவாட் கூடுதல் திறனை சேர்த்துள்ள சாதனைக்காக மாண்புமிகு அமைச்சரையும், மின்துறை குடும்பத்தினர் அனைவரையும் பாராட்டுகிறேன். மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான மேம்பாட்டில் முழுமையான, செயல்துடிப்பான அணுகுமுறையை உருவாக்கியுள்ளதற்காக நன்றி கூறுகிறேன். அதனுடனான துணை மின் நிலையங்களையும் அமைகிற ஏற்கெனவே எங்களது மாநிலம் பொதுத்துறை, தனியார் துறை கூட்டு முயற்சிக்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

உற்பத்தித்திறன் கூடுதலுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் மெகா மின் கொள்கைக்குத் தேவையான திருத்தங்களையும், மாறுபாடுகளையும் செய்ய வேண்டும் என்று கடந்த ஜூன் 23 அன்று நடைபெற்ற இதுபோன்ற கூட்டத்தில் நான் விடுத்த வேண்டுகோளை ஏற்றதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**சூரிய ஒளி**



பிறவற்றுடன், மாநிலங்களுக்கிடையில் மின்சார விற்பனையைக் கட்டாயமாக்குதல், விநியோகத் துறையை தனியார் மயமாக்குதல் ஆகியவற்றை அகற்றியுள்ளவாறு நிச்சயமாக நல்ல நடவடிக்கைகளாகும். அதுபோலவே சூப்பர்

தொழில்நுட்பத் திட்டங்களுக்குப் பயன்களை விரிவாக்கியுள்ளதும் வரவேற்கத்தக்கது. இருப்பினும், தற்போது 1,000 மெகாவாட் தொடக்கத் தருணத் திறனை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று ஆலோசனை தெரிவிக்கின்றனர். ஏனெனில் தற்போது நிறைவேற்றப்பட்டு வரும் இத்தகைய பல திட்டங்களில் 660/ 800 மெகாவாட் திறன் கொண்டவையாகும்.

சூரிய ஒளி எரிசக்தித் துறைக்கு சுமூகமான சூழ்நிலையை உருவாக்கி யுள்ளதற்காக மாண்புமிகு அமைச்சர் பரூக் அப்துல்லாவிற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பலவிதமான நெருக்கடிகளுக்கு இடையிலும், எங்களது மாநிலத்தின் மின்சார நிலையை நாங்கள் மிகவும் திருப்திகரமாகச் சமாளித்து வருகிறோம்.

**மெகா மின் தகுதி**

11ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 5,055 மெகாவாட் கூடுதலுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. முதல் இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு ஏற்கெனவே 147 மெகாவாட் சேர்த்துள்ளதுடன் மீதமுள்ள 4,908 மெகாவாட் சிரமமாகத் தோன்றினாலும் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே சேர்க்கப்படும். இருப்பினும் திறமையான ஊழியர்கள் மற்றும் சாதனங்கள் விநியோகம் ஆகியவை தடைகளாக இருப்பதால் மத்திய அரசு இவற்றைப் போதுமான அளவு வழங்க வேண்டும்.

தற்போது நிறைவேற்றப்படும் 1,200 மெகா வாட் திறன் கொண்ட வட சென்னை அனல்மின் நிலையம் மெகா மின் கொள்கையின் பயன்களுக்கு முழுமையான தகுதி உடையது என்பதால் இத்திட்டத்திற்கு மெகா மின் தகுதி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னைக்கு அருகில் வல்லூரில் 1,500 மெகாவாட் த.நா.மி.வா. – தேசிய அனல் மின் கழகம் கூட்டு முயற்சித் திட்டம், தூத்துக்குடியில் த.நா.மி.வா – நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் கூட்டு முயற்சித் திட்டம் ஆகியவை திட்டமிட்டபடி முன்னேறி வருகின்றன. எனினும் எங்களது எதிர்காலத் தேவைகளைச் சமாளிக்க, இந்த இருதிட்டங்களை நிறுவப்பட்டுள்ள திறனில் 75 சதவீதத்தை தமிழ்நாட்டுக்கு அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவற்றுடன் இந்திய அணு மின் கழகத்தால் அமைக்கப்பட்டு வரும் 2,000 மெகாவாட் கூடங்குளம் அணு மின் நிலையம், 500 மெகாவாட் நெய்வேலி இரண்டாவது அனல் மின்நிலையம் ஆகியவை 2010 ஜூன் மாத வாக்கில் உற்பத்தியைத் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இந்த இரண்டு திட்டங்களையும் துவங்கி வைக்க ஏற்பட்ட தாமதம் எங்களது முயற்சிகளைப் பாதிக்கும் என்பதால் அவை விரைவில் துவங்கி வைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**நிலக்கரி அமைச்சகம் அனுமதி தரவேண்டும்**

இவைதவிர தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் 20 மெகாவாட் திறன் சூரிய ஒளி மின்சாரம் எடுக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். இவை மட்டுமல்ல மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையிலான எங்களது அரசு 12ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தேவைகளையும் நிறைவேற்ற முன்கூட்டியே நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 3,400 மெகாவாட் திறன் கொண்ட மூன்று அனல் மின் நிலையங்களை அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அனுமதி வழங்கியுள்ளார். இருப்பினும் இந்தத் திட்டங்களுக்கான நீண்டகால நிலக்கரித் தேவைகளுக்கு மத்திய நிலக்கரி அமைச்சகம்

இன்னமும் அனுமதி வழங்கவில்லை. அதை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தனியார் மின்சார ஜெனரேட்டர்களிலிருந்து பெரும் செலவில் மின்சாரத்தைப் பல மாநிலங்கள் வாங்கிவருவது மத்திய அரசுக்குத் தெரியும். எனவே திரவ எரிபொருள்களுக்கு சுங்கவரி விலக்கு அளித்தால் உற்பத்திச் செலவு குறைந்தபட்சம் யூனிட்டுக்கு 50–60 பைசா வரை குறையும்.

தற்போதைய கொள்கைப்படி எங்களது மாநிலத்திலுள்ள பல்வேறு அனல் மின் நிலையங்களுக்கு 1.4 கோடி டன் நிலக்கரி அளிக்கப்பட்டு, அவை கடல் மற்றும் ரயில் வழியாக வந்து சேர்கின்றன. இருப்பினும் கடல் வழியாகக் கொண்டு வரப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் சேவை வரி விதிக்க சமீபத்தில் நிதி கூட்டத்திற்கு செய்யப்பட்டுள்ள திருத்தத்தால் நிலக்கரி கையாளும் செலவு அதிகரிக்கிறது. எனவே அனல் நிலக்கரியை கடலோரத்தில் கொண்டு செல்வதற்கு சேவை வரிக்கு விலக்கு அளித்தால் மின் உற்பத்திச் செலவை நாங்கள் கட்டுக்குள் வைத்திருக்க முடியும். எனவே நிதி அமைச்சகம் அதற்காகக் கேட்டுக் கொள்ளப்பட வேண்டும்.

தமிழ்நாடு நான்கு எரிவாயு மின் உற்பத்தி நிலையங்களையும் சார்ந்து இருப்பதால், அவற்றை முழுத்திறனில் இயக்கப் போதுமான எரிவாயு விநியோகம் மற்றும் எரிவாயு வழங்கும் அமைப்பைக் கட்டி முடித்தல் ஆகியவை எங்களுக்குத் தேவைப்படுகிறது. இதற்காக தேவையான உத்தரவுகளைப் பிறப்பிக்குமாறு பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சரைக் கேட்டுக் கொள்ளப்பட வேண்டும்.

மத்திய தொகுப்பு கட்டுப்பாட்டைப் பராமரிக்க நீண்டகாலக் கொள்கை வகுக்கப் பட வேண்டும். மத்திய அரசின் அனுமதியுடன், தமிழ்நாடு ரூ.447.41 கோடி செலவில் 26 மாவட்டங்களில் ராஜீவ் காந்தி கிராம மின் இணைப்புத் திட்டத்தை மேற் கொண்டுள்ளதுடன், இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் 5.24 இலட்சம் வறுமைக்குக் கீழுள்ள வீடுகளுக்கு மின்சார இணைப்பு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் 3.40 இலட்சம் வீட்டு இணைப்புகள் ஏற்கெனவே அளிக்கப்பட்டு விட்டது. திட்டமிட்ட காலத்திற்குள் முன்பே மீதமுள்ள இணைப்புகளும் வழங்கப்பட்டு விடும். எனவே மீதமுள்ள மூன்று மாவட்டங் களுக்கும் இத்திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டும்.

**முதல் மாநிலமாகத் தமிழகம் விளங்கும்**

எங்களது மாநிலத்திற்கு ரூ.417 கோடி செலவில் மின்சார விநியோகம் மற்றும் சீர்திருத்த மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் அனைத்து 110 தகுதியுள்ள நகரங்களுக்கு விரிவான திட்ட அறிக்கைகளுக்கு ஏற்கெனவே அனுமதி பெறப்பட்டுள்ளது. இதற்காக அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்தத் திட்டத்தின் கீழ் முடிவுகளைக் காட்டி நிறைவேற்றும் முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்கும் என்று மத்திய அரசுக்கு உறுதி அளிக்கிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தை மறு கட்டமைப்பு செய்யும் பணியைப் பற்றி மத்திய அரசுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். நாங்கள் ஏற்கெனவே 15.6.2009 அன்று தமிழ்நாடு மின்கடத்திக் கழகத்தை சேர்த்துக் கொண்டுள்ளோம். அதுபோலவே விரைவில் மின் உற்பத்தி மற்றும் விநியோகம் மற்றும் த.நா.மி. வா. கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங் கள் ஆகியவையும் விரைவில் சேர்க்கப்பட்டு இந்த ஆண்டு இறுதிக்குள் செயல்பட வைக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ★

# தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி லிட்.

தாய்கோ வங்கி

TAICO BANK

தாளமுத்து நடராசன் மாளிகை, நெ.1, காந்தி இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.
தொலைபேசி எண் : 044–28411643 / 28547952 தொலை நகல் : 044 –28416456
மின்னஞ்சல் : taico@dataone.in taico@vsnl.net இணையதளம் : www.taicobank.com

தாய்கோ வங்கி – 46 ஆண்டுகளாக மக்கள் சேவையில்

சேமிப்பு திட்டங்களுக்கு இதர வணிக வங்கிகளை விட அதிக வட்டி வழங்குகிறது

- சேமிப்பு / நடப்பு கணக்கு
- வைப்புகளுக்கு காப்பீடு வசதி
- குறுகிய கால வைப்பு
- பாதுகாப்பு பெட்டக வசதி
- கணக்கு தொடர் வைப்பு
- ரொக்கச் சான்றிதழ்
- நீண்ட கால வைப்பு

மூத்த குடிமக்களுக்கு மேலும் 1% அதிக வட்டி

## தாய்கோ வங்கியின் கடன் திட்டங்கள்

### தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு

- காசுக்கடன்
- காலக்கடன்
- சரக்கீட்டுக்கடன்
- வங்கி உத்திரவாதம்
- நலிந்தோர்க்கு டாப்செட்கோ மற்றும் டாம்கோ மூலம் கடன்

### பண்ணை சாராக் கடன் திட்டங்கள்

- சிறுபோக்குவரத்து வாகனங்கள் வாங்க கடன்
- வீடு அடமானக்கடன்
- சிறுதொழில் மற்றும் குறுந்தொழில் முனைவோர்க்கு
- அதிக பற்றுக்கடன்
- காலக்கடன் மற்றும் நடைமுறை மூலதனக்கடன்
- நகைக்கடன்
- வீடுகட்டக் கடன்
- தேசிய சேமிப்பு பத்திரங்கள் / கிசான் விகாஸ் பத்திரங்கள் மீது கடன்

விரைவில் அறிமுகப்படுத்தவுள்ள புதிய கடன் திட்டங்கள் :
எஸ்.எம்.இ. ஸ்மார்ட் (SME Smart Scheme) மற்றும் எஸ்.எம்.இ.ஸ்மார்ட் பிளஸ் திட்டம்(SME Smart Plus Scheme) மூலமாக குறு மற்றும் குடிசைத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கும் கடன் வசதிகள்

புதியதாக திறக்கப்பட உள்ள கிளைகள் :
விழுப்புரம், இராமநாதபுரம், பெரம்பலூர், நாகப்பட்டினம், ஒட்டன்சத்திரம் மற்றும் தூத்துக்குடி

நிறைவான பாதுகாப்பும், உத்திரவாதமும் பெற **தாய்கோ வங்கியில்** முதலீடு செய்வீர்!

R.N.I. No.21446/70-Regn.No.TN/ARD/48/09-11
&WPP No.TN/PMG(CCR)518/ /09-11







தமிழரசு